# அரங்கம்
செய்திகள்
தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்








வார இதழ் – இலவசம்
www.arangamnews.com
வெள்ளி, ஆனி 15, 2018. இதழ் - 17


## ‘இந்துமத விவகார அமைச்சரும் துணை அமைச்சரும் பதவி விலக வேண்டும்’ -- ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை



இந்து மத விவகாரத்துறைக்கு வேற்று மதத்தைச் சேர்ந்தவர் ஒருவர் துணை அமைச்சராக நியமிக்கப்பட்ட விவகாரத்தில் இந்து மதவிவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் துணை அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று இதனைக் கண்டித்து கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இந்து மத விவகாரம் ஆகியவற்றுக்கான துணை அமைச்சராக ஜனாதிபதியினால் காதர் மஸ்தான் இந்த வார முற்பகுதியில் நியமிக்கபட்டார்.

இது தொடர்பில் பலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். இந்து விவகாரத்துக்கு மாற்று மதத்தைச் சேர்ந்தவர் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டமை மத உணர்வுகளை புண்படுத்தும் நடவடிக்கை என்று பல இந்துக்கள் குரல் கொடுத்துள்ளனர். அந்த வகையில் கொழும்பு வாழ் இந்துக்களால் கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்று பேரணியுடன் கூடிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பல மாகாணசபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள் சமூக முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொண்டனர்.

பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்தில் ஆரம்பமான எதிர்ப்பு ஊர்வலம், பம்பலப்பிட்டி இந்து மத விவகார அலுவலகத்தை சென்றடைந்து, அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதன்போது அங்கு கருத்து தெரிவித்தவர்கள், வேற்று மதத்தை சேர்ந்தவர் என்பதற்காக துணை அமைச்சரும், அப்படியான நியமனம் வழங்கப்பட்ட போது மௌனம் சாதித்ததற்காக அமைச்சரும் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

## ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை



காணமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்திய வழக்கில் குற்றங்காணப்பட்ட ஞானசார தேரருக்கு ஒருவருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -18 )







## பசறை தீயில் மூவர் பலி

பசறையில் வியாபார நிலையம் ஒன்றில் வியாழனன்று அதிகாலை ஏற்பட்ட தீயில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

தீ ஏற்பட்ட வேளையில் இவர்கள் மூவரும் வியாபார நிலையத்தின் பின் பகுதியில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் 62 வயது நிரம்பிய மல்லிகா, 61 வயது நிரம்பிய சித்ரா, 23 வயது நிரம்பிய கல்பனா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பசறை மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சந்திவெளி புதுப்பிள்ளையார் ஆலயத் தேரோட்டம்



மட்டக்களப்பு சந்திவெளி புதுப்பிள்ளையார் ஆலயத் தேரோட்டம் செவ்வாய்க்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. கடந்த 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமமான இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் புதன்கிழமை அதிகாலை வங்கக்கடலில் நடைபெற்றது.

## விபத்தில் தாய் மற்றும் குழந்தை பலி

நுகவெலவில் குருநாகல் - கண்டி பிரதான வீதியின் இடம்பெற்ற விபத்தில் தாய் மற்றும் குழந்தை உயிரிழந்துள்ளதுடன் தந்தை காயமடைந்துள்ளார்.

வொயாழனன்று (14) காலை 07.50 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தாய், தந்தை மற்றும் மகள் ஆகிய மூவரும் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மூவரும் கீழே விழுந்துள்ளனர்.

இதன்போது எதிர் திசையில் வந்த தனியார் பஸ் ஒன்றின் சக்கரத்தில் சிக்குண்ட மூன்று பேரும் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கந்தளாயில் யானைகள் அட்டகாசம்

திருகோணமலை கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துல் ஊற்று பகுதியில் காட்டு யானைகள் வீடு ஒன்றை சேதப்படுத்தியுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை (13) இரவு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதனால் வீட்டிலுள்ள தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணப் பொருட்களும் சேதத்திற்குள்ளாகி இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மே மாதமும் இப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இரண்டு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யானைகளின் தாக்குதல்களுக்கு உள்ளான வீட்டு உரிமையாளர்களுக்கு அரசினால் எந்தவிதமான நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லையெனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சில்வெஸ்டருக்கு சமாதான இடைத்தரகருக்கான கௌரவப் பட்டம்



மட்டக்களப்பு மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் (CHA) மாவட்ட அலுவலராக பணியாற்றிவந்த சொலமன் பசில் சில்வெஸ்டருக்கு சமாதான இடைத்தரகருக்கான கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு விபுலானந்தா இசை, நடனக் கல்லூரியில் கடந்த வாரத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யுத்தகாலத்தில் சமாதானத்தை வலியுறுத்தி, மூவினமக்களையும், குழுக்களையும் அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூகங்களை ஒருங்கிணைப்பதிலும் மனித நேய பணியிலும் ஈடுபட்டிருந்தமைக்காக இக்கௌரவப் பட்டம் வழங்கப்பட்டதுடன், புத்தகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இக்கௌரவப் பட்டத்தை லண்டன் எஸ்.ஓ.ஏ.எஸ் பல்கலைக் கழகம், பொசிரிவ் நெகரிவ், பாத் பல்கலைக்கழகம், இலங்கை சர்வசேத எச்சரிக்கை, வறுமை ஆராய்ச்சி நிலையம், மார்டீன் சத்துரற்றி ஆகிய நிறுவனங்கள் இணைந்து வழங்கியுள்ளன. இதற்கான அனுசரணையினை ஈஎஸ்.ஆர்.சி பொருளாதார மற்றும் சமூக ஆய்வுக்கான மன்றம், கலை மற்றும் மனிதாபிமான ஆய்வு மன்றம் ஆகியன வழங்கியுள்ளன.
இப் பட்டத்தினை லண்டன் எஸ்.ஓ.ஏ.எஸ். பல்கலைக்கழக அபிவிருத்திக் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் ஜொனததன் குட்கான்ட், பாத் பல்கலைக்கழகத்தின் சமூக மற்றும் அரசியல் விஞ்ஞான அலகின் கலாநிதி ஒலிவர் வால்ரன் ஆகியோர் வழங்கிவைத்தனர்.
இவ்வாய்வானது 2016 / 2017ம் ஆண்டில் இலங்கை, நேபாளம் ஆகிய இரு நாடுகளிலும் நடத்தப்பட்டு அதன் பிரகாரம் இக் கௌரவப் பட்டமானது வழங்கப்பட்டது.

யுத்தகாலத்தில் இவர் ஆற்றிய பணி மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. என்ற அடிப்படையில் இக் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

## கிழக்கு பல்கலைக்கழக மாணவி தூக்கிட்டு தற்கொலை !

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கல்வி பயின்றுவந்த காக்காச்சிவட்டையைச் சேர்ந்த மாணவி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

காத்தாக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா விவேகானந்த வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மண்டூர் காக்காச்சிவட்டை சேர்ந்த 22 வயதுடைய சங்கராதுரை பானுஜா என்ற மாணவியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்துள்ளார்.

நாவற்குடா பிரதேசத்தில் நண்பிகளுடன் வாடகை வீட்டில் தங்கியிருந்து கற்கும் இந்த மாணவி சம்பவ தினம் விரிவுரைக்காகச் சென்று சிறிது நேரத்தில் மீண்டும் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

நீண்ட நேரமாக சக நண்பியைக் காணாத மாணவிகள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோதே அவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

தனிப்பட்ட விடயம் காரணமாகவே இவர் தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அறியமுடிகிறது.

சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவில் சங்கிலி அறுப்பு

தலைக்கவசத்துடன் வந்த நபர் கடையின் உரிமையாளர் அணிந்திருந்த 5பவுண் தங்கச்சங்கிலியை அறுத்தெடுத்து மின்னல் வேகத்தில் மோட்டார்சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளார்.

அவர்கள் தப்பிச்சென்ற மோட்டார் சைக்கிள் விளக்குகளை அணைத்தவாறு முன்பின் இலக்கத்தகடுகளை வெள்ளைத்தாளினால் மூடியவண்ணம் சென்றதாகத்தெரிகிறது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம்(13) இரவு 8.45மணியளவில் சம்மாந்துறைப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட காரைதீவுப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவு 1 விபுலாந்ந்த வீதியலுள்ள விசுவலிங்கம் கோடீஸ்வரன்(வயது53) என்பவரின் பலசரக்குக்கடையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறைப்பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இப்னுஅசார் தலைமையிலான பொலிஸ் குழுவினர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து தடயங்களை அவதானித்து விசாரணைகளை மேற்கொண்டனர். நள்ளிரவு வரை விசாரணை தொடர்ந்தது.
(காரைதீவு நிருபர் சகா)

## இந்து மதவிவகாரத் துறைக்கு மாற்று மதத்தவர் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு கடும் கண்டனம்

வேற்று மதத்தவர் ஒருவரை இலங்கையின் இந்து மத விவகாரத்துறைக்கான துணை அமைச்சராக நியமித்ததை பிரித்தானிய சைவ (இந்து) கோயில்களின் ஒன்றியம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மதவிவகார துணை அமைச்சராக கே. காதர் மஸ்தான் என்பவர் நியமிக்கப்பட்டதை கண்டித்தே இந்த அமைப்பு இவ்வாறான கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய சைவ ஆலயங்களின் ஒன்றியத்தின் தலைவரான எம். கோபாலகிருஷ்ணன் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில், போருக்குப் பின்னரான நல்லிணக்க நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிடும் செயலாக இந்த நடவடிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நியமனத்தை மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகிரங்கக் கடிதம் இலங்கை ஜனாதிபதியை கோரியுள்ளது.

அமைச்சர் மனோ கணேசன் கண்டனம்

இந்த நடவடிக்கையை அமைச்சர் மனோ கணேசனும் வன்மையாக கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள முகநூல் குறிப்பு ஒன்றில், தமிழ் இந்துக்களை பலவீனப்படுத்த நினைக்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனை ஒரு குளறுபடியான நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள மனோ கணேசன், இப்படியாக தம்மைத்தாமே அவமானப்படுத்திக் கொள்வதற்காக தாம் இந்த அரசாங்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்களை காதர் மஸ்தான் ஏற்பதில் தனக்கு எந்தவிதமான மாற்றுக்கருத்தும் கிடையாது என்று கூறியுள்ள மனோ கணேசன், அப்படியாயின் இந்து மத விவகாரத்தை பிரித்து வேறு ஒருவருக்கு கொடுக்கும்படி கேட்டுள்ளார்.

'மதம் என்பது ஒரு உணர்வுபூர்வமான விடயம். இதில் அரசியல் விளையாட்டு கூடாது. அந்தந்த மத விவகாரங்கள் அந்தந்த மதத்தை சேர்ந்தவர்களிடம் இருப்பதே பொருத்தமானது' என்றும் அவர் கூறியுள்ளார்.



## கதிர்காமம் துப்பாக்கிச் சூடு : வாகனம் அடையாளம் காணப்பட்டது

கதிர்காமத்தில், கிரிவெஹர ரஜமகா விகாரையின் விகாராதிபதி கோபவக தம்மிந்த தேரர் உட்பட இரண்டு பௌத்த பிக்குகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, தப்பிச் சென்ற வாகனம் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

ஹொண்டா வெஸல் வகையைச் சேர்ந்த வாகனம் ஒன்றே துப்பாக்கிச் சூட்டின்போது பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த விகாராதிபதி கோபவக தம்மிந்த தேரரும் மற்றைய தேரரும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புதன் இரவு 11 மணியளவில் இந்த வாகனத்தில் வந்த இனந்தெரியாத மூன்று நபர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

விகாராதிபதியின் அடிவயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு காயம் ஏற்பட்டுள்ளதுடன், ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவரின் நிலை தற்போது மோசமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளராக முதலமைச்சர் செயலகத்திற்கு இரா.நெடுஞ்செழியன் நியமனம்



மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிய இரா.நெடுஞ்செழியன் கிழக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளராக கௌரவ முதலமைச்சர் செயலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் 1994 இல் இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட இவர் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, சமுர்த்தி அமைச்சு ஆகியவற்றில் கடமையாற்றி 2006 இல் இலங்கை திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டார்.

திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்ததில் 12 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த இவர், திட்டமிடல் சேவை விசேட தரத்திற்கான நேர்முகப் பரீட்சையை 2012 இல் பூர்த்திசெய்து விசேட தரத்தை எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 'கோழி, முட்டை, டின் மீன் மற்றும் கருவாடு இறக்குமதி தடை செய்யப்படும்'

கோழி இறைச்சி, முட்டை, டின்னில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் கருவாடு ஆகியவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தப் போவதாக மீன்பிடித்துறை அமைச்சர் விஜித் விஜய முனி கூறியுள்ளார்.

மீன்பிடி அமைச்சில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

உள்ளூர் உற்பத்தியாளர் மற்றும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்கிலேயே இதனை திட்டமிடுவதாக அமைச்சர் கூறினார். இதற்கான அமைச்சரவை பத்திரம் விரைவில் வரும் என்றும் அவர் கூறினார்.

## புல்லுமலை போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர்த் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு - பெரியபுல்லுமலையில் மக்களின் எதிர்ப்பினையும் மீறி அமைக்கப்படுகின்ற போத்தலில் அடைக்கப்படும் குடிநீர்த் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனை தடுக்கக் கோரியும் கடந்த செவ்வாய்க்கிழமை (12) மட்டக்களப்பில் எதிர்ப்புப் பேரணியும், ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

மாவட்டத்தின் பொது அமைப்புகள் மற்றும் புல்லுமலைப் பிரதேச பொது மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வார்ப்பாட்ட எதிர்ப்புப் பேரணியில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், கட்சி பேதமின்றிய அரசியற் பிரமுகர்கள், இளைஞர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயத்தில் இருந்து எதிர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு, மாவட்ட செயலகத்தை வந்தடைந்து, அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்று, பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரிடம் புல்லுமலை பிரதேச கமநல மற்றும் பொது அமைப்புகளினால் மகஜரும் கையளிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட அரசாங்க அதிபரினால் மக்களிடம் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட கிழக்கு இணைப்புக்கு எதிரானதல்ல, பொதுச்சின்னத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவே அழைப்பு - கிழக்கு தமிழர் ஒன்றியம்




'கிழக்குத் தமிழர் ஒன்றியம் கிழக்குக்கு மாத்திரமானதோ அல்லது வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிரானதொரு சக்தியோவல்ல. நாங்கள் வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் தான் தமிழர்களின் தீர்வென்பதனை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அது கிடைக்கப்பெறும் வரையில் கிழக்கு மாகாணத்தினை கிழக்கு மாகாணமாக வைத்துக் கொள்ள வேண்டும் அப்போதுதான் ஏதாவது நன்மையிருக்கும்' என்று கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்களான சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன் , செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு முகத்துவாரத்திலுள்ள சூழலியல் கற்கைகள் நிலைய மண்டபத்தில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் குறித்து நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

'கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் இருப்பையும் அரசியல் பலத்தையும் ஒற்றுமையாக நிரூபிக்கும் வகையில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு குடையின் கீழ், ஒரு பொதுச்சின்னத்தில் இணைந்து எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட ஒன்றிணைய வேண்டும். இல்லாவிட்டால் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி, கலாசார ரீதியில் கிழக்குத் தமிழ் மக்கள் பின்னடைவையே சந்திப்பார்கள். கிழக்குத் தமிழ் மக்களின் நலன் கருதி அனைத்து தமிழர் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்' என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஒன்றியத்தின் மாகாண இணைப்பாளர்களான சிரேஸ்டசட்டத்தரணி தட்சிணாமூர்த்தி சிவநாதன், செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன், மாவட்ட செயற்குழு தலைவர் பேராசிரியர் மா.செல்வராஜா, மாவட்ட செயற்குழு செயலாளர் பொறியியலாளர் வ.பரமகுருநாதன், கோரளைப்பற்று பிரதேசத் தலைவர் வ.சிவாகன், ஊடக இணைப்பாளர் த.ஈஸ்வரராஜா உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். இங்கு கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் நோக்கம் தொடர்பிலும் எதிர்காலத்தில் அவை முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது. அங்கு பேசிய சிரேஸ்ட சட்டத்தரணி த.சிவநாதன்,

கிழக்கு தமிழர்களின் அரசியல் பொருளாதார மற்றும் காணி உரிமை உட்பட சகலவழிகளிலும் தமிழர்களின் நிலமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் சிந்தித்து செயற்படாவிட்டால் எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளமுடியாது போய்விடும். ஒவ்வொரு கட்சியும் பிரிந்து நின்று வாக்குகளை சிதறடிப்பதன் மூலம் தமிழர்களின் அரசியல் பலம் இல்லாமல் போய்விடும் பேரம் பேசும் சக்தியை நாம் இழந்துவிடுவோம் என்றார். செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் பேசுகையில்,

தொடர்ச்சி... (பக்கம் -22 )

## 'பௌத்த சாசன அமைச்சராக ஒரு முஸ்லீமையோ, கிறிஸ்தவரையோ ஜனாதிபதி நியமிப்பாரா...?'



பௌத்த சாசன அமைச்சராக ஒரு முஸ்லீமையோ, கிறிஸ்தவரையோ ஜனாதிபதி நியமிக்க மாட்டார். அவ்வாறு இருக்கின்ற போது எவ்வாறு இந்து சமய விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஒரு முஸ்லீம் அமைச்சரை நியமித்திருக்கின்றார் என்ற பெரிய கேள்வி எழுந்திருக்கின்றது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இந்து விவகார பிரதி அமைச்சராக கௌரவ காதர் மஸ்தான் அவர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

'ஓரிரு நாட்களுக்கு முன்பு ஜனாதிபதி சில பிரதியமைச்சர்களை நியமித்திருக்கின்றார். அதில் இந்து விவகார பிரதியமைச்சராக ஒரு முஸ்லீம் ஒருவரை நியமித்திருப்பது மிகப் பெரும் அதிசயமாக இருக்கின்றது. அவர் ஏன் இவ்வாறு சிந்தித்தார் என்று நாங்கள் ஆச்சரியப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஒரு பௌத்த சாசன அமைச்சராக ஒரு முஸ்லீமையோ, கிறிஸ்தவரையோ ஜனாதிபதி நியமிக்க மாட்டார். அவ்வாறு இருக்கின்றபோது எவ்வாறு இந்து சமய விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஒரு முஸ்லீம் அமைச்சரை நியமித்திருக்கின்றார் என்ற பெரிய கேள்வி எழுந்திருக்கின்றது.

நாங்கள் ஒரு சிறந்த வேலைத்திட்டத்திற்காக அரசுக்கு இணக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில் அரசியலமைப்புச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். எமது உரிமைகளை நாங்கள் எழுதி எடுக்க வேண்டும். எமது பிரதேசங்களில் எமக்கான உரிமைகளை நாங்கள் பெற்றுக் கொண்டு அதனூடாக அபிவிருத்திகளைச் செய்ய வேண்டும். வடக்கு கிழக்கு பிரதேசங்கள் ஏனைய பிரதேசங்களை விட வித்தியாசமனது. தமிழ் மொழி, தமிழ் மக்களின் வாழ்வு, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாக்கக் கூடிய விதத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டக் கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்க விட வேண்டும் என்பதற்காகவே அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புகளை வழங்குகின்றோம்.

ஆனால் அவ்வாறு நாங்கள் ஒத்துழைத்துச் செயற்படுகின்ற போது ஜனாதிபதி மேற்கொள்கின்ற இவ்வாறான விடயங்கள் எங்களை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்குகின்றன. இவ்வாறு செயற்பட்டு இதன்மூலம் நாங்கள் அவரோடு சேர்ந்து வேலை செய்ய முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றாரா? என்ற கேள்வி எங்களுக்குள் எழுகின்றது.' என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களுக்குச் செய்தி சொல்லும் பணியில் கைகோர்ப்போம்



பத்திரிகையில் விளம்பரம் செய்வதன் மூலமான நன்மைகளை, பலன்களை உணர்ந்து எம்மை நாடத்தொடங்கியுள்ளன. பல பொது அமைப்புக்களும் எமக்கு தமது ஆதரவினை தரத்தொடங்கியிருக்கின்றன.

அரசியலில் சார்பு நிலையற்ற, மக்களின் நலனை மாத்திரம் முதன்மையாக கொண்ட எமது நிலைப்பாடு ஒருபுறம் அதற்கு காரணம்.

பத்திரிகை உலகின் ஒரு புதிய கலாச்ரமாக அல்லது போக்காக அல்லது வாசகர்களுக்கான ஊக்கப்படுத்தலாக அமையும் "இலவச விநியோகம்" என்ற சிந்தனை, அர்த்தம் உள்ள பாதையில் செல்ல வேண்டும் என்று "அரங்கம் செய்திகள்" பத்திரிகை நிறுவனம் கருதுகின்றது.

இதற்கமையவே இலங்கையில் ஒப்பீட்டளவில் ஒரு புதிய போக்காகக் கருதப்படும் இலவச

**விளப்பரங்களுக்கான சிறந்த தளமாக மாறிவரும் "அரங்கம் செய்திகள்" பத்திரிகை**

விநியோக கோட்பாட்டை இங்கு நாம் அமுல்படுத்த விளைகிறோம்.

இலங்கையில் குறிப்பாக தமிழ் பத்திரிகைகள் மத்தியில் வாசிப்பு மற்றும் விற்பனை ஆகியன குறைந்திருப்பதாக ஆய்வுகள் கூறும் நிலையில், எமது பத்திரிகை வாசகர்களை பெருமெடுப்பில் சென்ற அடைய வேண்டும் என்பதற்காக, நாம் இலவச விநியோகம் என்ற நடைமுறையை கடைப்பிடிக்கத் தொடங்கினோம்.

இது எமக்கு உண்மையில் வெற்றியையே தந்துள்ளது. கிழக்கிலும், கொழும்பு உட்பட எமது பத்திரிகை விநியோகிக்கப்படும் ஏனைய இடங்களிலும் அரங்கம் செய்திகள் பத்திரிகைக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதுடன், பெருமளவிலான வாசகர்களையும் எமது பத்திரிகை சென்றடையத் தொடங்கியுள்ளது.

உண்மையில் நாங்கள் திட்டமிட்ட காலத்துக்கு மிகவும் முன்னதாகவே, வேகமாக இது மக்கள் ஆதரவைப் பெறத்தொடங்கியுள்ளது.

**இலவசமாக ஆனால் கனதியாக செய்தி சொல்கிறது**

அரங்கம் செய்திகள் சென்றடையும் வீச்சும் பரப்பும் ஆழ அகலமாகவும் மிகவும் வேகமாகவும் இருக்கின்றன. இது நமக்கான பத்திரிகை என்ற உணர்வு மக்கள் மத்தியிலும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

வணிக நிறுவனங்களும் எமது

அதேவேளை எமது ஊடகம் மிகுந்த வீச்சுடன் மக்களை சென்றடைவதன் மூலம் வியாபார மற்றும் பொது நிறுவனங்கள் தமது விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை செய்வதற்கான ஒரு சிறந்த மேடையாக உருவெடுத்துள்ளது.

பல மதநிறுவனங்கள் ஆலயங்கள், திருச்சபைகள் கூட எமது பத்திரிகையை ஒரு விளம்பர அனுபந்த தளமாக பயன்படுத்த தொடங்கியுள்ளன.

எம்மை பொறுத்தவரை மக்களுக்கான உரிய செய்திகளை உகந்தபடி கொண்டு சேர்ப்பது மற்றும் அவர்களுக்கான விழிப்புணர்வு ஆகியன பொது நோக்கம்.

இதில் இணைந்துகொள்ளுமாறு பொது அமைப்புக்களுக்கும் விளம்பர நிறுவனங்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

அதிகளவில், மிகுந்த போட்டித்தன்மையுடன் மக்களை சென்றடையும் எமது அரங்கம் செய்திகள் பத்திரிகையை வணிக நிறுவனங்கள் தங்கள் விளம்பரங்களுக்கு பயன்படுத்தலாம், அதிக மக்களை சென்றடைவதுடன் எமது விளம்பரக் கட்டணங்களும் ஒப்பீட்டளவில் சகாயமானவை.

அதேபோல பொது நிறுவனங்கள் தமது விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கான தளமாக எமது பத்திரிகையை பயன்படுத்த, பக்கங்களுக்கான அனுசரணயை வழங்க முடியும்.

பக்க அனுசரணையோ அல்லது விளம்பரமோ எமக்கு நீங்கள் வழங்கும் கட்டணம் உங்களுக்கு மிகுந்த பலனை தரத்தொடங்கியுள்ளமை யதார்த்தமாக உணரப்படுகின்றது.

அதுவும் இலவசமாக மக்களைச் சென்றடையும் ஒரு மக்கள் ஊடகத்துக்கு இந்த நிதி போகிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

பொதுமக்கள் சேவையில் கைகோர்க்க அழைப்பு விடுக்கிறோம்.

பூபாலரட்ணம் சீவகன்

# ஏன் இந்த மௌனம்? அதன் எல்லை எது?

கருணாகரன்

சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி கேர்ணல் ரட்ணப்பிரிய பண்டுவுக்கு கிளிநொச்சியில் பெருந்திரளானோர் திரண்டு, உருக்கமான முறையில் பிரியாவிடை செய்த நிகழ்ச்சி இலங்கையைப் பரபரப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நாட்களில் சிங்கள, ஆங்கில ஊடகங்களில் ரட்ணப்பிரிய பண்டு ஹீரோ. அரசியல் வட்டாரங்கள் தொடக்கம், படை வட்டாரங்கள், கிராமங்கள் வரையில் எல்லா இடங்களிலும் ரட்ணப்பிரிய பண்டுவைப் பற்றிய பேச்சுகளே அடிபட்டுக்கொண்டிருக்கின்றன.

நாட்டின் தலைவர்களும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் ரட்ணப்பிரிய பண்டுவுடன் தொடர்பு கொண்டு நேரில் பாராட்டையும்

**ஒரு அலை ஓயமுதல் அடுத்த அலையை தலைக்கு மேலே உயர்த்தியிருக்கிறது அரசாங்கம்.**

வாழ்த்துகளையும் தெரிவித்திருப்பதாகத் தகவல்.

கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமின்றி ஒரு படை அதிகாரி புகழடைந்திருக்கிறார். அதுவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களால் பாராட்டப்பட்டவர் என்று. இதையெல்லாம் கவனிக்கும்போது,



அடுத்த தேர்தல்களில் ரட்ணப்பிரிய பண்டு களமிறக்கப்படலாம் என்று தோன்றுகிறது. அப்படிக் களமிறக்கப்பட்டால் நிச்சயமாக அவருடைய கைகளில் வெற்றிக் கனிதான்.

ஆனால், அதற்கு முன்பதாக அவர் இப்பொழுது யுத்தக்குற்றங்களுக்கான தடுப்பரணாக பயன்படுத்தப்படப்போகிறார். நிச்சயமாக ரட்ணப்பிரிய பண்டுவுக்கு தமிழர்களால் வழங்கப்பட்ட ஆதரவையும் ரட்ணப்பிரிய பண்டுவுடன் தமிழ்ச்சனங்கள் கொண்டுள்ள நெருக்கத்தையும் வெளிப்படுத்தும் வீடியோ ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் காண்பிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு. சிலவேளை ரட்ணப்பிரிய பண்டுவே மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நேரில் பங்கேற்கச் செல்லலாம். கூடவே அவரைப் பாராட்டிய சிலரும் அழைத்துச் செல்லப்படக் கூடும்.

தொடர்ச்சி... (பக்கம் -02 )

அரங்கம் செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
|---|---|
| ARANGAM 071 399 9091 070 300 9001 | ARANGAM arangamads@gmail.com 070 345 6800 071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE 077 180 1400 196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO 077 632 1079 63,ST ANTONIS LANE,BATTICALOA | |
| DINA ADVERTISING 077 712 0809 183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | SIVA 077 503 8997 077 721 7341 |
| ST.ANTONY 077 470 1373 MAIN STREET, VALAICHCHENAI | |
| TERRY 077 618 5 209 | S.K. RAMESH 077 360 0161 65,MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409
+44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK



# தமிழர் மண்ணில் இருந்து அழுதழுது வழியனுப்பப்பட்ட இராணுவ அதிகாரி

அமைச்சர் மனோகணேசனின் தனிப்பட்ட முகநூல் பக்கத்தில் இருந்து...



மூன்று வருடங்கள் இராணுவ சேவையை முடித்தவர்கள் இடமாற்றம் பெற வேண்டும் என்ற பின்னணியில், ஐந்து வருடங்கள் பணியில் இருந்துவிட்ட இவரது இடமாற்றத்தை, மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், சில மாதங்களுக்கு மாத்திரமே தாமதிக்க என்னால் முடிந்தது. இப்போது இரத்னப்ரிய இடமாற்றம் பெற்று தெற்கின் கம்பஹா மாவட்ட அம்பேபுஸவுக்கு போகிறார்.

இந்த நொடியில் என் மனதில்... (11/06/2018)

சற்று முன் கர்னல் பந்து இரத்னப்பிரியவுடன் பேசினேன். "ஐந்து வருடங்களாக, ஒரு கணமும் ஆயுதத்தை கையில் எடுக்காமல் பணி செய்தேன். மக்கள் மனங்களை வெல்ல முடிந்தது, சார். இனியும் பணி செய்ய காத்திருக்கேன், சார்" என்றார்.

இது பற்றி எனக்கு தெரியும் என்றேன். ஏனெனில் கடந்த சில மாதங்களுக்கு முன், கொழும்பில் என் அமைச்சுக்கு படையெடுத்து வந்து, என்னை சந்தித்த, பெருந்தொகை முன்னாள் போராளிகள் குழுவினர், இவரது இடமாற்றத்தை ரத்து செய்து தருமாறு மன்றாடி கண்ணீர் விட்டு அழுது கேட்டுக்கொண்டார்கள்.

நிற்க, இது இப்படியே இருக்க, பூதாகரமாக எழும் கேள்வி என்னவென்றால்,

இது எப்படி?? என்ன காரணம்?



மேற்கண்ட மற்றும் கீழ்வரும் கேள்விகள் வருகின்றனவா? இது கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்ட போக்கா (tendency)? அல்லது இப்போக்கு யாழ் குடாவையும் ஆட்கொண்டு வருகிறதா?

பலவற்றுக்கு என்னிடம் பதில்கள் அல்லது கருத்துகள் உள்ளன. அவைபற்றி இங்கு இப்போது சொல்ல வரவில்லை. சொன்னால்

## அழுதனுப்பும் அனைவரின் முகக்குறிப்புக்கள் கூறும் கதை என்ன?

வடக்கிலும், தெற்கிலும் இருக்கும் கோமாளிகள் சிலருக்கு கோபம் வரும்.

இதை எதிர்மறையாக பார்க்கலாமா? நேர்மறையாக பார்க்கலாமா? இத்தகையை உபசரிப்பு, "வெளிப்படையான" ஆதரவு, இன்று வடக்கில் அரசியல்வாதிகள் எவருக்கும் இருக்கிறதா? தெரியவில்லை.

அது ஒருபுறம் இருக்க, இன்று "சிங்கள இராணுவம்", "மங்கல இராணுவம்" (மங்கல, மங்கள இரண்டும் ஒரே பொருள் சொற்கள்) ஆகிறதா? இது நல்லதா? கெட்டதா?

மக்களுடன் கலந்து வாழ்ந்து மனங்களை வெல்ல, வடக்கின் தமிழ் தலைமைகள் தவறி

நடிகர்-வழி-அரசியலர் ரஜினிகாந்த், தெரிந்தோ, தெரியாமலோ தமிழகத்தை பற்றி சொன்னது போல, ஈழத்து வடக்கில் "சிஸ்டம்" சரியில்லையா? அல்லது ஒட்டுமொத்த "சிஸ்டமுமே" சரியில்லையா?

**விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட இறுதி மரியாதையோடு இதனை ஒப்பிட்டிருக்கிறார் ஒரு கிளிநொச்சி செய்தியாளர்**

# "முள்ளிவாய்க்கால் வரை சென்று திரும்பி வந்தார்கள். ஆனால் இவர்கள் திருந்தி வரவில்லை"

வேதநாயகம் தபேந்திரன்

துணுக்காயில் வசிக்கும் இடதுசாரி சிந்தனை செயற்பாடு உள்ள ஓய்வுபெற்ற. அரச உத்தியோகத்தர் ஒருவர் எனக்கு கூறிய வசனம் தான் இது.

அது உண்மையிலும் உண்மை. சமூக வலைத்தளங்கள் கழுவோ கழுவென்று கழுவி ஊத்துகின்ற படத்தைக் கண்டவுடன் எனக்கு அந்த வசனம் தான் ஞாபகத்திற்கு வந்தது.

குறித்த கிராமத்தை இழிவுபடுத்தும் பலருக்கு தெரியாது இது போல இன்னும் பல பிரதேசங்கள், வேறு பல சம்பவங்கள் இருக்கின்றன என்பது.

1995 ஒக்ரோபர் 30 மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர் தென்மராட்சியில் ஓர் பிரதேசத்தில் யாழ்ப்பாண மக்கள் பெருமளவில் ஏதிலிகளாக வசித்தனர்.

அப்போது அவர்கள் குடிநீர் அள்ளுவதற்கு மேட்டுக்குடி மக்களது கிணறுகளுக்கு சென்றுள்ளனர். அவர்கள் இவர்களை தண்ணீர் அள்ள விடாது தடுத்துள்ளனர்.

அவர்கள் 'தண்ணீர் மிக அத்தியாவசியமான ஒன்று அதை அள்ள தடுக்க வேண்டாம்' எனக் கேட்டுள்ளனர். ஆனால் காணி உரிமையாளர்களோ எள்ளளவும் மனச்சாட்சிப்படி நடக்கவில்லை.

அதனால் அவர்கள் அதை மீறி தண்ணீர் அள்ளி உள்ளனர். அடுத்த நாள் தண்ணீர்



அள்ளச் சென்ற போது நாய் ஒன்றை வெட்டி சாகப்பண்ணி தண்ணீரில் போட்டிருந்ததை கண்டு பதை பதைத்தனர்.

மனித மலம் கிணற்றுக்குள் போடப்பட்டு தண்ணீர் அள்ளத் தடுக்கும் நிகழ்வுகளும் அப்போது நடந்தன.

விடுதலைப்புலிகளின் முழுமையான ஆளுகைக்குள் யாழ்ப்பாணம் இருந்த காலம் அது. ஆனால் அவர்கள் இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவையான தண்ணீர் அள்ளும் உரிமை மறுக்கப்பட்டதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**சாதி அடிப்படையில் கோயில்கள் மாத்திரமல்ல தேவாலயங்களுந்தான்**

இன்றும் யாழ்ப்பாணத்தில் ரயர் வண்டிலில் இந்து தெய்வங்கள் உள்வீதி, வெளி வீதி சுற்றும் கோயில்கள் சில உள்ளன. ஆனால் அவை இன்னும் ஊடக வெளிச்சத்திற்கு வரவில்லை.

இந்து மதத்தினைக் காப்பாற்றப் போராடுவதாக கூறும் சிவசேனை மறவன்பிலவு சச்சிதானந்தம் போன்றோர் தமிழ் தேசியத்தின் தொடர் தோல்விகளுக்கு காலம் காலமாய் களம் அமைத்துக் கொடுக்கும் இந்துக் கோயில்களின் அடாவடி பக்தியின் பெயரால் நடத்தப்படும் நாகரீகமில்லாத செயல்கள் குறித்த வசதியான மௌனம் காக்கின்றனர்.

சகலரும் சமத்துவமாக ஆலயம் சென்று வழிபடும் உரிமை மறுக்கப்படும் சில ஆலயங்கள் இன்றும் உள்ளன.

திருமண மண்டபங்கள் கூட சகலருக்கும் நிகழ்வுகளுக்கு மறுக்கப்படும் நிலை சில இடங்களில் உள்ளன.

கோயில்களில் அன்னதானத்திற்கு சமைப்பது, அன்னதானம் பரிமாறுவது போன்றவற்றுக்கு

**வரணியில் ஒரு கோயிலில் தேரை ஜேசிபி இயந்திரம் கொண்டு இழுத்தமை குறித்த ஒரு கருத்து**

சகலருக்கும் அனுமதி வழங்காத கோயில்கள் இன்றும் இருக்கின்றன.
ஏன் இந்து மதத்தை மட்டும் தாக்க வேண்டும்?

மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு பக்கம் சென்று கிறிஸ்தோப்பர் வீடு எங்கே என்று கேட்டால் சென்ற் அன்ரனிஸா, சென்ஸ் ஜேம்ஸா எனத் தேவாலயப் பகுதியை கேட்பார்கள்.

அங்கும் சாதி அடிப்படையிலேயே தேவாலயங்கள் அமையப் பெற்றுள்ளன. தேவாலயங்கள் மட்டுமல்ல சவக்காலைகள் கூட சாதி அடிப்படையிலேயே ஒரு இடத்தில் இரண்டாக உள்ளன.

பிரிட்டிஸ்காரன் காலனி நாடாக எமது நாட்டை வைத்திருக்கும் போது கிறிஸ்தவ மதத்திற்கு மக்களை மாற்றிய போது கூட சாதி அடிப்படையில் ஒரே இடத்தில் இரண்டு தேவாலயங்களை சவக்காலைகளை உருவாக்கினார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏன் தோற்றது என இடைவிடாத ஆய்வுகள் தொடர்கிந்றன. விடை எம்முள் இருக்க வேறு எங்கோ தேடி ஏன் அலைவானேன்.

# மஹாகவியின் புதியதொருவீடு நாடகம் இம்மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் மட்/ தேவநாயகம் அரங்கில்

1960 களின் பிற் பகுதியில் ஈழத்துத் தமிழ் நாடக உலகில் புதிய நெறியொன்று உருவாகத் தொடங்கியது. இப்போக்கில் நெறியாளர்கள் பிரதானமானவர்கள் ஆனார்கள். பாரம்பரிய நாடகத்தின் சாரத்தையும் மேற்கத்தைய நாடக நெறிமுறைகளையும் இணைத்த இவ்வகை நாடகங்கள் மோடி நாடகங்கள் அல்லது ஒயிலாக்க நாடகங்கள் என அழைக்கப்பட்டன.

மஹாகவி இதனை தார்ஸீஸியஸின் ஆலோசனையுடம் ஒரு ஒயிலாக்க நாடகமாக பா வடிவில் 1970 களில் எழுதினார். பேச்சோசைப்பண்பு நிரம்பிய மஹாகவியின் கவி ஆற்றல் அவருக்கு இதில் மிக அழகாகக் கைகொடுத்தது. தமிழுக்கு இது ஓர் புது வரவும் ஆனது.

இந்நாடகத்தின் ஈழத்தின் வடபகுதிக் கரையோரக் கிராமமொன்றில் மீனவக் குடும்பமொன்றில் நடந்த சம்பவமும் அம்மனிதர்கள் அதனை எதிர்கொண்ட விதமும் காட்டப்படுகிறது. வடபகுதி மீனவர்களின் வாழ்வை 1970 களில் மஹாகவி எழுதினாலும் அவர்கள் உழைப்பும் வாழ்வும் சவால்களும் ஈழத்தின் கரையோரப்பகுதிகளில் கடலை நம்பி வாழும் அத்தனை மீனவர்களுக்கும் பொருந்தும்.





அக்குடும்பங்களுக்கிடையே எழும் உணர்வுகள் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், அவற்றை அவர்கள் எதிர்கொண்டு துணிவுடன் அவற்றைக்கடந்து செல்லும் ஓர்மம், மீனவக் குடும்பங்களையும் கடந்து அனைத்து மக்களுக்கும் பொதுவானது.

அனைத்து மக்கள் உணர்வுகளை அவர்கள் தம் வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் துன்பங்களை அவற்றை எதிர்த்து நிற்பதை கடந்து செல்வதை மயிலிட்டி கிராம நிகழ்வினூடாக மஹாகவி கொண்டு வருவதுதான் அவரது சிறப்பு.

பொதுமையான வாழ்க்கைப் போராட்டங்களை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினூடாகக் காணும் முயற்சி இது.

அண்டத்தில் நிகழ்வதைப் பிண்டத்தில் காட்டுவது போல. இந்நாடகத்தின் பாத்திரங்கள் அனைத்தும் வாழ்க்கையை வாழ்ந்து கடக்க நினைக்கும் பாத்திரங்கள். வாழும் ஆசைதான் வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் வாழும் உறுதியையும் தருகிறது

இந்நாடகத்தை நான் 1978 இல் யாழ் பல்கலைக்கழக மாணவர்களை வைத்துத் தயாரித்தேன்; அது முதலாம் தலைமுறை.

மீண்டும் 1989 இலும் யாழ் பல்கலைக்கழகதில் நானும் குழந்தை சன்முகலிங்கமும் இணைந்து மாணவர்களை வைத்துத் தயாரித்தோம்; அது இரண்டாம் தலைமுறை. 1993இல் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களை வைத்துத் தயாரித்தேன்; அது மூன்றாம் தலைமுறை.

இப்போது 2018 இல் மட்டக்களப்பின் பாடசாலை மாணவர்களை வைத்துத் தயாரிக்கிறேன். இது நான்காவது தலை முறை.

இம்முறை எனக்கு உதவியாளராக இருக்கிறார் ரமேஸ் அரவிந்த் எனும் இளைஞர், அவரே இதன் உதவி நெறியாளர், அவர் இதில் மாயனாக நடிக்கிறார்.

இதில்நடிக்கும் அதிகமான மாணவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் 14-17 வயதுக்குட்பட்டவர்களே. 11 ஆம் வகுப்புக்கு இந்நாடகம் பாட நூலாக இருக்கிறது.

இச்சிறுவயதில் இந்தப்பாத்திரங்களையும் காத்திரமான இதன் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ள விளையாட்டுப்புத்தியுடைய இம் மாணவர்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

தொலைக்காட்சி நாடகங்களிலும், மெகா சோக்களிலும் மூன்றாம்தரச், சினிமா நடிப்புகளிலும் மூழ்கிக் கிடந்தவர்களை அவற்றிலிருந்து மீட்கவேண்டியிருந்தது.

அதன் பெறுபேற்றை மேடையில் நீங்கள் காணலாம். ஒருவகையில் இந்நாடகம் இம்முறை எனக்கு ஒரு பெரு சவாலாகவே அமைந்தது. சவாலை எதிர்கொண்டு வென்றேனா என்பதை மேடையில்தான் பார்க்கவேண்டும்.

இந்நாடகம் இம்மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் மேடையேற இருக்கிறது. இரண்டு நாட்களும் காலையும் மாலையும் காட்சிகள் இடம்பெறும். ஒன்றரை மணி நேரம் நாடகம் நடைபெறும் காட்சிகள் ஆரம்பமாகுமுன் கதவுகள் மூடப்படும்.

அன்புடன்
சி.மௌனகுரு

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–04 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 த | ங் | 2 க | ம் | | 3 வா | 4 கை |
| ந் | | ல் | | 5 ம் | க | கா |
| 6 தி | 7 ரு | வி | ளை | யா | ட | ல் |
| 8 ர | தி | | | 9 பா | ம் | வ |
| 10 ம் | ம | 11 த | 12 ம் | ச | | லி |
| | 13 தி | ங் | க | | 14 அ | ப் |
| 15 பூ | | 16 கை | ந | | 17 லி | பு |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:-

01. துஷரிகா
(ஜெயந்தி புரம் மட்டக்களப்பு)

02. எஸ்.கரிகாலன்
(குருமன் காடு வவுனியா)

03. க.புண்ணிய நேசன்
(காரைதீவு)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

## அணு ஆயுதங்களை கைவிடும் வரை வடகொரியா மீதான தடை தொடரும்



முழுமையாக அணு ஆயுதங்களை கைவிடாமல், வட கொரியா மீதான பொருளாதார தடைகள் நீக்கப்படமாட்டாது என அமெரிக்கா வெளியுறவுத்துறை செயலர் மைக் பாம்பேயோ தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

அணு திட்டங்களை கைவிட வட கொரியா ஒப்புக் கொண்டுள்ளதையும் மைக் குறிப்பிட்டார்.

கிம் ஜாங்-உன் அணு ஆயுதங்களை கைவிடுவதற்கான அவசரத்தை புரிந்து கொள்வார் என்று நம்புவதாக தெரிவித்த அவர், 2020ஆம் ஆண்டிற்குள் வட கொரியா மிக பெரிய அளவில் ராணுவ நடவடிக்கைகளையும், ஆயுதங்களையும் குறைத்துக் கொள்ளும் என்று நம்புவதாகவும் கூறினார்.



# அபூர்வப் பிறவிகள் : தமிழ்நாடு ஸ்ரீரீவைகுண்டம் கோட்டைப்பிள்ளைமார்

ஊடகங்களில் சமகாலத்தில் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் தூத்துக்குடி இன்று மட்டுமல்ல, சுதந்திர போராட்ட காலத்திலும் பிரசித்திபெற்று விளங்கியது. அங்குதான் ஒட்டப்பிடாரம் என்ற இடத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்பிள்ளை பிறந்தார். இந்திய சுதந்திரத்திற்காக போராடியதுடன் சுதேசி கப்பலை ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக செலுத்தினார்.

பாளையங்கோட்டை சிறையில் வாடினார். செக்கிழுத்தார். அடிபட்டார். அவ்வாறு இரத்தம் சிந்தி சுதந்திரம் பெற்றுக்கொடுத்தவரின் மண்ணில் இன்று என்ன நடக்கிறது?

எனது அப்பாவின் பூர்வீகம் பாளையங் கோட்டை. அவரது உறவினர்கள் அங்கும் திருநெல்வேலி, மதுரை, சாத்தூர், தூத்துக்குடி, ஸ்ரீரீவைகுண்டம், சென்னை ஆகிய நகரங்களிலும் வசிக்கிறார்கள். அவர்களைத்தேடி 1984 இல் அங்கெல்லாம் பயணித்தேன். தூத்துக்குடி துறைமுகத்திற்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் பெயர்தான் சூட்டப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் தொழில் நுட்பக்கல்லூரியில் எனது அப்பாவின் அக்கா மகன் சந்திரசேகரன் பணியிலிருந்தவேளையில் 1984 இல் சென்றிருக்கின்றேன். சாத்தூரிலிருந்த அவரது அண்ணன், ஆண்டபெருமாள் என்னை அங்கு அழைத்துச்சென்றார். சந்திரசேகரன் மச்சான் தனது குடும்பத்தினரையும் நான் பார்க்கவேண்டும் என்று அவரும் அங்கே அழைத்துச்சென்றார்.

**கோட்டையை விட்டு வெளியே வராத பெண்கள் அடங்கிய கூட்டம் இந்த நூற்றாண்டிலும் தமிழகத்தில்..**

அவர்களின் வீட்டில் மொட்டை மாடியிலிருந்து பேசிக்கொண்டிருந்தபோது, வெளியே எட்டிப்பார்த்தேன். ஸ்ரீரீவைகுண்டத்தின் கோயில் கோபுரமும் அந்த ஊரும் அழகாக காட்சியளித்தன.

அவற்றை ரஸனையுணர்வுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது, ஓரிடத்தில் எனது பார்வை நிலைகுத்தியது! கோட்டை போன்ற தோற்றத்துடன் சுற்றிலும் மதிலால் சூழ்ந்த ஒரு மக்கள் குடியிருப்பு தென்பட்டது. சந்திரசேகரன் மச்சான் பல சுவாரஸ்யமான கதைகளை சொன்னார். எப்பொழுதும் தேடல் மனப்பான்மையுடன் வாழும் எனக்கு, அவர் சொன்ன கதைகளினால் அதனை நேரில் சென்று பார்க்கவிரும்பும் எனது எண்ணத்தைச் சொன்னேன்.

“ வேண்டாம் மாப்பிள்ளை. அங்கெல்லாம் நாம் போகமுடியாது, போகவும் கூடாது. எங்களைப்பார்க்க வந்த இடத்தில் உங்களுக்கேன் விபரீத ஆசை?“ என்றார்.

“ மச்சான், பத்திரிகையாளனாகவும் இருக்கின்றேன். நேரில் சென்று பார்த்தால், புதிதாக ஏதும் எழுதமுடியும்“ என்றேன். அவர் அழைத்துச்செல்ல மறுத்தேவிட்டார். அதனால் அந்தக்கோட்டையையோ, அதனுள் வாழும் மனிதர்களையோ பார்க்கும் ஆசை நிறைவேறவில்லை. அந்தக்கோட்டைக்குள் வசிப்பவர்களை “கோட்டை வீட்டுப்பிள்ளைமார்“ என அழைக்கிறார்கள். இவர்கள் அந்த ஸ்ரீரீவைகுண்டத்தில் வெளியுலக பரிச்சியம் அற்ற தனித்துவமான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டவர்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர், இந்தப்பிள்ளைமார் சமூகத்தினரின் மூதாதையர்கள் காஸ்மீரில் வாழ்ந்ததாகவும் அவர்களில் பலர் அமைச்சர்களாகவும் அமைச்சு அதிகாரிகளாகவும் இருந்துள்ளனர் எனவும் அறியமுடிந்தது.

இவர்கள் ஸ்ரீரீவைகுண்டம் வந்து எவ்வாறு தமக்கென ஒரு கோட்டை அமைத்துக்கொண்டார்கள், இவர்களின் வரலாற்றுப் பின்னணி குறித்தெல்லாம் மச்சானிடம் ஓரளவு கேட்டுத்தெரிந்துகொண்டேன்.

எனினும் அந்தப்பயணத்தில் எந்தவொரு கோட்டைப்பிள்ளைமாரையும் சந்தித்துப்பேசுவதற்கான வாய்ப்பினை தருவதற்கு அந்த மச்சான் மறுத்துவிட்டார். மனிதன் சந்திரனிலும் கால் பதித்துவிட்டான். செவ்வாய்கிரகத்திற்கும் செல்லத்தயாராகின்றான். ஆனால், அந்த கோட்டை வாசிகள் வெளியே வராமல் எப்படி இந்த உலகத்தை தெரிந்து கொள்ளப்போகிறார்கள்? என்ற கவலை என்னை நீண்ட நாட்கள் அரித்துக்கொண்டிருந்தது.

நான் ஸ்ரீரீவைகுண்டம் சென்றது 1984 ஆம் ஆண்டில். அதன் பின்னர், 1985 இல் மாஸ்கோவில் நடந்த அனைத்துலக இளைஞர், மாணவர் விழாவுக்குச் சென்றிருந்தபோது, அங்கு முன்னேற்றப் பதிப்பகத்தில் (ீசழபசநளளைநீரடிடைளைநசள) நான் சந்தித்த தமிழ் அபிமானி கலாநிதி விதாலி பூர்ணிக்கா, தான் ருஷ்ய மொழியில் எழுதியிருந்த ஒரு நூலை எனக்கு பரிசளித்தார்.“ எனக்கு அந்த மொழிதெரியாது“ என்றேன்.

“ கவலையை விடுங்கள் தோழரே! விரைவில் இந்தப்புத்தகம் தமிழிலும் வெளியாகவிருக்கிறது. வந்ததும் கிடைக்கச் செய்கின்றேன்“ எனச்சொன்னவர், அதன் உள்ளடக்கம் குறித்தும் சொன்னார்.




அவரது வாயிலிருந்து ஸ்ரீரீவைகுண்டம் உதிர்ந்தது! அவரும் கோட்டைப்பிள்ளைமார் பற்றி சொல்லத் தொடங்கினார். அதன்பின்னர் அந்த கோட்டையின் ரிஷிமூலம், நதிமூலம் ஆராயும் எண்ணமும் என்னிடமிருந்து மறைந்துவிட்டது.

1987 இல் அவுஸ்திரேலியா வந்துவிட்டேன். வித்தாலி ஃபூர்ணிக்கா எழுதிய அந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு “ பிறப்பு முதல் இறப்புவரை“. ( மொழிபெயர்த்தவர் நா. (முகம்மது செரீபு) அதனை சென்னை நியூ செஞ்சுரி புக்ஸ் பதிப்பகம் வெளியிட்டது. நண்பர் கே. கணேஷ் இலங்கையில் கண்டி தலாத்து ஓயாவிலிருந்து தபாலில் அனுப்பியிருந்தார். மாஸ்கோவில் முகம்மது செரீபு அவர்களுடனும் தொலைபேசியில் பேசியிருக்கின்றேன். பல சோவியத் இலக்கியங்களை தமிழுக்கு வரவாக்கியவர்.


வ.உ.சிதம்பரப்பிள்ளை


அந்தக் கோட்டைப்பிள்ளைமாரின் கதையை விதாலி ஃபூர்ணிக்கா எப்படித்தான் தேடி எடுத்தாரோ தெரியவில்லை. 1940 இல் உக்ரேயினில் சாதாரண விவசாயக்குடும்பத்தில் பிறந்து ஒரு கட்டிடத்தொழிலாளியானவர். உக்ரேயினில் ஒரு புத்தகக்கடையில் மகாகவி பாரதியின் கவிதைகளின் ருஷ்ய மொழிபெயர்ப்பை படித்துவிட்டு, தானும் தமிழ்படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழகம் வந்து அறிஞர் மு.வரதராசனிடம் தமிழ் கற்றவர். வித்தாலி ஃபூர்ணிக்காவின் அந்த நூல் கிடைத்தமையால் அந்த கோட்டைப்பிள்ளைமார் பற்றி மேலும் அறியமுடிந்தது. காஷ்மீரத்தில் அரசவையில் வாழ்ந்த அந்த குடிமக்களின் மூதாதையர்கள், பாண்டிய நாட்டின் அரண்மனையில் சேவையாற்ற அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பாண்டிய மன்னனுக்கும் தென்னவராயனுக்கும் இடையே போர் மூண்டபோது, அந்த மக்களுக்கும் ஆபத்து வந்துள்ளது. ஆனால், எத்தகைய நெருக்கடிகளை சந்திக்கவும் கூட்டுச்சாவினை ஏற்கவும் அவர்கள் தயார் நிலையிலிருந்தபோது, புதிய மன்னன் பராக்கிரமன் அவர்களுக்கு அடைக்களம் தருவதற்கு முன்வந்திருக்கின்றான்.

மதுரையை அடுத்து, ஐந்து ஹெக்டயர் நிலமும் முன்னூறு வீடுகளும் தருவதாக வாக்குறுதி அளித்து, அவர்களை குடியமர்த்திய இடம்தான் அந்த கோட்டைப்பிரதேசம்! ஸ்ரீரீவைகுண்டத்தில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் பற்றி வெளியே வாழ்ந்தவர்களிடம் கதை கேட்டிருக்கிறார் அந்த சோவியத் அறிஞர்.

அதில் அதிர்ச்சியான கதையொன்றும் இருக்கிறது. ஸ்ரீரீவைகுண்டம் கோயிலின் திருவிழாவின்போது அதனைப்பார்ப்பதற்காக ஒரு இளம்பெண் அந்த கோட்டை மதில் சுவரில் ஏறி எட்டிப்பார்த்திருக்கிறாள். அதனால், அவளைத் தண்டித்த அந்த பிற்போக்குச்சமூகம் அவளை தீயிட்டுகொளுத்தியிருக்கிறது! ஏனையவர்களுக்கு இச்சம்பவம் ஒரு பாடமாகப் புகட்டப்பட்டிருக்கிறது.

அந்தக்கோட்டைக்குள்ளிருந்த ஆண்களுக்கு மாத்திரமே வெளியே சென்றுவருவதற்கு அனுமதி இருந்திருக்கிறது. பெண்கள் கோட்டையை தாண்டிச்செல்ல முடியாமல் அடைபட்டு வாழ்ந்திருக்கிறார்கள். அவ்வாறு வாழ்ந்தாலும், ஆண்கள் வெளியே சென்ற பின்னர்தான் பெண்கள் நேருக்கு நேர் சந்தித்துப் பேசிக்கொண்டனர். அவர்களிடையே நடந்திருக்கும் திருமணங்களும் பேராச்சரியம் தருபவை. அந்தக்கோட்டைக்குள் வாழும் பெண்ணுக்கு மணமகன் கிடைக்கவில்லையென்றால் அவளது மூத்த சகோதரியின் கணவனுக்கே இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். டீல ழநெ பநவ ழநெ என்ற இந்தத் திருமண நடைமுறை அந்த மாப்பிள்ளை மாருக்கு கொண்டாட்டமா? திண்டாட்டமா? என்பதுதான் தெரியவில்லை! பெண்கள் கர்ப்பம் தரித்தாலும் வெளியே சென்று மருத்துவம் பார்க்கமுடியாது. அவர்கள் மத்தியிலேயே பெண் மருத்துவச்சி இருப்பாள். வெளியே இருக்கும் ஆண் மருத்துவர்கள் அங்கு வரவே முடியாது?

அந்தக்கோட்டைக்குள் அவ்வாறு புனிதம் போற்றப்பட்டிருந்தாலும் 1973 இல் அங்கு ஒரு கொலைச்சம்பவம் நடந்திருக்கிறது. அதற்கான காரணங்கள் தெரியவில்லையாம். பொலிஸாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லையாம்! அதனையடுத்து சில குடும்பங்கள் வெளியேறியிருக்கின்றன. அதில் ஒரு மூதாட்டி வெளியே செல்லும் பஸ்வண்டிகளை கண்டுவிட்டு அதிர்ச்சியினால் நினைவிழந்திருக்கிறாள். எப்படி இருக்கிறது கதை?


Late.Dr.Vithali Furnika

முருகபூபதி – அவுஸ்திரேலியா

வாகனங்களையே வாழ்க்கையில் கண்டிராத பெண்கள் அந்தக்கோட்டைக்குள் எப்படி வாழ்ந்திருப்பார்கள்? என்பதை இதுவரையில் எவரும் கண்டுபிடித்து எழுதவில்லை.18-19-20ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இப்படியும் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தியை சோவியத் அறிஞர்தான் களஆய்வு செய்து பதிவுசெய்துள்ளார்.

சுஜாதாவும் கணையாழி இதழின் கடைசிப்பக்கத்தில் ஸ்ரீரீவைகுண்டம் கோட்டைப்பிள்ளைமார் பற்றி எழுதியுள்ளார். தமிழக படைப்பாளிகள் இந்த கோட்டையை தரிசித்தால், அற்புதமான நாவல் ஒன்று எழுதமுடியும் என்ற சாரப்பட சுஜாதா எழுதியிருந்தார்.

தமிழ் இயக்குநர்கள், திரைப்பட கதாசிரியர்களின் கண்களுக்கு இதுவரையில் தென்படாத அந்தக்கோட்டையும் அந்த மாந்தரும் சோவியத்தின் உக்ரேயினிலிருந்து சென்றிருக்கும் விதாலி பூர்ணிக்காவுக்கு தெரிந்திருக்கிறது. இணையம் உலகை சுருங்க வைத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில், மாந்தர்களை கோட்டைக்குள் சுருங்க வைத்த அந்தக்கால காஸ்மீரத்து சந்ததியினர் நினைவுக்கு வருகிறார்கள்.




# இலங்கை (யில்) தமிழர்கள் -- பகுதி 2

( இலங்கைத் தமிழர் மற்றும் மலையகத் தமிழர் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை கடந்த பகுதியில் பார்த்தோம். இனி அடுத்த பகுதி)

இரண்டு வகை தமிழர்களிலும் தமிழ் எழுத்து மொழி ஒன்றாகவும் (Language in written form) தமிழ்ப்பேச்சு மொழி (colloquial language) வேறாகவும் அமைவது குறிப்பாக அவதானிக்கப்படவேண்டிய ஒன்று. இந்த இரண்டு வகையிலான தமிழ்மொழியும் சந்திக்கும் புள்ளியாக "ஈழத்து தமிழ் இலக்கியம்" அமைவது சிறப்பு. "மலையகத் தமிழ் இலக்கியம்" இன்று ஈழத்து தமிழ் இலக்கியத்தின் ஒரு கூறாகப் பார்க்கும் நிலை தோன்றியுள்ளது.

பெரும்பான்மை சிங்கள மக்களை பொறுத்தவரையில் கற்றறிந்த புலமையாளர்கள் தவிர ஏனையோருக்கு 'எல்லாத் தமிழர்களும்' ஒன்றுதான். "எல்லாத் தமிழும்" ஒன்றுதான்.

தமிழ் சமூகத்தைப் போன்றே (அது இலங்கைத் தமிழராக இருந்தால் என்ன? மலையகத் தமிழராக இருந்தால் என்ன?) சிங்கள சமூகமும் சாதிய நிலைப்பட்டது அல்லது சாதியக் கட்டமைப்பைக் கொண்டது என்ற அடிப்படையில் இந்த இரண்டு வகை தமிழ் மக்களையும் சாதிய அடிப்படையில் தமக்கேற்றவாறு விளங்கி வைத்துக்கொண்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் இலங்கைத் தமிழர்கள் உயர்ந்த சாதியினர் என்றும் இந்திய தமிழர்கள் (மலையகத் தமிழர்கள்) தாழ்ந்த சாதியினர் என்பதாகவும் சிங்கள சமூகம் விளங்கிக்கொண்டுள்ளது. இதற்கு இலங்கைத் தமிழர்களின் மனோபாவமும் உந்துதல் அளித்துள்ளது.

இது சிங்கள சாதிய எண்ணப்பாட்டின் தலைகீழ் வடிவம். சிங்கள மக்களைப் பொறுத்தவரை "உடரட்ட சிங்களவர்கள்" (மலைநாட்டு சிங்களவர்கள்) உயர் சாதியினர், "பஹத்தரட்ட சிங்களவர்கள்" (தாழ்நாட்டு சிங்களவர்கள்) குறைந்த சாதியினர் என்பதாகும்.

இந்த சாதியம் பற்றிய பார்வை தனியானதும் விரிவானதுமான ஆய்வுக்கு உட்பட வேண்டியது. இங்கே இலங்கை தமிழர்கள் பற்றிய சிங்கள மக்களின் புரிதலை விளக்குவதற்காக சுருக்கமாக பார்க்கப்பட்டுள்ளது.

"மொழி" அடிப்படை வேறுபாடு ஒன்று இலங்கைத் தமிழருக்கும் மலையகத் தமிழருக்கும் இடையே உண்டு என்பது சிங்கள மக்கள் மத்தியில் கவனத்துக்குட்பட்ட விடயமல்ல. அது முற்போக்கு சிங்களவர் மத்தியில் "தமில ஜனத்தாவ" (தமிழ் மக்கள்) அல்லது "திரவிட ஜனத்தாவ" (திராவிட மக்கள்) என்ற பதமும் இனத்துவ பார்வையில் "தெமளுன்" என தமிழ் மக்கள் எல்லோரையும் சுட்டும் நிலையும் காணப்படுகிறது. சிங்கள மக்களில் இன்னுமொரு சாரார் இலங்கைத் தமிழர்களை "யாப்பண தெமல கட்டிய" (யாழ்ப்பாணத் தமிழர்கள்) என்றும், மலையகத் தமிழர்

களை "வத்துக்கர தெமல கட்டிய" (தோட்டபுற தமிழர்கள்) என்றும் விளங்கி வைத்துள்ளனர்.

எது எவ்வாறெனினும் "தமிழ்" மொழி என்ற அடிப்படையில் ஒன்றாக வைத்து நோக்கப்படும் இலங்கைத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் "தமிழீழம்" என்ற தனிநாட்டு கோரிக்கையின்பாற்பட்ட யுத்தத்தில் ஒரே துயரத்துக்கு உள்ளானார்கள் என்பது ஏற்றுக்கொண்டாகவேண்டியவொன்று.

இலங்கை தமிழர்கள் தாங்கள் இலங்கையிலிருந்து பிரிந்து செல்ல எந்த அளவுக்கு தடை இருக்கிறதோ அதேயளவு தடை மலையகத் தமிழர்கள் தங்களை இலங்கையராக ஆக்கிக் கொள்வதிலும் உள்ளது.

இனி இலங்கைத் தமிழர் மற்றும் மலையக தமிழர் பற்றிய உள்ளடக்கத்தைப் பற்றி அட்டவணையொன்றின் உதவியுடன் பார்க்கலாம்.

வரப்படுகின்றனர். எனவே மலையகமக்கள் இலங்கையில் முதலாவதாக கால் பதித்த இடம் "வடக்கின் மன்னார்". இந்தியாவின் தொப்புள் கொடி வெட்டப்பட்ட இடம் என்றும் சொல்லலாம்.

அதேபோல ஸ்ரீமா-சாஸ்திரி உடன்படிக்கை அடிப்படையில் மலையக மக்களின் இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும்போது மன்னார் ஊடாகவே (ரயிலில்) தென்னிந்திய மண்டபத்திற்கு கப்பலில் (இராமானுஜம்) அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த பதிவுகளை மன்னார் பிரதேசம் சார் இலக்கியங்களில் பார்க்கலாம். (நாவண்ணன் கவிதைகள் முதல் ஏ.எஸ்.உதயணின் நாவல்கள் வரை) மன்னார் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் எப்போதும் முறுகல் இல்லா ஒரு ஆத்மீக உறவுநிலை இருப்பதற்கு இந்த இடைத்தங்கல் உறவும் (வசயளெவை) ஒரு காரணமாக இருக்கலாம்.

மலையகத்தில் திருமணம் முடித்தனர் குடும்பத்தை அமைத்தனர். (உதாரணம்: பாடகர் (சிலோன்) ஏ.இ.மனோகரனின் தந்தையார்)

3. மலையகப் பெருந்தோட்டங்களில் உத்தியோகத்தர்களாக கடமையாற்ற இலங்கைத் தமிழர்கள் மலையகத்தக்கு வந்து சேர்ந்தனர். தென்னை, பனை மரத் தோப்பு நிறைந்த பிரதேசத்தில், வெப்ப காலநிலை பிரதேசங்களில் இருந்து வந்து குளிர் பிரதேங்களில் தேயிலை தொழில்துறையே தெரியாமல் தேயிலைத் தோட்ட மேற்பார்வையாளர்களாக, தொழிற்சாலை உத்தியோகத்தர்களாக, குமாஸ்த்தா உத்தியோகத்தர்களாக என பதவியிலமர்ந்தனர். இதற்கு சிங்கள மக்களுக்கு முதலாளித்துவ பெருந்தோட்டங்கள் மீது இருந்த வெறுப்பும் (அவர்கள் கிராமிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள்) இந்தியாவில் இருந்து வந்த தமிழ் மக்களின் கல்விநிலையும் ஒரு காரணமாயிற்று. இன்று கூட இலங்கைத் தமிழர்கள் தோட்ட உத்தியோகத்தர் வழிவந்தவர்களாக உள்ளனர். இதில் தோட்ட வைத்தியர்களும் அடங்கும். (உ+ம் ஞானம் கலை, இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர; - திரு. தி.ஞானசேகரன் ஒரு தோட்ட மருத்துவ அதிகாரியாக பணியாற்றிய இலங்கைத்தமிழர் emo- estate medical officer)

| | இலங்கைத் தமிழர்கள் | மலையகத் தமிழர்கள் |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணத் தமிழர்கள் - இதில்வடமராட்சி, தென்மராட்சி "தீவு" போன்ற உபபகுதிகளும் அடங்கும். (தீபகற்ப அடிப்படை) | தோட்ட தொழிலாளர்கள் – இதில்தோட்டத்தொழிலாளர்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும்அடங்கும். |
| 2 | வன்னித் தமிழ் மக்கள் - இதில்மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா மாவட்டமக்கள் அடங்குவர். மீன்பிடி, விவாசாய உழைக்கும் வர்க்கம்இதில் அதிகம் இடம்பெறுவர். | தோட்ட சேவையாளர்கள் - இதில்தோட்ட மேற்பார்வையாளர்கள், தோட்ட நிரவாகத்தில்பங்குகொள்வோர் அவர்களில் தங்கிவாழ்வோர் அடங்குவர். |
| 3 | மட்டக்களப்பு தமிழ் மக்கள் - கிழக்கு மாகாணத்தின் (கீழ்) தென்பகுதியை ஒட்டி வாழ்பவர்கள். | தோட்டங்களை அண்டிய நகரங்கள்அந்த நகர சூழலில் வாழும்வர்த்தகர்கள், நடுத்தர வர்க்கத்தினர். |
| 4 | திருகோணமலைத் தமிழ் மக்கள் - கிழக்கு மாகாணத்தின் (மேல்) வட பகுதியை சார்ந்துவாழ்பவர்கள். | பரவலாக தோட்டத்துக்கு உள்ளேயும்வெளியேயும வாழும்; ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், தனியார்துறைஊழியர்கள் என்போர் |

இந்த உள்ளடக்கப்பட்டியலில் வரிசைப்படுத்துபவர்கள் அடிப்படையில் பார்க்கின்றபோது இலங்கை தமிழர் உள்ளடக்கத்தில் அவர்கள் வாழும் 'பிரதேசங்களும்' மலையகத் தமிழர்களின் உள்ளடக்கத்தில் அவர்களின் "வர்க்கநிலையும்" அடிநாதமாக அமைந்துள்ளமையை மிக முக்கியமாக அவதானிக்கப்படவேண்டியது.



இந்த நிலையில் இரண்டு வகை தமிழர்களுக்குமான வேறுபாடுகள், உள்ளகக் கட்டமைப்பு போன்றே இடைத் தொடர்பு பற்றி பார்ப்பதுவும் முக்கியத்துவம் பெறுகிறது. இது கால அடிப்படையில் நிகழ்கிறது.

1. மலையக தமிழர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட காலப்பகுதியில் இந்தியாவின் மண்டபம் பகுதியில் கொண்டு சேர்க்கப்பட்டு இலங்கையின் தலைமன்னார் கடற் பரப்பில் தரையிறக்கப்பட்டு அழைத்து

2. மலைநாட்டு தோட்ட தொழிலாளியாக வந்த மக்கள் பாமரர்களாக இருந்தனர். பிரித்தானியர் இலங்கை மண்ணில் பாமர இந்திய தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு 'பாடம்' சொல்லிக் கொடுக்க எண்ணியபோது இந்தியாவிலிருந்தும், (ஊம்: எழுத்தாளர்; தெளிவத்தை ஜோசப் அவர்களின் தந்தை) இலங்கையின் வடகிழக்கு பகுதியில் இருந்தும் ஆசிரியர்களை கொண்டு வந்தனர். இதில் இந்தியாவிலிருந்து வந்தவர்களை விட இலங்கையின் வடக்கிலிருந்து வந்தவர்களே அதிகம். பலர் திரும்பி சென்றனர். சிலர் மலையகத்திலேயே தங்கினர்.

4. கொழும்பு தலைநகரமாக இருந்தபடியால் ஏற்கனவே அங்கிருந்த இந்திய (பெரும்பாலும் செட்டிநாட்டார்), தமிழர்களும் வர்த்தக நோக்கிலும் கல்வி, உத்தியோக அடிப்டையில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்களும் இடைத் தொடர்பு கொள்ளும் நகரமாக கொழும்பை தளமாக கொண்டனர். ஆனால், வர்த்தக நகரமாதலால் மற்றைய பிரதேசங்களின் அளவுக்கு இவர்களிடையேயான உறவு முக்கியத்துவத்தை பெறவில்லை.

5. 1948க்கு பின் மலையக மக்கள் குடியுரிமை பறிக்கப்பட்டு இந்தியாவுக்கு திரும்பி அனுப்பப்பட்டனர். அதேநேரம் 1970 களில் சிங்கள இனக்கலவரத்திலிருந்து பாதுகாப்பு எனும் நோக்கோடு வன்னியில் குடியேறுகின்றனர். வன்னி பெரு நிலப்பரப்பை பொருளாதார வளமாக்கியதில் (காடழித்து

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 05

## பிரேமதாஸாவுக்கு மகாத்மா காந்தியின் கொழும்பு சொற்பொழிவைத் தேடித்தந்த நவசோதி!

முகத்தில துவாரம் வந்தால் அவலட்சண மாயிருக்கும்! ஓடும் கங்கையில் துவாரம் வந்தால் எழிலாயிருக்கும். அந்த இயற்கை எழிலைத்தான் இலங்கையில் கொழும்பு முகத்துவாரத்திலும் மட்டக்களப்பு முகத்துவாரத்திலும் நாம் காண்கின்றோம்.

நதி எங்கே போகிறது? கடலைத் தேடி ! நாளெங்கே போகிறது? இரவைத் தேடி! நிலவெங்கே போகிறது? மலரைத் தேடி! நினைவெங்கே போகிறது? உறவைத் தேடி! என்று கவியரசர் இயற்றினார்.

காதலி கேள்வி கேட்க, காதலன் பதில் சொல்லும் பாடல். இதில் நதியா, கடலா? காதலன்! அல்லது கடலா நதியா? காதலி! திரைப்படத்தில் பெண்தான் முதலில் நதி எங்கே போகிறது? எனக்கேட்பாள்! அப்படியாயின் அவள்தான் நதியா? அல்லது காதலன் யாரைத்தேடிப்போகிறான் என்பதை அறிவதற்கு அவனைத்தான் நதி என்று அவள் உவமிக்கிறாளா?

வாசகர்களே என்ன தலைசுற்றுகிறதா? விளக்கம் கேட்பதற்கும் கவியரசர் இல்லை.

கடலை சமுத்திரத்தாய் என்றும் வர்ணிப்பர். நதிகளுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்கள் பெண்களுக்குரியவை! கங்கை, காவிரி, சரஸ்வதி, நர்மதா, யமுனை, தாமிரவருணி இவை இந்தியாவில் ஓடும் நதிகள். இலங்கையில் மாவலி, களனி, ஜின் கங்கை, மாணிக்க கங்கை, கலு கங்கை, தெதுறு ஓயா, மதுறு ஓயா, மகா ஓயா இவை ஆண்களின் பெயர்களையா சுட்டுகிறது?

முதலில் சொன்ன இந்திய நதிகளின் பெயர்களில் பெண்குழந்தைகளுக்கு பெயர் சூட்டுகிறார்கள். மாவலி என்ற பெயரிலும் இலங்கையில் ஒரு புகழ்பெற்ற மனிதர் தனது மகனுக்கு பெயர் சூட்டியிருக்கிறார்!




வடக்கின் இடதுசாரித் தோழர் அமரர் வி.பொன்னம்பலம் அவர்கள் தனது மகனுக்கு மாவலி என்றுதான் பெயர் சூட்டினார்! இலங்கையில் மாவலி என்ற பெயரிலும் களனி என்ற பெயரிலும் இலக்கிய சிற்றிதழ்கள் வெளியாகியிருக்கின்றன.



ஆர். பிரேமதாஸ்

ரஸஞானி

மலையிலிருந்து ஊற்றெடுத்து ஓடும் கங்கை அனைத்தையும் அள்ளிக்கொண்டு வரும். காடு, குன்று, சோலை, புல்வெளி, கிராமம், நகரம் எங்கும் சுற்றிச் சுழன்று வளைந்து நெளிந்து, குப்பை கூழங்களையும் அழுக்குகளையும் சில வேளைகளில் சடலங்களையும் சுமந்துகொண்டு கடலில் வந்து சங்கமிக்கும். அதன் பயணம் அத்துடன் முடிவுறும்.

அவ்வாறு முடிவுறும் இடத்திற்கு முகத்துவாரம் என்றும் கழிமுகம் என்றும் பெயர் வைத்தார்கள் எமது முன்னோர்கள்.

களனி கங்கை கொழும்பின் வடமேற்கு பிரதேசத்தில் இந்துசமுத்திரத்தாயுடன் சங்கமிக்கும் பிரதேசத்திற்கு முகத்துவாரம் என அழைப்பர். கிழக்கில் மட்டக்களப்பு வாவி கடலை சங்கமிக்கும் இடத்திற்கும் முகத்துவாரம்தான் பெயர்.

சைவ சமயத்தவர்களுக்கு இந்த முகத்துவாரங்கள் புனிதமானவை. வடக்கில் கீரிமலை எப்படியோ, அவ்வாறே ஒருவர் மரணித்துவிட்டால் அவரது பூதவுடல்




தகனம் செய்யப்பட்டு, மறுநாள் மயானத்தில் சேகரிக்கப்படும் அஸ்தி உறவினர்கள் வசதிப்பிரகாரம் 16 நாட்களில் அல்லது 31 நாட்களில் அந்தியேஷ்டி கிரியைக்காக கொழும்பு முகத்துவாரத்தில் கரைக்கப்படும். பல வருடங்களுக்கு முன்னர் எனது உறவினர் ஒருவரின் அஸ்தி கரைப்பதற்கு கொழும்பு முகத்துவாரம் சென்றிருந்தேன்.




அமரர். நவசோதி

அங்கு எதிர்பாராத வகையில் நண்பர் க. நவசோதியை சந்தித்தேன். எனது மறைந்த உறவினரின் குடும்ப நண்பர்தான் நவசோதி. அந்த மரணச்சடங்கிற்கு அவரால் வரமுடியாது போய்விட்டது எனச்சொல்லிவிட்டு, அந்தக்கடற்கரையில் என்னோடு காலாற நடந்தவாறு சில புதினங்களைச்சொல்லத் தொடங்கினார்.

அவரே அந்தப் புதினங்களை ஒரு கேள்வி வடிவில் தொடங்கினார்.

'கொழும்பு ஜிந்துப்பிட்டியைப் பற்றித் தெரியுமா? அதன் சரித்திரம் பற்றி எழுதப்பட்ட நூல் வெளிவரவே இல்லை'

கொழும்பு ஜிந்துப்பிட்டியைப் பற்றித் தெரியுமா? எனக்கேட்டார்.

"ஓ..! தெரியுமே...! ஐந்துலாம்புச் சந்தி – நகைக்கடைகளுக்குப் பிரசித்தமான செட்டியார் தெரு - சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் – விவேகானந்தா மண்டபம் - கமலாமோடி மண்டபம் – விவேகானந்தா மகா வித்தியாலயம் இப்படி பிரசித்தமானவைகள் அமைந்த பிரதேசம்." என்றேன்.

"அவ்வளவுதானா..? இந்த ஜிந்துபிட்டிக்கென தனியாக ஒரு வரலாறு இருப்பது தெரியுமா?" எனக்கேட்டார்.

"தெரியாதே...?" என்றேன்.

"மகாத்மா காந்தி – ஜவஹர்லால் நேரு – தியாகராஜ பாகவதர் – பி.யு.சின்னப்பா – திரைப்பட நடிகர்கள் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மதுரம் தம்பதியர் முதலானோரை முதல் முதலில் வரவேற்ற இடமும் ஜிந்துப்பிட்டிதான். பல கலைஞர்கள் – பேச்சாளர்கள் – எழுத்தாளர்கள் – உருவாகியதும் இங்குதான்." என்றார் நவசோதி.

" அப்படியா...? எமது தலைமுறைக்கு இந்த வரலாறு தெரியாது! தெரிந்த நீங்கள்தான் எழுதவேண்டும்." என்றேன்.

யார் இந்த நவசோதி..?

கதைப்பூங்கா, ஓடிப்போனவன், நாட்டுப் பாடலில் மலையக வரலாறு, இலக்கிய மகளிர் இதய வேட்கை, பல்லவர் காலமும் பக்திக் கோலமும் முதலான நூல்களின் ஆசிரியர். ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை இலங்கை – இந்திய பத்திரிகைகளில் எழுதியவர். தமிழராய்ச்சி மாநாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்.

கொழும்பில் தமிழ் நிகழ்ச்சிகள் யாவற்றிலும் இவரைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் நன்றாகப் பேசுவார். கோபப்படுவார். வாதம் செய்வார். சண்டை பிடிப்பார். எனினும் நீடித்து நிலைக்காத கோபம் அவருடையது.

இதனால் இவரது கோபத்தை எவரும் சீரியஸாக எடுப்பதில்லை. எங்கடநவசோதி என்ற மனப்பண்புடன் அவரது முன் கோபத்தை மன்னித்தவர்களையும் அறிவேன்.

நவசோதி, கொழும்பில் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக பணிபுரிந்தது பலருக்கும் உதவியாக அமைந்தது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், முதலானோருக்கு தேவைப்படும் சான்று ஆதாரங்களுக்காக பழமையான அரிய பத்திரிகைக் குறிப்புகளைத் தேடும் படலத்திற்கு பெரிதும் உதவியவர் நவசோதி.

ஒரு சமயம் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான பிரேமதாஸாவுக்கும் நவசோதியின் உதவி தேவைப்பட்டது.

மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்த சமயம் கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நிகழ்த்திய முக்கியமான சொற்பொழிவு வெளியான பத்திரிகையை பிரேமதாஸாவுக்கு தேடி எடுத்துக் கொடுத்தவர் நவசோதி.

"குடியிருப்புகள் இன்றி அவதியுறும் மக்களுக்கு வசதி படைத்தோர் தம்மாலியன்றவாறு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்" என்ற வேண்டுகோளை விடுத்திருந்த காந்தியின் சொற்பொழிவே பிரேமதாஸாவுக்கு காலத்தின் தேவைகருதி அன்று அவசியமானது.

ஒருதடவை அவரது காலத்தில் காந்தி ஜெயந்தி தினம் ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டரில் அனுட்டிக்கப்பட்டது. பிரேமதாஸா, ஜிந்துப்பிட்டியின் புராதன மகிமையை எடுத்துக்கூறி காந்தியடிகளின் செய்திகளைப் படித்துக் காண்பித்து அப்பகுதி வர்த்தகப் பிரமுகர்களிடம் வறிய மக்களுக்காக உதவிக்கரம் நீட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பிரேமதாஸாவின் உரையையடுத்து முருகன் தியேட்டரில் ரிச்சர்ட் அட்டன்பரோவின் காந்தி திரைப்படமும் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நவசோதி மற்றும் வீரகேசரி அலுவலக நிருபர் சனூன் ஆகியோருடன் சென்றேன்.

அன்று பலவருடங்களுக்கு முன்னர் கொழும்பில் களனி கங்கையும் கடலும் சங்கமிக்கும் முகத்துவாரத்தில் என்னைச்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# பார்த்த ஞாபகம் இல்லையோ?

# உங்கள் தாயிடம் கேட்டுப் பாருங்கள்

இன்று சந்தையானது உற்பத்திப் பொருட்களினால் நிரம்பி வழிகின்றது, சாத்தியமான வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுப்பதற்காக ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் போட்டி போட்டி போடுகின்றன. சந்தையின் பெரிய பங்கினைப் பெறும் வகையில் வணிகங்களுடன் இணைந்து, தங்கள் பார்வை வளரவேண்டும் என்பதற்காக தர அடையாளம், விளம்பரம் மற்றும் சந்தை வேலைகள் என்பனவற்றை விருத்தி செய்கின்றன. 2.1 கோடி சனத்தொகை கொண்ட ஸ்ரீலங்கா துரிதமாக வளரும் ஒரு சந்தையைக் கொண்டுள்ளது. ஆனால் பொருட்கள், எப்போதும் இந்த விரைவான வேகம் மற்றும் போட்டிக்கு பொருத்தமானதாக இல்லை. முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு வர்த்தகம் மெதுவானதாகவும், குறைவான எண்ணிக்கையிலான தர அடையாளமுள்ள பொருட்களைக் கொண்டதாகவும் மற்றும் வாழ்க்கை எளிதானதாகவும் இருந்தது. அப்போது ஸ்ரீலங்காவாசிகளுக்கு ஏராளமான பொருட்கள் உள்வந்து குவிந்துவிடவில்லை, ஆனால் அதற்கு மாறாக அந்த நேரத்தில் அவர்களுக்குக் கிடைத்த சில பொருட்களைக் கொண்டு அவர்கள் வாழ்க்கையை நன்கு அனுபவித்தார்கள். அதேவேளை கீழே பட்டியலிடப்பட்டுள்ள தர அடையாளங்களைக் கொண்ட பொருட்கள் அப்போது மிகவும் பிரபலமானவையாக இருந்தவற்றுள் சிலவாகும், இன்று அவை இல்லை, பெரியதும் மற்றும் அதிகம் ஆதிக்கம் செலுத்தும் தர அடையாளங் கொண்ட பொருட்கள் இன்று சந்தையை கைப்பற்றிக் கொண்டுள்ளன. ஆனால் இன்றும் ஏராளமான மக்கள் தங்கள் வாழ்க்கைக் காட்சியில் அவை பெற்றிருந்த மதிப்பான இடத்தை ஏக்கத்துடன் நினைவுகூருகிறார்கள்.

இரண்டு யானைகள் போட்ட தீப்பெட்டி
(இரண்டு யானைகள் தீப்பெட்டிகள் ஸ்ரீலங்காவில் உற்பத்தி செய்யப்பட்டன)

இரண்டு யானைகள் முத்திரை பதித்த




தீப்பெட்டிகளில், இரண்டு யானைகள் ஒன்றையொன்று பார்த்தபடி நிற்கும் காட்சி சிவப்பு நிறப் பின்னணியில் காணப்படும், 1970களில இது ஸ்ரீலங்காவில் மிகவும் பிலபலமான தீப்பெட்டியாகும். இந்த வகை தீப்பெட்டி உள்நாட்டில் சிலோன் மச் கம்பனி லிமிட்டடினால் உற்பத்தி செய்யப்பட்டது, கடுமையான சந்தைப் போட்டியில் போராடி உயிர் வாழ்ந்த இந்த நிறுவனம் இப்போது இல்லை. 1977ல் இறக்குதிக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் உயர் தரத்திலான தீப்பெட்டிகள் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன, இது அநேக சிறியதர உற்பத்தியாளர்கள் தங்கள் நிறுவனங்களை மூடுவதற்கு நிர்ப்பந்தித்தது. எனினும் சிலோன் மச் கம்பனி லிமிடட் இந்த சவால்களை எதிர்த்து நின்று தனது உற்பத்திகளை (இரண்டு யானை பிராண்ட் உட்பட) வெளியிட்டது. அவை இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு தரங்களுடன், நிறுவனம் இறுதியாக மூடப்படும் வரை வெற்றிகரமாகப் போட்டியிட்டது.

கோபால் பற்பொடி
(பற்பசை கிடைப்பதற்கு முன்பு பற்பொடி பயன்பாட்டில் இருந்தது)

பிளாஸ்ரிக் குழாய்களில் அடைக்கபட்டுள்ள பற்பசை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு




பற்களைச் சுத்தம் செய்ய பற்பொடி பயன்படுத்தப்பட்டது. பற்பசையின் அனுபவத்திற்கு முன்னர் பல்வேறு வகையான பொருட்கள் பொடி செய்யப்பட்டு பற்களைச் சுத்தமாக்கவும் வெண்மையாக்கவும் பயன்பட்டன. புராதன ரோமாபுரியில் எலும்புகள், மிருகங்களின் கொம்புகள் மற்றும் குளம்புகள் போன்றவை பற்பொடி தயரிக்கப் பயன்பட்டன, ஆனால் ஸ்ரீலங்காவில் மிகவும் பிரபலமான 'கோபால் பற்பொடி' இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. கராம்பு, கல்சியம் காபனேற்று, மைரோபாலன் மரப்பொடி, கறுவா, சக்கரின் மற்றும் அமரந் இலைப்பொடி உட்பட உலர்ந்த மூலிகைகளால் இந்தப் பற்பொடி தயாரிக்கப்பட்டது. விவரண ஆதாரங்கள் தெரிவிப்பதன்படி ஸ்ரீலங்காவின் சனத்தொகையில் 50 விகிதத்துக்கும் மேலான மக்கட் தொகையினர் வழக்கமான சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் கடதாசிப் பைகளில் வந்த கோபால் பற்பொடியினைப் பயன்படுத்தினார்கள்.

குயிங்க் மை
(பந்துமுனைப் பேனா அறிமுகமாவதற்கு முன்பு குயிங்க் மை பிரபலமானதாக இருந்தது)

பந்துமுனைப் பேனா என அழைக்கப்படும் போல் பொயின்ட் பேனாக்கள் சந்தையை கைப்பற்றும் முன் குயிங்க் ஊற்றுப் பேனா




மை ஸ்ரீலங்காவில் மிகவும் பிரபலமானது.

அது பிரபலமான ஊற்றுப் பேனாத் தயாரிப்பாளரான பார்க்கர் பேனா நிறுவனத்தின் உற்பத்தியாகும். அத்துடன் 1928ல் அது மாற்றம் செய்யப்பட்டு அனைத்துவகை ஊற்றுப் பேனாக்களுக்கும் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படக்கூடிய வகையில் பொதுவான பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட மை, என்கிற சிறப்பையும் பெற்றது. குயிங்க் மை 1931ல் அமெரிக்கச் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டு விரைவிலேயே ஐரோப்பா, அவுஸ்திரேலியா இந்தியா மற்றும் கீழைத்தேசங்கள் போன்ற இடங்களுக்கு உலகளாவிய விநியோகத்தை ஆரம்பித்தது. ஸ்ரீலங்காவில் குயிங்க், கப்பிட்டல் மகாராஜா நிறுவனத்துக்குச் சொந்தமான எம்ஆர் விநியோகஸ்தர்களால் (இப்போது சர்வதேச அழகுசாதனப் பொருட்கள் (தனியார்) லிமிடட்) விநியோகம் செய்யப்பட்டது. ஸ்ரீலங்காவில் குயிங்க் மை, நீலம் மற்றும் சிவப்பு ஆகிய இரண்டு நிறங்களில் கிடைக்கக் கூடியதாக இருந்தது; மற்றும் ஊற்றுப் பேனாக்களின் பாவனை நிற்கும் வரை அது தீவெங்கிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

## ரோல் றேமண்ட்

புளு பான்ட் மாஜரீன்
(சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் மாஜரீன் என்கிற தாவர வெண்ணெய், பட்டரைக் காட்டிலும் எளிதில் கிடைக்கக்கூடியதாக இருந்தது.)

அதன் சின்னமான மஞ்சள் நிறத்தில் நீலப் பட்டி அடையாளம் கொண் ட புளு பான்ட் மாஜரீன்தான் அந்தக் காலத்தில்




தற்போதைய அஸ்ட்ரா மாஜரீனைப் போல புகழ் பெற்றிருந்தது. 'ராமா', 'கன்ட்ரி குரோக்', மற்றும் 'டொரியானா' போன்ற ஏனைய நாட்டு மாஜரீன்களும் புளு பான்ட் என்கிற தர அடையாளத்துடன் யுனிலீவர் நிறவனத்தால் ஸ்ரீலங்காவில் விற்பனை செய்யப்பட்டன. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் பட்டர் ஒரு ஆடம்பரப் பொருளாக இருந்தது. ஆகவே மக்கள் மாஜரீனைப் பயன்படுத்தினார்கள், அனைத்து விதத்திலும் இது பன்றிக் கொழுப்பின் சுவையினை ஒத்ததாக இருந்தது. புளுபான்ட் மாஜரீன் தாவர எண்ணெயினால் செய்யப்பட்டது, தேவையான கொழுப்பு

உயிர்ச்சத்துக்கள் ஏ,டி மற்றும் ஈ என்பனவற்றைக் கொண்டிருப்பதுடன் பாடசாலைகளில் கவனம் செலுத்துவதற்குரிய பிள்ளைகளின் திறனை மேம்படுத்தும் ஆற்றல் கொண்டது. புளு பான்ட், ராமா, கன்ட்ரி குரொக் மற்றும் டோரியானா போன்ற உற்பத்திகள் அவை பிரபலமாக இருந்த காலத்தில் 65 க்கும் மேற்பட்ட நாடுகளில் நுகர்வு செய்யப்பட்டன.

அலரிக்ஸ் ஐஸ்கிரீம்
(வெள்ளவத்தையில் இருந்த அலரிக்ஸின் பிக்காடிலி கபே மிகவும் விருப்பத்துக்குரியது.)



அலரிக்ஸ் ஐஸ்கரீம் மற்றும் அதை உற்பத்தி செய்த இலங்கையின் முதல் ஐஸ்கரீம் பார்லர் ஆன பிக்காடிலி கபே ஆகியவை ஒருபோதும் மறக்க முடியாதபடி நினைவில் அச்சிடப்பட்டுள்ளன. அலரிக்ஸ் ஐஸ்கரீம், 1949ல் அலரிக்ஸ் டீ சில்வா விமலரத்ன என்பவரால் உருவாக்கப்பட்டது. அது மிகவும் பிரபலமான 'ஐஸ்சொக்' மற்றும் 'பமிலி புளொக்' என்பனவற்றை விற்பனை செய்து வந்தது. இதில், மூன்று வகையான சுவை கொண்ட ஐஸ்கிறீம்கள் ஒரு அட்டைப்பெட்டியில் அடைக்கப்பட்டிருக்கும். இது பிளாஸ்ரிக் மற்றும் பொலிதீன் போன்றவை தமது தீய கரங்களை வெகுஜன உற்பத்திப் பொருட்கள்மீது பரப்புவதற்கு முன்பு நடந்தது. அதனால் அலரிக்ஸ் ஐஸ்கிரீம் பொருட்கள் அட்டைப் பெட்டிகளில் பொதி செய்யப்பட்டன. ஐஸ்கிரீம் போன்ற பொருட்கள் இன்னமும் பல வீடுகளில் செய்யப்பட்டுவருகின்றன. எனவே, ஒரு அலரிக்ஸ் ஐஸ்கிரீமுக்காக பிக்காடிலி கபேக்குச் செல்வது ஒரு விருந்துபசாரமாகவே கருதப்பட்டது. அலரிக்ஸ் தனது ஐஸ்கிரீம்களை ஒரு வான் மூலமும் விற்பனை செய்து வந்தார், அந்த வான் களியாட்ட விழாக்கள், சந்தைகள் மற்றும் பிற ஒன்றுகூடல்களுக்குச் சென்று தனது விற்பனையை நடத்தியது.

லைல்ஸ் கோல்டன் சிரப்

(லைல்'ஸ் கோல்டன் சிரப் கொழும்பில் மிகவும் பிரபலமானது)

லைல்'ஸ் கோல்டன் சிரப் என்பது 1800 களில் லண்டனில் உள்ள ஏபிராம் லைல் அன்ட்




சண்ஸ் என்கிற சுத்திகரிப்பு ஆலையில் தயாரிக்கப்பட்ட ஒரு தடிமனான சீனிப் பாணியாகும். அது உலகிலேயே மிகவும் பழமையான பிராண்ட் மற்றும் பொதியமைப்பு என்பனவற்றுக்காக 2006ம் ஆண்டு கின்னஸ் உலக சாதனை நிலைநாட்டி அங்கீகாரம் பெற்றது. அது 1885ல் முதலில் தகரத்தில் அடைக்கபட்டு விற்பனை செய்யப்பட்டது.

தொடர்ச்சி... (பக்கம் -23 )



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 06




புதிய பொத்துவில் தொகுதியின் வடக்கு எல்லையாகக் காரைதீவுக் கிராமமும் தெற்கு எல்லையாகக் குமுக்கன் ஆறும் அமைந்தன. 1976ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது முன்பிருந்த நிந்தவூர் தொகுதி நீக்கப்பெற்று பொத்துவில் (இரட்டை அங்கத்தவர் தொகுதி), கல்முனை, சம்மாந்துறை, அம்பாறை ஆகிய நான்கு தொகுதிகளாக அம்பாறை மாவட்டம் வகுக்கப்பெற்றது.

இந்த போது நடைமுறையின் முன்னைய மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் கிழக்கு மாகாணத்தின் கீழ் அமைந்திருந்து பின்னர் மொனாராகலை மாவட்டத்துடன் இணைக்கப்பெற்று ஊவா மாகாணத்தின் கீழ் கொண்டுவரப்பெற்றிருந்த விந்தனைப் பற்று பிரதேசம் (விந்தனைப் பற்று வடக்கு-மகாஓயா, விந்தனைப் பற்று தெற்கு-பதியத்தலாவ) அம்பாறைத் தொகுதிக்குள் உள்வாங்கப்பெற்று அம்பாறை மாவட்டத்துடன் இணைந்து மீண்டும் கிழக்கு மாகாணத்தின் கீழ் கொண்டு வரப்பெற்றது. அம்பாறை மாவட்டத்திலும் அதன் மூலம் கிழக்கு மாகாணத்திலும் சிங்களவர்களின் எண்ணிக்கையைக் கூட்டும் செயற்பாடே இது.

1976இல் புதிய பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பெற்ற காரணத்தால் சுதந்திர இலங்கையில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முதலாக அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குத் தங்களுக்கென அரசியல் பிரதிநிதித்துவம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப் பெற்றது. 1977ம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின்னர் அதே ஆண்டு 12.09.1977 அன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் எம்.கனகரட்ணம் அவர்கள் தெரிவானார்.

1977ம் ஆண்டுப் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நாடு தழுவியதாக அவ்வாண்டு மே மாதம் நடைபெற்றது. பொத்துவில் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்தவரும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்தவருமான சரணபால என்பவர் தேர்தலுக்கு முன்தினம் வாகன விபத்தொன்றில் மரணமடைந்ததால் அப்போது அமுலிலிருந்த தேர்தல் விதிகளின் படி பொத்துவில் தொகுதிக்குரிய தேர்தல் நடைபெறாமல் ஒத்திவைக்கப் பெற்று இடைத்தேர்தலாக 12.09.1977 அன்று நடைபெற்றது.

1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக்கான-தமிழீழத்திற்கான-தீர்மானத்தை நிறைவேற்றி அதற்குத் தமிழர்களின் ஆணையைப் பெற்றுக் கொள்ளும் சர்வஜன வாக்கெடுப்பாக 1977 தேர்தலை அறிவித்திருந்தது. அதேவேளை முன்பு 1970 ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் தமிழரசுக்கட்சியில் போட்டியிட்டு வெற்றி வய்ப்பை இழந்திருந்த டாக்டர் உதுமாலெவ்வையின் தலைமையில் "முஸ்லிம் ஐக்கிய முன்னனி" எனும் அமைப்பு உருவாகியிருந்தது.

1977 இல் கல்முனை, சம்மாந்துறை தேர்தல் தொகுதிகளில் முறையே சட்டத்தரணிகள் ஏ.எல்.எம்.சம்சுதீன், எச்.எல். எம்.ஹாசிம் ஆகியோரை முஸ்லிம் ஐக்கிய முன்னனி சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது உதய சூரியன் சின்னத்தில் வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தது.

1972 இல் இலங்கையின் குடியரசு அரசியலமைப்பு அறிமுகத்தைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து "தமிழர் கூட்டணி"யாகிப் பின் 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் "தமிழர் விடுதலைக் கூட்டணி" எனப் பெயர் மாற்றம் பெற்று தேர்தல் திணைக்களத்தில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பெற்று அங்கிகாரம் பெற்று அதற்கு உதயசூரியன் சின்னமும் வழங்கப் பெற்றிருந்தது. 1977 தேர்தலின் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி உருவாகி இருக்கவில்லை. எம்.எச்.எம் அஸ்ரப் அவர்கள் முஸ்லிம் ஐக்கிய முன்னனி சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவில் இடம் பெற்றிருந்தார். முஸ்லிம் ஐக்கிய முன்னணியில் இணைந்து அதன் சார்பில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக் குழுவில் இடம் பெறுவதற்கு முன்னால் அஸ்ரப் அவர்கள் தன்னை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளராகவே அடையாளம் காட்டியிருந்தார்.

முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் எழுதப்பெற்று தமிழீழக் கோரிக்கையை முஸ்லிம் ஐக்கிய முன்னனியும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இலங்கையின் சில தேர்தல் தொகுதிகளில் முஸ்லிம் ஐக்கிய முன்னனியின் வேட்பாளர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர்.
தம்பியப்பா கோபாலகிருஸ்னன் அந்த வகையில் கல்முனைத் தொகுதியில் சட்டத்தரணி சம்சுதீனும், சம்மாந்துறைத் தொகுதியில் சட்டத்தரணி ஹாசிமும், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்த் தொகுதியில் எஸ்.எம் மக்கீன் என்பவரும் வடமேல் மாகாணத்தில் புத்தளம் தொகுதியில் டாக்டர் இலியாஸ் அவர்களும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர். தமிழீழம் என்பது

## தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

புத்தளத்தையும் உள்ளடக்கியது என்ற எடுகோளின் அடிப்படையில் தமிழீழம் என்பது தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்த தமிழ் பேசும் மக்களுக்கானது என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைறின் படி தமிழ் பேசும் மக்களின் அதிகபட்சமான வாக்குகளை-ஆணையை-தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாகப் பெற்றுக் கொள்வதற்காகவே 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறு சில தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்களை முஸ்லிம் ஐக்கிய முன்னணி சார்பில் அப்போது நிறுத்தியதாகக் கருதப்பெற்றது. இப்போது நினைத்தால் இச்செயற்பாடு அரசியலில் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமானது என்பது தெரிகிறது. அதனைப் பிறிதொரு பந்தியில் விளக்கலாம்.

1976ம் ஆண்டின் தேர்தல் எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பெற்றுத் தமிழர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பெற்றதெனினும் இத்தொகுதி கடைந்தெடுக்கப்பெற்ற விதமானது, முஸ்லிம்:தமிழ்:சிங்கள வாக்காளர்களுக்கிடையேயுள்ள விகிதமானது "கரணம் தப்பினால் மரணம்" என்ற நிலையில் தமிழர்களின் வாக்குகள் சற்றுச் பாதகமாகச் சிதறிவிடுமாயின் தமிழ் மக்களுக்குரித்தான பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்கூட முஸ்லிம் வேட்பாளர் ஒருவரிடம் பறிபோய் இத்தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பெறும் இரு பிரதிநிதிகளும் முஸ்லிம்களாகவே இருந்துவிடக்கூடிய ஆபத்தைக் கொண்டிருந்தது. பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாகப்பெற்ற நோக்கத்தையே இல்லாமற் செய்து விடக்கூடிய இவ் ஆபத்தை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் இத்தேர்தலில் எதிர்நோக்கியிருந்தார்கள். இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

1977 தேர்தலின் போது பொத்துவில் தொகுதியில் முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 27,000; தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 16,000; சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 5000. அப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உருவாகியிருக்கவில்லை. முஸ்லிம் வேட்பாளர்கள் பொத்துவில் தொகுதியிலே இரு பிரதான தேசியக்கட்சிகளான யூ.என்.பி யிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலும் போட்டியிடுவர். தமிழ் வேட்பாளர் தமிழர் விடுதலைக்கூட்டணியில் நிறுத்தப்பெறுவார். முஸ்லிம்களும் சிங்களவர்களும் இரு பிரதான தேசியக் கட்சிகளான யூ.என்.பி க்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பிரித்து வாக்களிப்பர். முஸ்லிம் வாக்காளர்களினதும் சிங்கள வாக்காளர்களினதும் மொத்த எண்ணிக்கை 27000 + 5000 = 32000 ஆகும். இது இரு பிரதான தேசியக் கட்சிகளுக்கும் சரி பாதியாகப் பிரிகிறது என வைத்துக்கொள்வோம். அப்படிப் பிரிபடும் போது 32000 / 2 =16000 ஆகும். தமிழர்களின் எண்ணிக்கையும் 16000 ஆகும். இந் நிலையில் யூ.என்.பி: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி: தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு விழக் கூடிய வாக்குகளின் விகிதம் 16000 : 16000 : 16000 = 1:1:1 என அமையும். இது ஓர் ஆபத்தான நிலைமை. தமிழர்களுடைய வாக்குகள் சிதறி விட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பெற்று தேசியக் கட்சிகளில் போட்டியிடும் இரு முஸ்லிம் வேட்பாளர்களுமே 1ம், 2ம் இடத்தைப் பெற்று இரு பாராளுமன்ற உறுப்பினர்களுமே முஸ்லிம்களாகவே வந்துவிடுவர். 1965, மற்றும் 1970 ஆண்டுத் தேர்தல்களில் சுயேற்சையாக முன்னைய பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியிருந்த தம்பிலுவிலைச் சேர்ந்த என்.தருமலிங்கம் அவர்கள் நிச்சயம் சுயேச்சையாக 1977 தேர்தலிலும் போட்டியிடுவார் என்ற நிலைமையிலிருந்தது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அறப்போர் அரியநாயகத்திற்கும் (இத் தேர்தல் சமயத்தில் இவர் காலமாகியிருந்தார்) என்.தர்மலிங்கத்திற்கும் இடையில் முன்பிருந்த உள்ளூர் அரசியல் பகைமையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்.தர்மலிங்கத்திற்கு வேட்பாளர் நியமனம் வழங்கமாட்டாது.

பொத்துவில் தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணியின் வேட்பாளர் நியமனத்தை என். தருமலிங்கம் அவர்களுக்கு வழங்கும்படி உள்ளூர் தமிழர் விடுதலை கூட்டணி முக்கியஸ்தர்கள் சிலர் திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரிடம் "தருமலிங்கத்திற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனம் வழங்கினால் அரியநாயகத்தின் ஆத்மா சாந்தியடையாது" என அமிர்தலிங்கம் பதில் கூறியதை இக்கட்டுரை ஆசிரியர் தனது காதால் கேட்டிருந்தார்.

இந்த நிலையில் தருமலிங்கம் சுயேச்சையாகப் போட்டியிடும்பட்சத்தில் குறைந்தது 5000 வாக்குகளையாவது பிரித்துவிடுவார். அப்படிப் பிரித்துவிட்டால் பொத்துவில் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும் இருவருமே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிடுவர்.
இந்த ஆபத்தை உணராத தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்பீடத்தினர் வழமை போல் பொத்துவில் தொகுதித் தமிழர்களுடன் கலந்தாலோசியாது பொத்துவில் தொகுதியிலே தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் காலஞ்சென்ற மு.திருச்செல்வம் அவர்களை (நீலன் திருச்செல்வத்தின் தந்தை) நிறுத்தவும், மட்டக்களப்புத் தொகுதியிலே கட்சிக்குள் எழுந்த இராசதுரை எதிர் கவிஞர் காசி ஆனந்தன் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பொத்துவில் தொகுதியிலே காசி ஆனந்தனை வேட்பாளராக நிறுத்தவும், திருகோணமலைத் தொகுதியிலே கட்சிக்குள் எழுந்த இரா.சம்பந்தன் எதிர் தங்கத்துரை பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தங்கத்துரை அவர்களைப் பொத்துவில் தொகுதியிலே வேட்பாளராக நிறுத்தவும் என யோசனைகள் மேற்கொண்ட வண்ணம் இருந்தனர். இது உண்மையில் அதன் கட்சி அரசியல் நலனை மட்டுமே சார்ந்த மக்கள் நலன் சாராத குணாம்சத்தின் வெளிப்பாடே.

அப்போது இக் கட்டுரை ஆசிரியர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொத்துவில் தொகுதியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவிருந்தார். பொத்துவில் தொகுதியை சந்தேகத்திற்கிடமின்றி தமிழர்கள் வென்றெடுக்க வேண்டுமாயின் சுயேச்சையாக போட்டியிடும் தர்மலிங்கம் அவர்களினால் பிரிக்கப்பெறும் வாக்குகளை ஈடுசெய்யக் குறைந்தபட்சம் 1000 இலிருந்து 1500 வரையிலான முஸ்லிம் வாக்குகளைப் பெறக்கூடிய அளவு முஸ்லிம்களிடையேயும் தனிப்பட்ட முறையில் செல்வாக்குமிக்க தமிழ் வேட்பாளர் ஒருவரே தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக நிறுத்தப்பெறவேண்டும் என்றும் அதற்குப் பொருத்தமானவர் பொத்துவில் கிராமத்தில் கணிசமான முஸ்லிம் வாக்குகளைப் பெறக்கூடிய தொழில் அதிபரான காலஞ்சென்ற எம்.கனகரட்ணம் அவர்களே என்றும், முஸ்லிம் ஐக்கிய முன்னணியுடன் ஒப்பந்தம் எழுதவெனக் கல்முனை வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கம் அவர்களைக் கல்முனையைச் சேர்ந்தவரும் அப்போது பொத்துவில் இலங்கை வங்கி ஊழியருமான ஜெகநாதன் மற்றும் காலஞ்சென்ற சிவாநந்தன் ஆகியோர் சகிதம் இக் கட்டுரை ஆசிரியர் சென்று நேரில் சந்திதுது வலியுறுத்தியது மட்டுமல்லாமல், தொடர்ந்து பொத்துவில் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் கூட்டமொன்றினைத் தனது ஏற்பாட்டில் தம்பிலுவில் அமரர் அரியநாயகம் வீட்டில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்புக் கிராமத்தைச் சேர்ந்தவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தருமான காலஞ்சென்ற சிவஞானச் செல்வக்குருக்கள் (தாடிக்குருக்கள்) அவர்களின் தலைமையிலே கூட்டி பொத்துவில் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக எம்.கனகரட்ணத்தின் பெயரையே பொத்துவில் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை தீர்மானிப்பதற்காகத் தீர்மானமொன்றினை இக் கட்டுரை ஆசிரியர் சாத்தியமாக்கினார்.

இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சிவஞானச்செல்வக்குருக்கள் அவர்களினால் கைச்சாத்திடப்பெற்ற இத்தீர்மானத்தின் மூலப்பிரதியுடன் தமிழ் இளைஞர் பேரவை முக்கியஸ்தர் பொன்.கோபால், காலஞ்சென்ற யேசுரட்ணம் உட்பட இன்னும் இரு இளைஞர்களையும் சேர்த்துக்கொண்டு கொழும்பு சென்று அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் காலஞ்சென்ற மு.சிவசிதம்பரம் அவர்களின் மருதானை நொறிஸ் சனல் வீட்டில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழுக் கூட்டத்தில் வைத்து அமிர்தலிங்கம் அவர்களிடம் நேரடியாகக் கையளித்து எம்.கனகரட்ணம் அவர்களைப் பொத்துவில் தொகுதியின் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளராக நியமிக்கச் செய்வதில் இக்கட்டுரை ஆசிரியர் வெற்றியீட்டினார். இவரின் இச் செயற்பாட்டிலுள்ள யதார்த்தத்தையும் அறிவுபூர்வமான அரசியல் தந்திரோபாயத்தையும் 1977ம் ஆண்டின் பொத்துவில் தொகுதியின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் முடிவுகள் அதாவது 12.09.1977 அன்று நடைபெற்ற பொத்துவில் தொகுதி இடைத்தேர்தலின் முடிவுகள் தெளிவுபடுத்தும்.

--தொடரும்--




























**அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்து உங்கள் வணிகத்தை பெருக்குங்கள்**

- கிழக்கில் இருந்து கிழக்கு மக்களுக்காக வாராவாரம் வரும் இலவசப் பத்திரிகை இது.
- இதில் விளம்பரம் செய்வதன் மூலம் உங்கள் தகவல்கள் கூடுதலான மக்களை சென்று சேரும்.
- அதன் மூலம் எமது மக்களின் தகவல் பசியைத் தீர்க்கும் முயற்சிக்கும் நீங்கள் உதவ முடியும்.

**Call Us**
**071 3999091**






# அசவீடோ அழித்த அருஞ்சிற்பக்கூடம்! (வரலாற்றில் திருக்கோவில் - பாகம் 02)

திருக்கோவில் பற்றிய இன்றைய கட்டுரை, மகிழ்ச்சியை விட, சோகத்தையும் ஏக்கத்தையுமே உங்கள் மத்தியில் எஞ்சவிட்டுச் செல்லப்போகிறது. ஏனென்றால் நாம் இந்த வாரம் பார்க்கப் போவது, திருக்கோவில் இடித்துத் தள்ளப்பட்ட கதையை! போர்த்துக்கேயர் இந்தத் திருத்தலத்தில் செய்திருக்கக் கூடிய நெஞ்சைப் பிழியும் அட்டூழியங்களை!

**புராதனமான கருவறைச்சுவரும்**
**அதன் மேற்பகுதியிலுள்ள அரிதான யாளிவரிசைச் சிற்பங்களும்**



திருக்கோவிலில் இன்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாக உடைந்த கற்றூண்களையும், கற்பாளங்களையும் காணலாம். திருப்பணி வேலைக்காகத் தோண்டிய இடத்திலெல்லாம் வேலைப்பாடு கொண்ட கற்றுண்டங்கள் கிடைத்தவாறே இருக்கின்றன. பழைய கற்றளி மண்டபங்கள் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான சான்றுகள் இவை. ஆனால், ஆலயம் முற்றாக உடைக்கப்படவில்லை. அல்லது உடைக்கப்படும் போது, அரசியல் செல்வாக்கால் அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது!

ஆம். பேராசிரியர் இந்திரபாலா உறுதியாகவும், பேராசிரியர் பத்மநாதன் சற்று ஐயத்துடனும், திருக்கோவில் கருவறை 13ஆம் நூற்றாண்டு பாண்டியர் கலைப்பாணியை வெளிக்காட்டுகின்றது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். விமானத்தின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள யாளி வரிசைச் சிற்பங்களும், கருவறை வெளிச்சுவரின் மழுங்கிய சிற்பங்களும் அபூர்வமான அரைத்தூண் வேலைப்பாடுகளும், இலங்கையில் வேறெங்கும் காண அரிதான மிகப்பழைமையான சிற்பக்கலை அம்சங்கள். தனித்துவமான வேலைப்பாடுகளைக் கொண்ட திருக்கோவிலின் விமானத்தை, பேராசிரியர் இந்திரபாலா, பொலனறுவை இரண்டாம் சிவாலயத்துடனும், க.தங்கேஸ்வரி, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் முந்தைய விமானத்துடனும் ஒப்பிட்டிருக்கிறார்கள். திருக்கோவில் விமானத்தின் பழைமை தொடர்பில் மேலதிக ஆய்வுகள் தேவை. ஆனால், போர்த்துக்கேயரால் கல் மண்டபங்கள், தூண்கள் இடிக்கப்பட்டாலும், கருவறை சிதைக்கப்படவில்லை என்று சொல்வதற்கு இவை போதுமான ஆதாரங்கள்.

சரி, போர்த்துக்கல் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். பெர்னான்டோ டி குவரோஸ் (Fernão de Queirós, 1617-1688) என்பவர், இலங்கைக்கு வந்து நீண்ட நாள் தங்கியிருந்த போர்த்துக்கேய மதபோதகர். அவரால் 1687இல் எழுதப்பட்ட “இலங்கை மீதான உலகியல் மற்றும் ஆன்மிக வெற்றி” (The Temporal and Spiritual Conquest of Ceylon) எனும் நூல் குறிப்பிடத்தக்க வரலாற்று நூலாகவும், போர்த்துக்கேய இலங்கை தொடர்பான விரிவான சித்திரங்கள் அடங்கிய சிறந்த நூலாகவும் கொள்ளப்படுவது. அதில் ஓரிடத்தில் குவரோஸ் பின்வருமாறு சொல்கிறார்:

“பெற்றிகலோ சிற்றரசில் உள்ள 34 குடியிருப்புகளில், இருபத்துநான்கு, சனச் செறிவு மிகுந்தவை. அவற்றில் ட்ரிகோவிலைச் சூழவுள்ள பகுதி மிக மோசமாகக் காட்சியளிக்கிறது. குடிமக்கள் பெற்றிகலோவின் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து விட்டதால் இங்குள்ள பரந்த வயல்கள் உவராகியிருக்கின்றன. சிலோனின் ஏனைய பகுதிகளை

**கோவிலும் அதன் அழகிய சிற்பங்களும் சிதைக்கப்பட்டன; கோவிற்பெண்டிர் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்; கோவிலைச் சூழ வாழ்ந்த மக்கள் அஞ்சி இடம்பெயர்ந்து விட்டார்கள்**

விட, இச்சிற்றரசின் இந்தப்பகுதி தான் நல்ல சாயவேரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. தேன்மெழுகு, யானைத்தந்தம், எலுமிச்சை, தோடை,



**ஜெரோனிமோ டி அசவீடோ**
திருக்கோவிலை இடித்த போர்த்துக்கேயத் தளபதி

அதிக விளைச்சலைத் தரும் அரிசி என்று இங்கு வளம் கொழிக்கிறது. பெற்றிகலோ துறைமுகத்திலிருந்து தென்புறமாக 12 குடியிருப்புக்களைக் கடந்ததும், சிலோனின் புகழ்மிக்க வழிபாட்டுத்தலமாக விளங்கிய அந்த ”ட்ரிகோயிலின் பகோடா”வைக் காணலாம். “துங்கோவிலே” என்பதே அதன் சரியான பெயர். மூன்று தளம் கொண்ட கோவில் அல்லது மூன்று கோவில்கள் என்று அதற்கு அர்த்தம். அங்கு பல சிற்பங்களும் விக்கிரகங்களும் அமைந்திருந்தன.

**பெர்னான்டோ டி குவரோஸ் சொன்ன குலை நடுங்கச் செய்யும் கதை என்ன?**

வி.துலாஞ்சனன்

ஜெனரல். டி.ஜெரோனிமோ டி அசவீடோ அதை இடித்துக் கொள்ளையடித்து, அங்கு ஊழியம் செய்த ‘கணேசேகளைக்’ கொன்றொழித்த காலம் வரை, அந்தப் பகோடா புகழ்பெற்றிருந்தது.”

பகோடா என்றால் கோவில். திருக்கோவிலைச் சூழவுள்ள பகுதி என்று குறிப்பிட்டு, அதன் செழிப்பை குவரோஸ் விவரிப்பதைப் பார்க்கும் போது, அவர் நேரடியாக கண்டு வியந்து சொன்ன சொற்கள் அவை என்பதை ஊகிக்க முடிகின்றது. பெற்றிகலோ துறைமுகத்திலிருந்து 12 குடியிருப்புக்கள் தாண்டி என்று தூரத்தை அவர் துல்லியமாகக் குறிப்பிடுவதன் மூலமும் அவர் இங்கு வந்திருப்பதை உறுதிப்படுத்தலாம். அவர் துறைமுகம் என்று சொல்வது இன்றைய மட்டுநகராக இருக்கக்கூடும்.

திருக்கோவிலைக் கொள்ளையடித்தவன் என்று குவரோஸ் குறிப்பிடும் இந்த அசவீடோ (Jerónimo de Azevedo) இலங்கையின் போர்த்துக்கேயத் தளபதியாக கி.பி 1594 முதல் 1613 வரை பதவி வகித்தவன். 1603ஆம் ஆண்டு யூலை மாதம் திருக்கோவில் சாதாரணமாகவே இயங்கி வந்ததை நாம் போன கிழமை பார்த்தோம். எனவே திருக்கோவில் கொள்ளையடிக்கப்பட்டமை, 1604இற்கும் 1613இற்கும் இடைப்பட்ட ஒன்பது ஆண்டு கால இடைவெளியிலேயே இடம்பெற்றிருக்கவேண்டும்.

கண்டியை ஆக்கிரமிப்பதில் போர்த்துக்கேயர் ஏற்கனவே பேராசை கொண்டிருந்தனர். அசவீடோவின் தலைமையிலான இறுதியானதும் மிகக்கொடூரமானதுமான கண்டிப்படையெடுப்பு 1611இல் இடம்பெற்றது. கண்டியின் ஆதிக்கத்திலிருந்த கீழைக்கரையில், 1611இற்கு முன்பின்னாகவே போர்த்துக்கேயரின் வன்செயல்கள் இடம்பெற்றிருக்கும் என்பதால், திருக்கோவில் சிதைப்பு நிகழ்ந்தது குறிப்பாக 1610 - 1612இற்கு இடையே என்று கொள்ளலாம்.

குவரோஸ் சொல்லும் சாயவேர் அன்றைய காலனித்துவ ஆட்சியாளர்களின் முக்கியமான வாணிகப்பொருள்களில் ஒன்று. இம்பூரல் அல்லது சிறுவேர் என்று தமிழில் அறியப்படும் சாயவேர் (Oldenlandia umbellata), சிவப்புநிறத்தைப் பெறுவதற்கும், பட்டு, பருத்தி முதலான துணிகளைச் சாயமிடவும் வரலாற்றுக் காலத்திலிருந்தே பயன்பட்டு வந்த ஒருவகைப் பூண்டுத் தாவரமாகும். திருக்கோவிலைச் சூழப் பெறப்படும் சாயவேரே இலங்கையில் மிகச்சிறந்தது என்ற சொற்கள், அவர் இங்கு நேரடியாக வந்து அவதானித்திருக்கிறார் என்பதற்கான இன்னொரு சான்று.

ஆனால் நேரடியாக வந்திருக்கிறார் என்பதற்காக அவரது முழுக்கூற்றையும் உண்மையாகக் கொள்ளமுடியவில்லை. திருக்கோவிலின் சரியான பெயர் என்று, மூன்று கோவில் என்று சிங்களத்தில் பொருள்படும் துன்கோவில (Tuncoule) என்ற பெயரை குவரோஸ் குறிப்பிடுகிறார். திருக்கோவிலை ‘திரிக்கோவில்’ (திரி ஸ்ரீ மூன்று) என்று பிழையாகப் புரிந்துகொண்டு அவரது சிங்கள உதவியாளர் இதைச் சொல்லியிருக்கக்கூடும். இதே குழப்பமே திருக்கோணமலையின் பெயர் விடயத்திலும் (திரிகோணமலை?) நிலவிவந்ததை – நிலவிவருவதை நாம் காணலாம்.

திருக்கோவிலின் சரியான பெயர் திரிக்கோவில் என்பதற்கு வேறெந்த சான்றுகளும் கிடைக்கவில்லை. இலங்கை மொழிவழக்கில் அத்தகைய ஒரு பெயருக்கான வாய்ப்பும் மிக அரிது. நிலைமை இப்படியிருக்க, ~Tuncoule| என்பதை துங்கோள என்று வாசித்து திருக்கோவிலின் பழைய பெயர் ‘துங்ககோளப்பட்டினம்’ என்று சொல்லும் கட்டுரைகள் கடந்த காலத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. கிழக்கிலங்கை வரலாற்றறிஞர்கள் பலர் குவரோசின் கூற்றை அப்படியே நம்பி, திருக்கோவிலில் மூன்று கோபுரங்கள் இருந்தன என்றும் எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

உண்மையில் குவரோஸ் கோபுரங்கள் பற்றித் தெளிவாக எதுவும் சொல்லவில்லை. துங்கோவில என்ற (தவறான) பெயருக்கு காரணம் தேடும் நோக்கில் “மூன்று தளம் கொண்ட பகோடா அல்லது மூன்று பகோடாக்கள்” என்றே அவர் விளக்கம் கூறுகிறார். குவரோசின் நூலை வாசிக்கும் எவரும் அவர் உள்ளூர் இடப்பெயரை ஆராய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்பதை உணர்ந்துகொள்ளலாம். பெரும்பாலும், தான் விவரிக்கின்ற இடங்களைச் சொல்லும் போது அந்தப் பெயர் எப்படி வந்தது என்பதற்கான விளக்கத்தையும் கூடவே அவர் கொடுத்திருக்கிறார்.

எனவே மூன்று கோபுரங்கள் திருக்கோவிலில் அமைந்திருந்தன என்பதை இப்போதைக்கு நம்மால் உறுதியாகக் கூறமுடியாது. எனினும் ‘ட்ரிகோயிலி பகோடா’வின் சிற்பங்கள், விக்கிரகங்களை குவரோஸ் விசேடமாகச் சொல்வதால், கருவறை விமானச் சிற்பங்களோ அல்லது மண்டபங்களிலிருந்த கலையழகு நிறைந்த அருஞ்சிற்பங்களோ அசவீடோவால் தகர்த்து வீசப்பட்டிருக்கின்றன என்பதையேனும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்.

குவரோசின் கூற்றில் இறுதி வரி தான் முக்கியமானது. திருக்கோவிலை இடித்த தளபதி அசவீடோ, அக்கோவிலின் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்த கணேசேக்களைக் (Ganezes) கொன்றான் என்று அவர் குறிப்பிடுகிறார். குவரோசின் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எஸ்.ஜி.பெரேரா, வேறொரு இடத்தில் வரும் “Ganez" என்ற சொல்லுக்கு “கணான்சே – வணக்கத்துக்குரிய பௌத்தத் துறவி” என்று விளக்கமளித்திருக்கிறார். திருக்கோவில்

தொடர்ச்சி... (பக்கம் -18 )



# மூதாதையரின் காலடிகள்

## ஈழத் துறை : இலங்கைத் துறை முகத்துவாரம்



பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

ஈழத்துறை என அழைக்கப்பட்டு பின்னர் இலங்கைத்துறை முகத்துவாரம் என ஆகி, இன்று சிங்கள மயப்படுத்தப்பட்டு லங்கா பட்டினமாக மாற்றப்பட்டு, நம் மூதாதையர் காலடித்தடங்கள் அழிக்கப்பட்டு, பௌத்த திணிப்பு இன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை வரலாற்றில் தமிழர்களின் வீரத்தை பறைசாற்றிய முதல் மன்னனாகப் பேசப்படும் எல்லாளன் பெயரில் எல்லாளன் துறை என வழங்கப்பட்டதாகவும் நம்ப இடம் உண்டு.

ஈழத்தில் முதன் முதல் சோழ மன்னர்களின் வரவு இந்த இடத்திலிருந்தே ஆரம்பமாகிறது. எல்லாளன் எனும் சோழ மன்னன் இந்தத் துறைமுகத்திலேயே வந்து இறங்கியதாக வரலாற்று செய்திகள் தெரிவிக்கின்றன. இங்கிருந்தே மாவலிக் கரையைக்கடந்து அங்கிருந்து பொலன்நறுவை வழியாக அனுராதபுரம் அடைந்ததாக நம்பப்படுகிறது. புவி கோள அடிப்படையில் இது சாத்தியமான ஒன்றாகவே உள்ளது. அவர்களே இதற்கு ஈழத்துறை என பெயரிட்டதாகவும் நம்பப்படுகிறது.

பண்டைக் காலத்தில் இது ஒரு வணிகத் துறையாக இருந்தமைக்கான




சான்றாதாரங்கள் இங்கு நிறையவே உள்ளன. அத்தோடு இப்பிரதேசம் புவிச் சரிதவியல் அடிப்படையில் முக்கியமான ஒரு இடமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கடல் வளம் மிக்க ஒரு இடமாகவும் இன்று வரை முக்கியம் பெறுகிறது.

பிற்கால இராஜேந்திரசோழன் படையெடுப்புகள் கூட இந்த இடத்தை, துறைமுகத்தை பயன்படுத்தியமைக்கான சான்றுகள் உள்ளன. சோழ மன்னர்கள் இலங்கைத்துறை முகத்துவாரத்தில் நிலை நிறுத்திய செம்பொன்னாச்சியம்மன் பற்றிய செய்திகள் சோழ மன்னர்களின் காளி வழிபாடுடன் தொடர்புபட்டு நிற்பதும், அவர்கள் நிறுவிய கோயிலின் இடிபாடுகளும் சிவலிங்கமும் இங்குள்ள காட்டுப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டு, வழிபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மாவலிகங்கைக் கரையில் உருவான தமிழர் நாகரிகத்தின் வாயிலாக இலங்கைத்துறை முகத்துவாரமே அமைந்திருக்கிறது.

இலங்கைத்துறை முகத்துவாரத்துடன் சேர்ந்திருக்கும் கடலோடு இணைந்திருக்கும் அழகிய சிறிய குன்று தமிழர்களின் வரலாற்று தடங்கள் பதிந்த இடம். அங்கு உள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் இரண்டாயிரம் வருசப் பழமையை உணர்த்தி நிற்கின்றன. அத்தோடு கல்லினாலான ஒரு சிறிய நீர்த்தடாகமும் அதனை அண்டிய கட்டிட அழிபாடுகளும் அகலமான செங்கற்கள் அடுக்கிய கட்டிட எச்சங்களும் கற்தூண்களும் தமிழர் பண்டைய வாழ்வியலை உணர்த்தி நிற்பவை.

வெருகல் முருகன் கோயிலோடும் அதன் வளமைகளோடும் இக் கிராம மக்களுக்கான கலசாரத் தொடர்பு என்பது ஒரு பண்பாட்டின் நீட்சியே.

ஒரு கோயில் இருந்ததற்கான



அடையாளங்கள் இன்று மூடி மறைக்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டிற்கு பின்னதான அரசியல் சூழலில் இந்த இடத்தில் ஒரு விகாரை உருவாகி, பௌத்த சின்னங்கள் உடைய வழிபாட்டு இடமாகவும்



பௌத்த யாத்திரிகர் வந்து போகும் இடமாகவும் மாறியிருக்கிறது.

2009ம் ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு ஒரு முருகன் கோயிலும் வழிபாடும் பழைய லிங்கமும் தூண்களும் புராதன தமிழர் நினைவுச் சின்னமாக இக் கிராமத்து மக்களின் வழிபாட்டு இடமாக இருந்தமை கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்று.

தமிழ் தொல்குடி மக்கள் அதிகமாக வாழும் பிரதேசமாக இருப்பதுவும் இப்பிரதேசத்தில் தமிழர் தொன்மையை வலியுறுத்தி நிற்கிறது. இக்கிராம மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் தமிழர் பண்பாட்டை அதன் வரலாற்று தொடர்ச்சியை வலியுறுத்தி நிற்கிறது.

இங்கு சரியான முறையில், தொல் பொருளியல் ஆய்வுகள் மூடி மறைக்காமல் செய்யப்படுமானால் ஈழத் தமிழர்களின் தொன்மை நாகரிகத்தின் கடல் வழிப் பயணங்களின் வரலாற்று தகவல்களைப் பெறமுடியும்.

கொட்டியாரப் பிரதேசம் ஈழத் தமிழர் நாகரிகத்தின் தொட்டில் என்பதற்கான சான்றாதாரங்கள் இலங்கைத்துறை முகத்துவாரத்திலும் கொட்டிக்கிடக்கிறது. நம் மூதாதையர்களின் காலடிகள் ஆழமாமாக பதிந்த இடங்களில் இந்த ஈழத்துறையும் முக்கியம் பெறுகிறது.



# பட்டறிவு

## மறக்கடித்தலுக்கு எதிரான போர்!

மக்களின் சிந்தனையைத் தீர்மானிக்கின்ற அதிகாரமும், ஆற்றலும் இன்று அடக்கப்படும் மக்களின் கைகளை விட்டு நழுவியுள்ளது. அவர்களால் சிந்தனையைத் தீர்மானிக்க முடிவது போல், சிந்தனையை மறக்கடிக்கவும் திசைதிருப்பவும் பொறிமுறையைக் கொண்டுள்ளார்கள். நமக்கு வெளியில் நமக்கான நிகழ்ச்சிநிரல் தீர்மானிக்கப்படுகிறது.



வேகமாக மாறிவரும் உலகில் நினைவுகளும் கூட ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு வேகமாக தாவி விடுகிறது.

யுத்த காலத்தில் நிகழ்ந்த ஒன்றை இங்கு நினைவூட்டவேண்டும்.

**வாரத்திற்கொரு செய்தியை உற்பத்தி செய்து, வைரலாக்குவதை ஒரு வியாபார தந்திரமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்தி உற்பத்தியாளர்கள். கதை உருவாக்கிகள். பரபரப்பு ஆக்கிகள்.**

முன்னை நாள் இறந்தவருக்காக அழுது ஆறுவதற்கு முன், நேற்றைய சாவு அந்த நினைவை மூடி விடுகிறது. நேற்றைய இழப்பை இன்று நிகழ்ந்த அவலம் மறைத்து விடுகிறது. நாளை வரப்போகும் அழிவை இன்றைய துயரமும் அடித்துச் செல்லக் கூடும் என்கிற நிலை இருந்தது.

இதையே அதிகார வர்க்கம் செயற்கையாகவும் நிகழ்த்தலாம். ஒன்றை மறக்கடிக்க இன்னொன்றை அந்த இடத்துக்கு நிறுவும் கைங்கரியம் அது.

ஆக... ஒன்றை மேவும் இன்னொன்று தொடர்ச்சியாகவும், இயற்கையாகவும், செயற்கையாகவும் நிகழ்ந்துகொண்டு தானிருக்கிறது. சமகாலத்தில் முனைப்பு பெறும் பேசுபொருளை அதிகார சக்திகளால் செயற்கையாகவும் திட்டமிட்டும் திசைதிருப்பிவிட முடியும். அது எங்கெங்கும் நிகழ்கிறது.

அரசியல்வாதிகள், வியாபாரிகள், பெருமுதலாளிகள், கார்ப்பரேட் கம்பனிகள், மாபியாக்கள், இன்னும் சமூக விரோத சக்திகள் இதனை தமது தந்திரோபாய வழிமுறையாகவே நுட்பமாகக் கையாண்டு வருகின்றன.

நினைவில் உள்ளவற்றை மறக்கடிப்பது என்பது இந்த நுட்பத்தின் அங்கம் தான். ஆதிக்க இனம், மதம், சாதி, நிறம், வர்க்கம் என இன்ன பிற சக்திகளும இவை அடக்கப்படும் சக்திகளை பலப் படுத்தும்" என்று நம்புகிற அடையாளங்களையும், நினைவுச் சின்னங்களை இல்லாது ஒழிக்கும் பணி வரலாறு நெடுகிலும் உலகம் முழுவதும் நிகழ்கிற ஒன்று தான்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் பௌத்த தொல்பொருள்களை அழித்தது, இந்துத்துவத்தின் பேரால் இந்தியாவில் முஸ்லிம் சின்னங்களை இந்துத்துவ தீவிரவாதக் கும்பல்கள் அழித்து வருவது, பிரபாகரன் பிறந்த வீடு கூட இருக்கக் கூடாது, போராளிகளை நினைத்து அழுவதற்கு கூட எச்சம் இருக்கக் கூடாது என்று மாவீரர் துயிலும் இல்லங்களை தரைமட்டமாக்கியது என்பன இந்த நினைவழித்தல் செயற்பாட்டின் அங்கம்தான். இன்றும் இலங்கையின் தொல்பொருள் துறை தமிழ் இன அடையாளங்களைத் திட்டமிட்டு அழித்து வருகின்ற பல செய்திகளை நாம் அறிந்துள்ளோம்.

மறக்கடிக்கச் செய்வது என்பது ஒரு அரசியல் தந்திரோபாயமாகவும், அரசியற் செயற்பாட்டாகவும் காலங்காலமாக நிகழ்ந்துவரும் ஒரு செயன்முறை. காலத்துக்கு காலம் அது வெவ்வேறு வடிவங்களை எடுத்து வருகிறது. வெவ்வேறு அளவுகளில் இயக்கப்பட்டுவருகிறது.

போராட்டங்களில் போர்த்தந்திரமாகவும் "மறக்கப்பண்ணுவது", "நினைவுகளை அகற்றுவது", "புதிய நினைவுகளை அந்த இடத்துக்கு பிரதியீடு செய்வது" என்கிற உபாயம் கைக்கொள்ளப்படுகின்றன.

ஒரு நினைவை மறக்கடிக்கச் செய்வது என்பது இலகுவானதல்ல. அதற்கான பிரதான வழிமுறையாக ஏற்கனவே "நினைவு" இருந்த இடத்துக்கு இன்னொன்றை பிரதியீடு செய்தாக வேண்டும்.

சமீபத்தேயே நமக்குத் தெரிந்த உதாரணமாகக் கொண்டால்; தமிழ் நாட்டில் மே 22 நிகழ்ந்த தூத்துக்குடி படுகொலையைச் சொல்லலாம். தமிழகத்தில் வரலாறு காணாத மோசமான அரச பயங்கரவாத சம்பவமாக கருதப்பட்டது அது. அது பற்றிய விவாதங்களும், உரையாடலும் நடந்துகொண்டு இருக்கும் போதே ரஜினி நடித்து ஜூன் 6 அன்று வெளியான "காலா" திரைப்படம் மொத்த உரையாடலையும் விழுங்கி ஏப்பமிட்டு திசைதிருப்பிவிட்டது. அது எப்படி ஒரு சமூகம் இத்தனை வேகமாக ஒரு பெரும்சோகத்தை பகிர்வதையும், பேசுவதையும் மறந்து ஒரு பொழுதுபோக்கு சினிமா ரசனைக்குள் வீழ்ந்தது என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ஒன்றை நினைவுக்கு கொண்டுவரவும், அதனை மறக்கச் செய்வதற்கும், அதற்குப் பதிலாக வேறொன்றை பிரதியீடு செய்வதற்கும் இன்று பேராயுதமாக பயன்படுத்தப்படுவது ஊடகங்களும், பொழுதுபோக்குச் சாதனங்களும் தான்.

முக்கியத்துவமில்லாத ஒன்றை முக்கியத்துவப்படுத்தி வைரலாக்கி பிரதான பேசுபொருளாக்குகின்ற பணியை ஊடகங்கள், சமூக ஊடகங்களுக்கூடாக கச்சிதமாக மேற்கொள்வதற்கான முறையியலை நுட்பமாக ஆளும் வர்க்கங்கள் பயன்படுத்துகின்றன. ஊடகங்களை, ஊடகவியலாளர்களை அதிகாரத்தாலும், பணத்தாலும் ஆட்டுவிக்கின்றன. இதனால் இந்த "மறக்கடித்தல்" செயல்பாடு அவர்களுக்கு இலகுவாகக் கைகூடுகிறது.

இன்றைய ஊடகச் சந்தையில் தம்மீது கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கு வாரத்திற்கொரு செய்தியை உற்பத்தி செய்து, வைரலாக்குவதை ஒரு வியாபார தந்திரமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்தி உற்பத்தியாளர்கள். கதை உருவாக்கிகள். பரபரப்பு ஆக்கிகள்.

சமீபத்தில் முகநூலைப் பயன்படுத்தி கேம்ப்ரிட்ஜ் அனலிட்டிகா திரிபுபடுத்துதலையும், திசைதிருப்புதலையும் எப்படி செய்தது என்பது அம்பலத்துக்கு வந்தது. முகநூலுக்கு அடிமையாகி இருக்கின்ற ஒரு பெரும் சமூகம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருகிறது. அவர்களின் சிந்தனையை வழிநடத்தும் ரிமொட்கொன்ரோல் யாரிடமெல்லாம் இருக்கிறது பாருங்கள். எப்படி குறிப்பிட்ட செய்திகளை வைரலாக்கி, எதை கொடுக்க வேண்டும், எதைத் தடுக்க வேண்டும், யாருக்கு சேரவேண்டும், யாருக்கு தடுக்க வேண்டும் என்பவற்றை அவர்கள் தீர்மானித்தது எப்படி என்பது அம்பலத்துக்கு வந்தல்லவா?

இரு கோடுகள் தத்துவம்

இந்தப் போக்கைப் பற்றி ஆழமாக விளக்குகின்ற ஒரு ஆங்கில நூல் சென்ற ஆண்டு வெளியானது. (Hit Makers: The Science of Popularity in an Age of Distraction – Derek Thompson). சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களுக்கு மிகவும் பிரயோசனப்படகூடிய நூல் அது.

நீளமான ஒரு கோட்டின் அருகில் அதைவிட நீளமான கோட்டை வரைவதன் மூலம்; முன்னைய கோடு அதன் "அதிக நீளம்" என்கிற தகுதியை இழக்கிறது. அதே பொறிமுறை தான் இங்கும். ஒன்றுக்கு இன்னொன்றை பிரதியீடு செய்வது. இது

என்.சரவணன்

இருகோட்டுத்தத்துவம்.

பல வருடங்களுக்கு முன் ஜே.வி.பி யின் சிங்களப் பத்திரிகையொன்றில் வெளியான கட்டுரையொன்றில் ஒரு அட்டவணையை வெளியிட்டிருந்தார்கள். அதாவது இலங்கையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கிரிக்கெட் போட்டி நடந்த நாட்களெல்லாம் பாண் விலையேற்றம் எப்படி நிகழ்ந்தது என்பது பற்றியது அது.

பெருவாரி மத்தியதர வர்க்க மக்கள் கிரிக்கெட் போதையேறி, கவனம் முழுவதும் ஒன்றில் குவிக்கப்பட்டிருக்கும் போது அரசாங்கம் நுட்பமாக விலையை ஏற்றியிருக்கிறது.

அரசு குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில், அந்த அரசு இன்னொரு விடயத்தை பேசுபொருளாக்கி செயற்கையாக கவனத்தை திசைதிருப்பிவிடுகிறது. அல்லது இன்னொரு பரபரப்பான விடயத்தில் மக்கள் மூழ்கியிருக்கையில் திரைமறைவில் தமது மக்கள்விரோத பணியை கச்சிதமாக முடித்து விடுகிறது.

பெருவாரி மக்களை ஓரிடத்தில் இருந்து ஒரு விடயத்தை வைரலாக்கி தொலையியக்க இன்றைய ஸ்மார்ட் போன்களின் வலைபின்னல் போதும். இதே வலைப்பின்னலை அடக்கப்படும் மக்களும் தமக்கான போராட்டத்துக்கான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டாலும் கூட; அந்த இணையத்தை தடுத்து வைக்கும் பலம் அதிகார வர்க்கத்திடம் தான் இருக்கிறது என்பதை மறந்துவிடமுடியாது.

ஒரு பிரச்சினை தீர்க்கப்படாமலே மறு பிரச்சினை வந்து அதை பின்னே தள்ளி விடுகிறது. அளவில் சிறிய பிரச்சினையை புதிய - பெரிய பிரசினையொன்று பின் தள்ளினாலும் பரவாயில்லை. ஆனால் சிறிய பிரச்சினைகள் கூட பெரும்பிரச்சினைகளை பின் தள்ளுமளவுக்கு சில நேரங்களில் நிகழ்கின்றன.

அடக்கப்படும் சக்திகள் எப்போதும் இந்த போக்குக்குப் (Tendency) பலியாகாமல் தாக்குப்பிடிப்பது இன்றைய நவீன உலகத்தில் அவ்வளவும் எளிதான காரியமில்லை. ஏனென்றால் இவற்றை இயக்கும் சக்தி அதிகார வர்க்கத்திடமே இருக்கிறது. இவற்றை உணர்ந்துகொண்டு விழிப்புணர்வுடன் பயணிப்பதே அடக்கப்படும் மக்களின் முதல் கட்டப் பணியாக இருக்கிறது.



## நரசிங்க வயிரவர் வழிபாட்டின் கருவூலம்: மட்டுநகர் எல்லை வீதி ஆலயம்



து. கௌரீஸ்வரன்

இலங்கையின் கிழக்கு மாகாணம் பன்மைத்துவமான சடங்கு வழிபாட்டு மரபுகளை முன்னெடுக்கும் மனித சமூகங்கள் வாழும் பிராந்தியம்.

குறிப்பாக மட்டக்களப்பில் வாழும் பெரும்பாலான தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் அவ்வச் சமூகங்களின் வரலாறு மற்றும் பண்பாட்டுத் தனித்துவங்களை வெளிக்காட்டும் மத்திய நிலையங்களாக அவ்வச் சமூகங்களுக்குச் சொந்தமான சடங்குக் கோவில்கள் இயங்கி வருகின்றமையினைக் காண முடிகின்றது.

மட்டக்களப்பிலே முன்னெடுக்கப்படும் தனித்துவமான சடங்கு வழிபாடுகள் தோற்றம்பெற்று, பரவலாக்கமடைவதற்குக் குறித்த சில சடங்குக் கோவில்கள் மூலமாக இருந்துள்ளன. அதாவது சடங்கு வழிபாட்டின் விதிமுறைகளைக் கூறும் பத்ததிகள் குறிப்பிட்ட சில பழமையான கோவில்களை மையப்படுத்தியே உருவாக்கம் பெற்று பரவலாகியுள்ளதை அறியமுடிகின்றது.

இந்த வகையில் ஈழத்தில் நரசிங்க வயிரவர் சடங்கு வழிபாட்டின் கருவூலமாக மட்டுநகர் எல்லை வீதியிலுள்ள, ஸ்ரீ மகா நரசிங்க வயிரவ சுவாமி கோவில் விளங்கி வருகின்றது எனலாம். அதாவது விஷ்ணுவின் அவதாரமான நரசிம்மரையும் சிவனின் அவதாரமான சரபேசுவரரையும், வயிரவ மூர்த்தங்களையும் ஒன்றிணைத்த தோற்றமாக இக்கோவிலின் மூலமூர்த்தி விளங்குவதும் இதற்காகத் தனித்துவமான சடங்கு வழிபாட்டு விதி முறைகள் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதனையும் இவ்வாலயச் சடங்கு விழாவில் காண முடியும்.

இத்துடன் மட்டக்களப்பின் பத்ததிச் சடங்குப் பண்பாட்டில் பிரதானம் பெறும் மாரியம்மன் குளுர்த்திச் சடங்கு, கெங்கையம்மன் வழிபாடு, வீரம்மாகாளி வழிபாடு, படபத்திரகாளி வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு, ஐயனார் வழிபாடு, வதனமார் வழிபாடு என்பனவும் காளவயிரவர், திரிசூல வயிரவர், கிரகசாந்தி வயிரவர் வழிபாடுகளும், புராதன மனிதர்களின் குமாரர் , மாறா தெய்வச் சடங்குகளும் இக்கோவிலின் சடங்கு விழாவில் முக்கியமானவைகளாக இடம்பெற்று வருகின்றன.

இச்சடங்கு விழாவில் சிறப்பம்சங்களாக ஆலய வரலாற்றுடன் சம்பந்தப்பட்டதான கொடி மரம் நிறுத்தும் சடங்கு, அடையாளம் எழுந்தருளும் சடங்கு, மாரியம்மன் குளிர்த்தி ஏடு படிக்கும் நிகழ்ச்சி முதலியன நடைபெற்று வருகின்றன. சடங்கு நாட்களில் இவ்வாலயத்தில் இடம்பெறும் கழிப்புச் சடங்குகள் பெரும்பாலான மனிதர்களின் நோய்களைத் தீர்த்து வருவதாக இப்பகுதி மக்களால் நம்பப்படுகின்றது.

இவ்வாறு தனித்துவங்களும் சிறப்புக்களும் கொண்டுள்ள இவ்வாலயத்தின் வருடாந்தச் சடங்கு விழா இம்மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏன் இந்த மௌனம்? அதன் எல்லை எது?

தொடர்ச்சி...

ஆளும் தரப்புகளின் அரசியல் என்பது இப்படித்தான், எதெல்லாம் சாத்தியமாக உள்ளதோ அதையெல்லாம் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும். இங்கே அறம், தர்மம், நீதி, நியாயம் என்பதைப்பற்றி யாரும் சிந்திப்பதில்லை. வெற்றியை மட்டுமே குறியாகக் கொள்ளுமிடத்தில் எப்போதும் அறத்தையும் விடத் தந்திரோபங்களைப் பற்றியே சிந்திக்கப்படுவதுண்டு.

இலங்கை அரசியல் என்பது அநேகமாக அறம் நிராகரிக்கப்பட்டதொரு களமே. இதில் எந்தத் தரப்பும் விலக்கல்ல. ஆகவே ரட்ணப்பிரிய பண்டுவைப்போன்ற சக்திகள் மேலும் மேலும் உற்பத்தி செய்யப்படலாம். ஊக்குவிக்கப்படலாம்.

இதையிட்டுத் தமிழ்ச் சமூகம் அதிர்ச்சியில் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டதைப்போல இப்பொழுது சமாதானம், ஒற்றுமை, உதவி, அன்பு, காருண்யம் என்று சொல்லிக் கொண்டு மேலும் தமிழர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் என்பது தமிழ்ச்சிந்தனையாளர்களின் கவலை.

ஆனால், என்ன செய்ய முடியும்? சரியாகச் செயற்படாத வரையும் சரியாக விழிக்காத வரையும் விடுதலை இல்லை என்பார்கள். இந்தக் குறைபாட்டை மடியிலும் மனதிலும் வைத்துக் கொண்டு புலம்புவதால் பயனேதுமில்லை.

ரட்ணப்பிரிய பண்டுவைப் பாராட்டிய – அவருக்கு நன்றி சொன்னவர்களை பாதகமாக்கும் காரியத்தில் பலரும் ஈடுபட்டிருக்கிறார்கள். இது இயலாமையின் வெளிப்பாடு. ரட்ணப்பிரிய பண்டுவைப் பாராட்டியவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் செயற்பட்ட உறுப்பினர்கள். அவர்களுக்கு போராட்டம், அரசியல், அதன் தாற்பரியம் பற்றியெல்லாம் புரியாது என்றில்லை. ஆகவே அவர்களுக்கு யாரும் புதிதாகப் பாடம் நடத்த வேண்டியதில்லை. அவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்தப் போவதுமில்லை. அதையெல்லாம் அவர்கள் கடந்து விட்டனர். அவர்களுக்குத் தேவையானதைச் செய்யாத வரை, அவர்களுடைய நிலையை மாற்றாத வரையில் ரட்ணப்பிரிய பண்டுக்கான பாராட்டும் நன்றி கூறலும் மட்டுமல்ல, இதைப்போல இன்னும் பல நிகழ்ச்சிகள் நடந்தேறியே தீரும்.

இதை எப்படி மாற்றியமைப்பது என்று சிந்திப்பதே தமிழ் அரசியல் தரப்பினருக்குரிய பணி. நொந்து கடிவதல்ல.

இந்த அலையடிப்பு ஓயமுதல் அடுத்த அலையை தலைக்கு மேலே உயர்த்தியிருக்கிறது அரசாங்கம். வன்னியின் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஜனாதிபதியினால் இந்து சமய கலாசார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தனக்கு இந்த அமைச்சுப் பொருத்தமானதல்ல. சமூக முரண்பாட்டை உருவாக்கும் நிலையே இதனால் ஏற்படும். நாட்டிலே இன்றுள்ள நிலைமைகள் மாற்றமடைந்து, எல்லாச் சமூகங்களுக்குமான சமநிலை ஒன்று உருவாக்கப்பட்ட பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம் என்று மஸ்தான் ஜனாதிபதியிடம் தெரிவிக்கவில்லை.

மஸ்தானுடைய இந்த நியமனத்தைப் பற்றி இன்னும் முஸ்லிம்களின் தரப்பிலிருந்தும் எந்த விதமான அபிப்பிராயங்களும் வெளியாகவில்லை. குறிப்பாக முஸ்லிம் புத்திஜீவிகள், மதத்தலைவர்கள் யாரும் இது குறித்து இன்னும் வாய்திறக்கவில்லை.

ஆனால், தமிழர்கள் கொந்தளிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதெல்லாம் நல்லிணக்கத்துக்கான அடையாளங்கள் அல்ல. அரசாங்கம் தவறாக– திமிர்த்தனமாக நடந்து கொள்ள முற்படுகிறது என்பதற்கான அடையாளம் என்கிறார்கள் பலரும்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோத வைக்கும் பொறியொன்றை மஸ்தானின் நியமம் மூலம் சாதுரியமாகச் செய்ய முற்படுகிறது அரசாங்கம் என்பது துல்லியமாகத் தெரிகிறது.

இதையெல்லாம் குறித்துப் பேசவேண்டியவர் சம்மந்தன். ஆனால், அவர் நீடித்த மௌனம் காக்கிறார். இந்த மௌனம் ஏன்? அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனத்த மௌனம் ஏன்? அதன் எல்லை எதுவரை?

# கடுகுக்கதை

## அவசரமான சமரசம்



மிகக் கடுமையான கோடையில் அப்பகுதி முழுவதுமே வறண்டு போயிருந்தது. குடிப்பதற்கு எங்கும் ஒரு சொட்டு நீர் கூடக் கிடைக்கவில்லை. மலைப் பகுதியில் ஓரிடத்தில் சிறிய ஊற்றிலிருந்து நீர் வந்து கொண்டிருந்தது.



கமர்தீன் வளர்த்த ஆடும், சோமசுந்தரத்தின் நாயும் ஒரே சமயத்தில் அங்கு வந்து சேர்ந்தன.

யார் ஊற்றை முதலில் கண்டது, யாருக்கு அந்த ஊற்று சொந்தம், யார் முதலில் தண்ணீர் குடிப்பது என்று இரண்டும் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக்கொண்டன.

நீண்ட நேரம் சென்றும் சண்டை ஓயவில்லை. இரண்டும் பொருதிக் கொள்கின்ற அளவு நிலைமை முற்றியது. கடிபாடு ஆகும் நிலை.

அவ்வேளை பெரும் இரைச்சல் கேட்கிறதேயென்று சத்தம் வந்த திசையை இரண்டும் அண்ணார்ந்து பார்த்தன.

மேலே பருந்துக் கூட்டமொன்று ஆலாய் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இந்த இரண்டு மிருகங்களும் சண்டையிட்டு, அடிபட்டுக் கடிபட்டு ஒன்று செத்தால் அதை உடனே தூக்கிச் செல்கின்ற நோக்கில் அவை பறந்து கொண்டிருந்தன.

நாய்க்கும் ஆட்டிற்கும் விசயம் புரிந்துவிட்டது. இரண்டும் ஒரே சமயத்தில் "நீ முதலில் தண்ணீர் குடி பிறகு நான் குடிக்கிறேன்." என்று சமரசம் செய்து, ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்து, இரண்டும் தங்கள் தாகத்தை தீர்த்துக் கொண்டன. பருந்துக் கூட்டம் ஏமாந்து பறந்து போய்க் கொண்டிருந்தது.




கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

**'அவசரப் போக்கு அநியாயமான சாவு
சமரச நோக்கு சஞ்சலமில்லா வாழ்வு'**



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 16

## கிபிர் அடிக்கும் என்று குறிசொன்ன மட்டக்களப்பு போராளி

மணலாத்தில கடைசிப் பொயின்றில இவயட சென்றியும்தான் இருந்தது. செம்மலைவரைக்கும் போக்குவரத்து பஸ் இருந்தது. இருந்தாலும் இந்தப் பொம்பிளப்பிள்ளையள் நடந்துதான் மணலாத்திலயிருந்து வருவினம். பெரும் காட்டுவழி எண்டது மட்டுமில்ல, ஏறக்குறைய முப்பது கிலோமீட்டருக்கும் கூடத்தான் தூரம். சும்மா அங்சின இங்சின போறெண்டாக்கூட அவை நடைதான். இதுதான் எனக்கு புதினமாக்கிடந்துது. எங்கட பக்கத்துப்பிள்ளையள் பக்கத்தில உள்ள கடைக்குப் போகிலும் சைக்கிள் வேணும். பிறகுதான் அவையள் நல்லாப்பிழங்கின பிறகு ஒரு கதை சொல்லிச்சினம். அவை எல்லாருக்கும் சைக்கிளோடத் தெரியாது எண்டதோட, மட்டக்களப்புக்கும் வன்னிக்குமாக அவை நடந்தே வாறதால, இது ஒரு பயிற்சியாகவும் இருக்குமாம். இது எனக்கு சிரிப்பா இருந்தாலும் நான் சிரிக்கேல்ல. ஒரு சைக்கிளை எடுத்தா ரெண்டு நாள்ள பழகிப்போட்டுப்போகலாம். அதுக்கு இவ்வளவு வியாக்கியானம் ஏன்?

இந்தப் பிள்ளையளுக்குள்ள பாரம்பரிய சிந்தனையள் ஊறிப்போய்க்கிடந்துது. இப்ப பாக்கிறமே தெனாலிராமன் கதை. அதைப்போல மூடக்கொள்கையள வைச்சிருந்தவை அதிகம். ஒவ்வொரு பிள்ளையின்ர கையிலும் ஒவ்வொருபந்து நூல் திரட்டலாம், அவ்வளவு கோயில்களின்ர கயிறுகள் கட்டியிருப்பினம்; கேட்டா மாமாங்கத்திலயிருந்து வன்னி வற்றாப்பளைவரைக்குமுள்ள எல்லாக் கோயிலுகளின்ர பேரும் வரும். மட்டக்களப்பு மாந்திரீகத்திலும் வழிபாட்டுச் சடங்குகளிலும் ஊறின சமுதாயம்தானே நான் இதை பெரிசா எடுக்கிறதில்லை.

ஆனா ஒரு மட்டக்களப்பு போராளி இரணைமடுவுக்குப் பின்னால ஒரு குக்கிராமத்தில உடுக்கடிச்சு சாத்திரஞ்சொல்லுறானாம் எண்டு கேள்விப்பட்டு, நான் பாக்கப்போனன். அந்த வாரம் புலிகளின் குரல் குயிலோசை நிகழ்ச்சிக்கு நான் தெரிவு செய்த நிகழ்ச்சி "உடுக்குச் சிந்து". இரணமடுவுக்குப்பின்னால அது ஒரு சின்ன கிராமம் சாந்தபுரத்துக்கும் மேல, இங்க ஏ9 ரோட்டால வர முடியாதபடி காடுகிடந்தது. அருகிலேயே மட்டக்களப்பு மாவீரர் குடும்பங்களுக்காக ஒரு வீட்டுத்திட்டம் உருவாகிக் கொண்டிருந்துது. நான் போய் இவரைப்பற்றி விசாரிச்சன்;




ஆள் கலியாணஞ்செய்து ஒரு பிள்ளையும் இருந்துது. அருகிலயே ஒரு ஆலமரத்துக்குக் கீழ ஒரு கோயில் சின்னதா இருந்தாலும் சீமெந்தால கட்டி அழகா பெயின்ட் அடிச்சு கலாதியாத்தான் இருக்கு. நான் போன நேரம் அவர் எங்கயோ போயிட்டார். அந்த பொமிபிளை என்னை கோயிலடியில போய் நிக்கச் சொன்னா வாற ஆக்கள அங்கதான் அனுப்பிறதாம். நானும் சாத்திரங் கேக்க வந்திருக்கிறன் எண்டு நினைச்சிட்டாள்.

நாங்களும் கோயிலடிக்குப்போக, அவனும் வந்திட்டான். ஒரு ஆமான போராளிக்கான எந்த தோற்றப் பொலிவும் அவனிட்ட இல்ல. அரையில மாறுகரை வேட்டி கழுத்தில மணிமாலை. நெஞ்சில அடந்த முடி. கையில ஒரு பெரிய சிலம்புபோல காப்பு. விபூதிப்பட்டை பென்னம் பெரிய குங்கமப்பொட்டு. ஒரு சிரிப்பு நல்ல, ஆணழகன் எண்டது அவன்ர மேனியில எழுதி ஒட்டியிருந்துது.

நான் பெரிசா அலட்டாம "தம்பி நாங்கள் ..." எண்டு துவங்க,

"தெரியும் புலிகளின் குரல்" எண்டு முடிச்சான்.

"சரி உடுக்குச்சிந்து எடுக்கவேணும்" எண்டன்.

"அம்மா நான் சாமிமேலதான் பாடுவன் உங்கட வானொலியில அதை போடமாட்டிங்கதானே" எண்டான்.

உண்மைதான் புலிகளின் குரல்ல பக்திப்பாடல்கள் நிகழ்ச்சிகள் எல்லாம் தீட்டுத்துடக்கான விசியம். பின்ன போன சீருக்கு பரவாயில்ல நாங்கள் ஆவணம் பண்ணலாம் உங்கட பாட்டுகளை சொல்லுங்கோ எண்டனா...அவன்பாவி கோயிலுக்க போய் ஒரு உடுக்கை எடுத்துக் கொண்டு வந்து எனக்கு முன்னால இருந்தான். நான் தொலைக்காட்சி கமராக்காரனையும் கூட்டிக்கொண்டு போயிருந்தன். எல்லாம் சரிபண்ணி எடுத்தம். கணீரெண்ட குரல்ல அவன் உடுக்கடிச்சுப்பாட நானே என்வசமிழந்து கொண்டிருக்கிறதை உணர்ந்தன். வேடிக்கை பாக்க கூடியிருந்த சனமும் அப்பிடித்தான்.

பாடிக் கொண்டிருந்தவன் பாட்டை நிறுத்திப்போட்டு,

"ஒரு பிரச்சனை நடக்கப்போகுது எல்லாரும் கலைஞ்சு போங்க கூட்டம் போடாவேணாம் வெரசாப்போங்க உங்க பிள்ளகுட்டியளப்பாருங்க" எண்டு கட்டளையிட்ட குரல்ல கத்தினான். சனமும் ஒண்டும் கதைக்காம உடன கலைஞ்சுபோட்டுது. போகேக்க ஒருவன் எங்களையும் பாத்து "கெதியாப் போங்கம்மா அவரு சொன்னா சரியா இருக்கும்" எண்டிட்டு ஓடினான். நாங்கள் சாவகாசமாக அவனைப் பேட்டியெடுக்க பாத்தம். அவன் சொன்னான், "பிறகு வாங்கம்மா இப்ப வேணாம்" எண்டு. நாங்கள் திரும்பி வந்துட்டோம்.

அவன்ர பேர் செல்வராசு. மட்டக்களப்புத்தான். அவன் பாடினதும் அம்மன் பாட்டுத்தான். அதனால அதை ஒலிபரப்ப முடியாது எண்டது தெரிஞ்சாலும் ஒரு போராளி எண்ட முறையில அதை ஆவணப்படுத்த பாத்தன். ஆனா நாங்க வந்த கொஞ்ச நேரத்தில அங்க கிபீர் விமானங்கள் ரெண்டு வந்து எட்டுக்குண்டுகளைப் போட்டுது. ரெண்டு பேர் செத்து, நாலைஞ்சு பேர் காயம், ஆனாலும் காட்டோரமாவே குண்டுகள் விழுந்ததால அந்த கிராமம் தப்பிற்றுது. செல்வராசுவ நான் பிறகும் தேடிப்போனன் . அவனைத்தேடி பெரிய பெரிய இயக்க உறுப்பினர்களெல்லாம் வாறவையாம். அவன் சொன்னாப் பிசகாதாம். களத்துக்குப் போகமுதல் இவனட்ட குறிகேட்டவையும் உண்டெண்டு அவனே சொல்லியிருந்தான். திடீரெண்டு குடும்பத்தோட காணாமப்போயிற்றான்.

**தமிழ்க்கவி**

---

தொடர்ச்சி...

## அசவீடோ அழித்த அருஞ்சிற்பக்கூடம்!
## (வரலாற்றில் திருக்கோவில் - பாகம் 02)

ஆலயச்சூழலில் இன்றுவரை எந்தவொரு பௌத்தத் தொல்லியல் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டதில்லை என்பதால் அந்த விளக்கம் இங்கு பொருந்தாது..
என்றால் கணேசே என்பதற்கு வேறென்ன பொருள் தான் கொள்ளமுடியும்? ஒரேயொரு சாத்தியமே இருக்கிறது. கணிகை!
கணிகையர், பழங்காலக் கோவில்களில் நடனம், கலைத்தொண்டு என்று ஊழியம் செய்து வந்த பெண்கள். சுந்தரமூர்த்தி நாயனாரின் மூத்த மனைவி பரவையார் கணிகையர் குலத்தவர் தான். கணிகையர் சோழ - பாண்டிய ஆட்சிக்காலத்தில் அரசனுக்கு அடுத்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்களையே "தளிச்சேரிப் பெண்டுகள்" என்று விளித்து தஞ்சைப்பெருங்கோவிலில் குடியமர்த்தினான் இராஜராஜசோழன். மன்னராட்சி மறைந்த பிற்காலத்தில் இவர்களது பரம்பரையினர் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு இழிதொழில் செய்யும் பரிதாப நிலையை அடைந்தாலும், கணிகையரின் அன்றைய மதிப்பு மிக்க வாழ்க்கை, அவர்களது செல்வச்செழிப்பு பற்றி தமிழகக் கல்வெட்டுகள் கதை கதையாகச் சொல்கின்றன. இலங்கையில் கூட மாத்துறை தேனவரை நாயனார் கோவிலிலும், மாவிட்டபுரம், பொன்னம்பலவாணேச்சரம் முதலிய தலங்களிலும் வசித்த கணிகையர் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

இப்படிப் பார்த்தால், குவரோசின் 'திருக்கோவில் கணேசேக்கள்' கணிகையராகவே இருக்கவேண்டும். கோவிலுக்கு ஊழியம் செய்த கணிகையர் பரிதாபமாகக் கொல்லப்பட்டதை குவரோஸ் விதந்து குறிப்பிட அதிக வாய்ப்பு இருக்கிறது. கோவிலைக் கொள்ளையிட்டுச் சூறையாட வந்தவர்கள், பெண்களைக் கண்டால் சும்மா விட்டா சென்றிருப்பார்கள்?

கிடைக்கின்ற இந்தக் குறிப்புகளே குலைநடுங்கச் செய்கின்றன. குவரோஸ் திருக்கோவில் கொள்ளையடிக்கப்பட்டு சுமார் எழுபது ஆண்டுகளுக்குப் பின் இந்தக் குறிப்பை எழுதுகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கோவிலும் அதன் அழகிய சிற்பங்களும் சிதைக்கப்பட்டன; கோவிற்பெண்டிர் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்; கோவிலைச் சூழ வாழ்ந்த மக்கள் அஞ்சி இடம்பெயர்ந்து விட்டார்கள்; என்ற மூன்றே மூன்று செய்திகளே 'வேறென்ன நடந்திருக்கும்' என்று ஊகிக்கப் போதுமானவை.

திருக்கோவிலில் மட்டுமல்ல; பெரும்பாலான ஆலயங்களில், பொதுவெளிகளில் இன்றும் இத்தகைய அராஜகங்கள் நிகழ்ந்துகொண்டு தான் இருக்கின்றன. மனிதனின் கீழ்மை வெளிப்படும் இந்தக் கொடுஞ்செயல்களுக்குப் பொருள் தான் என்ன? கருவறைக்குள் எட்டிப் பார்த்துக் கேட்டால், ஆயிரமாயிரம் ஆண்டுகள் மாறாத அழகுப்புன்னகையுடன் அமைதியாக அமர்ந்திருக்கிறான் அந்தக் கள்வன். அதுவும் சரி தான். மானுடர்கள் எளியவர்கள் நாம். நமக்குத் தான் காலத்தின் மர்ம முடிச்சுகள் புரிவதில்லை. அவனுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டா, என்ன?

## ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை

தொடர்ச்சி...

கடந்த மே மாதம் 24ம் திகதி ஞானசார தேரரை குற்றவாளியாக அறிவித்து ஹோமாகம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

2016 ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி இதே நீதிமன்ற வளாகத்தில் வைத்து சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தியதாக ஞானசார தேரர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரிக்கப்பட்டது.

அதன்படி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஹோமாகம பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஞானசார தேரர் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

இந்த சிறைத்தண்டனை 6 மாதத்தில் பூர்த்தியடையலாம்.



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## அயர்ச்சியின்றி இயங்கும் இலக்கியப் பேராசிரியர் செல்லையா யோகராசா

வாகனவிபத்தொன்றில் அவரது அன்புத்துணைவியும் அருமைக்குழந்தையும் காயமடைகின்றனர். துணைவி கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் குழந்தை மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்படுகின்றனர்.

இருவரும் தெய்வாதீனமாக உயிர்தப்புகின்றனர். எனினும் மேலதிக சிகிச்சைகளுக்காக மேற்கிலும் கிழக்கிலும் அனுமதிக்கப்படுகின்றனர்.

குடும்பத்தலைவனோ, ஊண் உறக்கமின்றி பஸ்ஸிலும் ரயிலிலும் பயணித்து இருவரையும் பராமரிக்கிறார். தனது பல்கலைக்கழக விரிவுரைப்பணிகளையும் கவனிக்கிறார். எழுதுகிறார். வாசிக்கிறார். விரிவுரைக்குத் தேவையான குறிப்புகளை பதிவுசெய்கிறார்.

அவருக்கு அவரது குடும்பம் மாத்திரமல்ல, அவரது மாணவர்களும் முக்கியமானவர்கள். இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில் நிதானமாகப் பேசுகிறார். பதற்றமின்றி இயங்குகிறார்.

அந்த நிதானம் இயல்பிலேயே அவருக்குரிய குணாம்சம்! அதிர்ந்து பேசத்தெரியாத பண்புகளே அவரது பலம். எளிமையாக பழகும் நெகிழ்ச்சியே அவரது வலிமை! அவர்தான் பேராசிரியர் செ. யோகராசா.

ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமன்றி புகலிட இலக்கிய உலகிலும் மிகுந்த கவனிப்புக்குள்ளான திறனாய்வாளர். அவரால் எழுதாமலும் வாசிக்காமலும் இருக்கவே முடியாது. அவருக்காக அல்ல, மற்றவர்களுக்காக எழுதிக்கொண்டும் வாசித்துக்கொண்டுமிருப்பவர். மாணவர்களுக்காகவும் இலக்கிய உலகிற்காகவும் தன்னை அவ்விதம் வடிவமைத்துக் கொண்டவர்.

"கருணை யோகன்" என்ற பெயரிலேயே இவர் எனக்கு 1972 ஆம் ஆண்டளவில் அறிமுகமானார். அக்காலப்பகுதியில் நானும் இலக்கியப்பிரவேசம் செய்திருந்தமையால், இவரது எழுத்துக்களை மல்லிகையில் படித்துவிட்டு கொழும்பு சென்று அறிமுகமாகி நண்பனானேன்.

அக்காலப்பகுதியில் இவர் கொழும்பு -07 இல் நகரமண்டபத்திற்கு அருகிலிருந்த தபால் நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அன்றுமுதல் எனது நெஞ்சத்துக்கு நெருக்கமான இலக்கிய நண்பராக விளங்குகிறார். இலங்கையில் வடமராட்சி பிரதேசம் பல இலக்கிய ஆளுமைகளையும் கல்விமான்களையும் பெற்றெடுத்த மண். 1949 ஆம் ஆண்டு, கரணவாய் கிராமத்தில் செல்லையா - இலட்சுமி தம்பதியரின் செல்வப்புதல்வனாக பிறந்திருக்கும் இவர், தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்தவர்.

பாடசாலைப் பருவத்திலேயே கவிதைகள் எழுதத்தொடங்கியிருக்கும் கருணையோகன், தமிழில் கலைமாணி பட்டத்தினையும் அதனையடுத்து இளந்தத்துவமாணி பட்டத்தினையும் பெற்றுக்கொண்டு தபால் நிலையத்தில் தனது தொழில் வாழ்வைத் தொடங்கினார்.




இவரைப்போன்று எனக்குத்தெரிந்த சில இலக்கியவாதிகள் அக்காலப்பகுதியில் தபால் நிலையங்களில் பணியாற்றிவந்தனர். (அமரர்) நாகேசு தருமலிங்கம், அ.யேசுராசா, ரத்னசபாபதி அய்யர் முதலானோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். அவர்கள் இறுதிவரையில் தபால் நிலையங்களில்தான் பணியாற்றிவந்தனர்.



ஆனால், கருணை யோகன் மாத்திரம் தனது திசையை மாற்றிக்கொண்டார். கொழும்பிலும் அதன்பின்னர் மாஹோவிலும் தபால் நிலையங்களில் பணியாற்றிவிட்டு, பட்டதாரி ஆசிரியராக மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் புதிய பணியேற்றார். எந்தத்தொழிலில் இருந்தாலும் தேடலுக்கும் ஆய்வுக்கும் என்றே காலத்தை தீவிர இலக்கியம் நோக்கித் திருப்பியிருந்ததுடன் கல்வி தொடர்பாகவும் மேலதிக தகைமைகளை வளர்த்துக்கொள்வதில் பேரார்வம் காண்பித்தார். மலையகத்திலேயே இவருக்கு வாழ்க்கைத்துணை கிடைத்தது.

தலவாக்கலையைச்சேர்ந்த விஜயதிலகிக்கும் இவருக்கும் ஏகபுதல்வி சுவஸ்திகா. தாயும் மகளும் ஒரு கோரவிபத்தில் சிக்குண்ட காலப்பகுதியில் நான் இலங்கையில் இருக்கவில்லை. அங்கிருக்கும் காலப்பகுதியில் எங்காவது ஒரு இலக்கியக்கூட்டத்தில் இவரைப்பார்ப்பேன். அவுஸ்திரேலியாவுக்கு 1987 இல் நான் வந்துவிட்ட பின்னரும், இவருடன் கடிதத்தொடர்புகளை பேணி வந்திருக்கின்றேன். கருணை யோகன் எனக்கு எழுதிய கடிதம் ஒன்று எனது கடிதங்கள் நூலிலும் இடம்பெற்றுள்ளது.

26-12-1994 ஆம் திகதி இவர் எனக்கு எழுதிய கடிதம் இன்றும் எனது வசம் பத்திரமாக இருக்கிறது. " வேலைப்பளு, இலக்கியப்பளு, குடும்பப்பளு என இங்கு எமக்கே நேரமில்லாதபோது " புலம்பெயர்ந்து" வாழ்வோருக்கு அந்த கம்பியூட்டர் உலக வாழ்வில் எங்கே நேரம்வரும்..? என்ற கேள்வியுடன் இலங்கை இலக்கியப் புதினங்களையும் எழுதியிருந்தார். முக்கியமாக மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் பித்தன் கே. ஷா அவர்களின் மரணச்செய்தியையும், அவரது நூலொன்றை இரண்டு தமிழ்ப்பேசும் அரசியல்வாதிகள் ( அமைச்சர்களாகவும் இருந்தவர்கள்) வெளியிட்டுத்தருவதாக பொய்வாக்குறுதி வழங்கி ஏமாற்றிய தகவலையும், இறுதியில், மல்லிகைப் பந்தல் வெளியீடாகவே அந்தநூல் வெளியான செய்தியையும், அதனைக்கூடப்பார்க்காமல் அந்த எழுத்தாளர் மறைந்துவிட்ட துயரத்தையும் பகிர்ந்திருந்தார்.

மட்டக்களப்பு வாசகர்வட்டம், அன்னாருக்காக நினைவஞ்சலிக்கூட்டம் நடத்திய செய்தியும் அந்தக்கடிதத்தில் இடம்பெற்றிருந்தது. எனக்கு அவர் எழுதும் கடிதங்களில் மட்டக்களப்பு புதினங்கள் இருக்கும்.

வடமராட்சியில் பிறந்து வளர்ந்து, கிழக்கிலங்கையில் காலூன்றியிருக்கும் இந்த இனிய இலக்கிய நண்பர், ஈழத்தின் அனைத்துப்பிரதேச தமிழ், முஸ்லிம்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

எழுத்தாளர்களிடம் மட்டுமன்றி சிங்கள எழுத்தாளர்களிடமும் நன்மதிப்பு பெற்றவர். ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்தபின்னர் தோன்றிய புலம்பெயர் இலக்கியம் - புகலிட இலக்கியம் தொடர்பாகவும் திறனாய்வு செய்திருப்பவர்.

நான் இலங்கையிலில்லாத காலப்பகுதியில் எங்கள் நீர்கொழும்பூரில் நடந்த இலக்கியக் கருத்தரங்கில் தனது உரையின் தொடக்கத்தில் என்னை நினைவுபடுத்தியே பேசியிருக்கிறார். இவ்வாறு என்னுடன் அந்நியோன்னியமாக உறவாடியிருக்கும் இவருடைய குடும்பத்தில் 2005 ஆம் ஆண்டு நிகழ்ந்த அந்த கோரமான விபத்துச் சம்பவம் பற்றி அறிந்ததும் ஆறுதல் தெரிவித்து கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்.

இலங்கை சென்ற வேளையில் கொழும்பு மருத்துவமனையில் இவரது அன்புத்துணைவியாரையும் பார்த்தேன். மினுவாங்கொடைக்கு அருகாமையில் உடுகம்பொலை கிராமத்தில் கொரஸ என்னும் இடத்தில் ஸ்ரீசுதர்மானந்த விஹாரையின் பிரதம குரு தமிழ் அபிமானி வண. பண்டிதர் ரத்னவன்ஸ தேரோ அவர்கள் நோயுற்றிருப்பதாக அறிந்து அவரையும் பார்க்கச்சென்றபோது யோகராசாவும் உடன்வந்தார்.

மட்டக்களப்பிலிருந்து தன்னைப்பார்க்க ஒரு விரிவுரையாளர் வந்திருப்பதை அறிந்து அந்த பௌத்த துறவி நெகிழ்ந்துவிட்டார். அவரால் யோகராசாவையோ என்னையோ பார்க்கமுடியவில்லை. அவரது கண்பார்வை முற்றாக செயல் இழந்திருந்தது.

அந்த நிலையிலும் அந்தத்துறவி எம்மை கிராமவாசிகள் மூலம் உபசரித்தார். இவ்வாறு எனது பயணங்களிலும் இணைந்திருந்தவர்தான் நண்பர் யோகராசா.

நாம் அவுஸ்திரேலியாவில் 1988 இல் ஆரம்பித்து இன்றுவரையில் தொடர்ந்து இயங்கவைத்துக்கொண்டிருக்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற தொண்டு நிறுவனத்தின் மட்டக்களப்பு பிராந்திய மாணவர் கண்காணிப்பாளராகவும் யோகராசா சமூகத் தொண்டுணர்வோடு இணைந்திருந்தார்.

கிழக்கிலங்கையை 2004 இறுதியில் சுனாமி கடற்கோள் அநர்த்தம் கோரமாக பாதித்திருந்த வேளையில் மட்டக்களப்பு, செங்கலடி, கல்முனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு முதலான பிரதேசங்களுக்கெல்லாம் சென்றிருந்தேன். கிழக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரவீந்திரநாத் துணைவேந்தராக அச்சமயம் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

அவர் முன்னிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 25 மாணவ மாணவியரை எமது இலங்கை மாணவர் கல்வி நிதியம் பொறுப்பெற்று தொடர்ச்சியாக நிதியுதவி வழங்கியது. இச்சந்தர்ப்பங்களிலும் நண்பர் யோகராசா எமக்கு தக்க ஆலோசனைகளை வழங்கினார்.

இறுதியாக 2017 ஆம் ஆண்டும் கிழக்கிலங்கை பயணித்தவேளையிலும் யோகராசா எம்முடன் மட்டக்களப்பு, கன்னங்குடா, கல்முனை, பெரியநீலாவணை முதலான பிரதேசங்களுக்கும் வந்தார்.

2005 - 2009 காலப்பகுதியில் எமது கல்வி நிதியத்தின் உதவிபெற்ற கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் பேராசிரியர் யோகராசாவை பெரிதும் மதித்துப்போற்றியதையும் அவதானித்திருக்கின்றேன்.

நாம் 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொழும்பில் நான்கு நாட்கள் நடத்திய சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலும் கலந்துகொண்டு கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பித்திருக்கும் பேராசிரியர் யோகராசா, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிலரையும் தன்னுடன் அழைத்துவந்திருந்தார்.

மாணவர்களும் இலக்கியத்தின் பால் திரும்பவேண்டும் என்பதிலும்

தொடர்ச்சி... (பக்கம் -00 )

# 'ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார்' பாத யாத்திரிகர் சங்கத்தின் 55ஆவது கதிர்காமப் பாத யாத்திரை

சங்கத் தமிழரின் சொந்தத் தெய்வம் முருகன். கபிலர், பரணர், நக்கீரர் போன்ற சங்கப் புலவர்கள் இயற்கையின் இன்ப லாகிரியை கொற்றவை மைந்தனாகவும், குன்றுதோறும் ஆடும் குமரக் கடவுளாகவும் கண்டு முருக வழிபாட்டிற் திளைத்தவர்கள்.

ஈழத் தமிழனின் தொன்மையான வாழ்வியல் அடையாளத்தைப் பறைசாற்றி நிற்கும் மறைக்க முடியாத எச்சமாகத் திகழும் "கதிர்காமம் பேராலயம்" குன்றக் குமரனின் ஏழாவது படை வீடாக உலகத் தமிழர்களால் உவமிக்கப்படுகிறது.

வடபுலம் தொடங்கி கிழக்குப் பிரதேசம் ஈறாக வாழும் அனைத்துச் சைவத் தமிழர்களினதும் இறை நம்பிக்கையின் குவி மையமாய், ஆற்றாமையால் சோர்ந்துவிட்ட தமிழ் உறவுகளுக்கு ஆற்றுப்படுத்தும் கடவுளாய் கதிர்மலை வேலவன் அபயக் கரம் நீட்டி அரவணைத்து நிற்கிறான். இதனால் கணக்கிட முடியாத காலங்காலமாய் அவர்கள் அந்தக் குறமகள் மணாளனைக் கண்டு களித்து இன்புறவேண்டும் எனும் அவாவில் ஆண்டுதோறும் பாதம் நோக, வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து, ஆபத்தான ஆரண்யம் கடந்து, கொடிய மிருகங்களின் கொண்றுண்ணும் தன்மை அறியாது பல நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்து கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரையை மேற்கொள்கிறார்கள்.



முருகவேள் அகத்தியர் தொடங்கி கபிலர், பரணர், நக்கீரர், புலஸ்தியர், போகர், கோரக்கர், கல்யாண் பாபா போன்ற சித்த புருஷர்கள் இந்தியாவில் இருந்து உகந்தை மலை வந்தடைந்து அங்கிருந்து கதிர்காம வேலவனைக் காண யாத்திரை செய்ததாக வரலாற்று ரீதியாக அறுதியிட்டுக் கூறமுடியாத கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. கி.பி 16ஆம் நூர்ற்றாண்டில் அருணகிரியார் "மருவு கதிர்காமப் பெருமாளுக்கு" திருப்புகழ் பாடியது நாம் அறிந்ததே. யோகர் சுவாமிகளின் யோக பாலகனாக கதிர்காம முருகன் இருந்ததனால் அவர் அடிக்கடி தன்னந்தனியனாக இவ்வடர்ந்த வனத்துள் சஞ்சரித்து, யத்திரை செய்து கந்தனைத் தரிசித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் வாழ்க்கைப் போக்கில் கதிர்காமக் கந்தனைச் சரண்புகும் பாத யாத்திரை நிகழ்வானது ஒரு தொடர் பண்பாடாக, ஆண்டுதோறும் எதிர்பார்த்து ஏங்கியிருந்து ஆனந்தக் களிப்பில் ஆரண்ணியம் புகுந்து ஆண்டவனைத் தரிசித்து மீழும் அங்கமாக வளர்ந்து வருகிறது. இவ்வகையில் மட்டக்களப்பு நகரின் வட திசையில் திராய்மடு என்ற கிராமத்தில் வாழ்ந்து, அருள் ஒளி பரப்பி சமாதியாகிவிட்ட கலியுக சித்தர் "செஞ்சடைப் பெருமான் சடையப்ப சுவாமி" அவர்களால் இற்றைக்கு 55 ஆண்டுகளுக்கு முன் கதிர்காமம் நோக்கிய ஒரு பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. இவர் தன் சீடர்களான எண்மரோடு 1963ஆம் ஆண்டில் இந்த யாத்திரையை ஆரம்பித்ததாக முதல் யாத்திரையில் பங்கேற்ற சடையப்பரின் நேரடிச் சீடரும், தற்போதைய குரு சுவாமியுமாகிய "விஜயசிங்கம் அப்பாஜீ" அவர்கள் கூறுகிறார். "பத்து நாட்கள் நடந்து பதி சேர்"; என்னும் சடையப்ப சுவாமிகளின் வாக்கிற்கு அமைய அந்த யாத்திரை திருக்கோயில் முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து எதுவித ஆபத்து உதவிகளுமற்ற அக்கால அடர்ந்த வனத்தைக் கடந்து பத்தாம் நாள் கதிர்காமப் பதியை எட்டியது. இதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் யாத்திரை அடியார்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க சடையப்பரின் வழிவந்த அவரது நேரடிச் சீடரான விஜயப்பா சுவாமிகளிடம் சடையப்ப சுவாமிகள் யாத்திரைப் பொறுப்பை ஒப்படைத்தார். ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார்மீது கொண்ட அளவு கடந்த பற்றுதலால் இந்த யாத்திரிகர் கூட்டத்தினருக்கு "ஸ்ரீமாமாங்கப் பிள்ளையார் பாத யாத்திரிகர் சங்கம்" எனப் பெயர் சூட்டப்பட்டது. தொடர்ந்த காலங்களில் விஜயப்பா சுவாமிகளது தலைமையின் கீழ் யாத்திரிகர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் கூடிக்கொண்டு செல்லும் வேளை சடையப்ப சுவாமிகள் சமாதியுற்றார். தற்போது ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு பக்தர்கள் வருடாவருடம் திருக்கோயிலிலிருந்து ஆரம்பித்து பத்தாம் நாள் கதிர்காமத்தைச் சென்றடைதல் வரையிலான இந்த யாத்திரையில் பங்கேற்கின்றனர். கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை தொடங்கி மட்டக்களப்பின் ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள அடியார்கள் பலர் இந்த யாத்திரையில் பங்கேற்கின்றனர். யாத்திரை ஆரம்பமாவதற்கு முன் தலைமைச் சுவாமி அவர்களால் கண்டிப்பான உத்தரவுகள் பல பிறப்பிக்கப்படுகின்றன. அந்த உத்தரவுக்குக் கட்டுப்பட்டே யாத்திரிகர்கள் தங்கள் யாத்திரையைத் தொடரவேண்டுமென்பது சங்கத்தின் விதியாகவுள்ளது.

யாத்திரையில் ஈடுபடும் அடியார்கள் யாத்திரைக் காலங்களில் காவியுடைதாரிகளாக மாறவேண்டும், பயணத்தில் கொண்டு செல்லும் பொதிகள் கட்டாயமாக காவி நிறமுடைய "அடப்பையாக" இருக்கவேண்டும், ட்றவலிங் பேக்குகள் தவிர்க்கப்படுகின்றன. பத்து நாள் யாத்திரையின் இராத்தங்கல் தரிப்பிடங்களில் அனைத்து அடியார்களும் கூட்டுப் பிரார்த்தனையிலும், தியான



வழிமுறைகளிலும், யாத்திரையின் மகத்துவம் பற்றிய விளக்கவுரை நேரங்களிலும் பங்குகொள்ள வேண்டும், சித்தர்கள் வழிவந்த குரு சிஷ்ய பாவனையில் மேற்கொள்ளப்படும் இப் பாரம்பரிய யாத்திரையில் குருவின் முடிவே இறுதியானது. இவ்வாறான கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து யாத்திரையை மேற்கொள்ளும் ஆயிரக் கணக்கான அடியார்களுக்கு மூன்று வேளையும் நிறைவான உணவு வழங்கப்படுகிறது. பக்தர்களுக்கான உணவை உரிய நேரத்துக்குச் சமைப்பதற்கென்றே ஒரு குழு சேவையாற்றுகின்றது. பத்து நாட்களுக்கான உணவுப் பொருட்கள் சமையலுக்கான பாரிய பாத்திரங்கள் என்பவற்றைச் சுமந்துகொண்டு, "டிராக்டர்"வாகனமொன்று யாத்திரிகர்களின் பின்னாலேயே செல்கிறது. இவ்வாறு ஏகோபித்த அடியார்களை ஒன்று சேர்த்து, ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டவர்களாக சங்கமத்தினரை மாற்றியமைத்துத் தன் குருநாதர் இட்ட கட்டளையின்படி வருடாவருடம் இம்மாபெரும் யாத்திரைப் பணியைச் செவ்வனே நிறைவேற்றும் குரு சுவாமி "அப்பாஜீ" அவர்கள் பக்தியோடியைந்த பாராட்டுக்குரியவர்.

திராய்மடுக் கிராமத்தில் "செஞ்சடைப் பெருமான் சடையப்ப சுவாமிகள்"; வேல்வைத்துத் தவமியற்றிய இடம் தற்பொழுது முருகக் கடவுளின் பேராலயமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வங்கக் கடலின் அண்மையில் பனை விருட்ஷங்களின் நிழற் படுகையூடே நெய்தல் நிலச் சீதளக் காற்று மேனியை வருடிச் செல்ல அமைதியை விரும்பும் பக்தர்களுக்கு இவ்வாலய வளாகம் ஒரு கற்பக தருவாகக் காட்சி தருகிறது. முருகன் ஆலயத்தின் வலது புறத்தில் சடையப்பப் பெருமான் சமாதியாகியுள்ளார். ஆலயத்தின் இடது புறத்தில் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாத யாத்திரை சங்கத்தினரது ஆச்சிரமமும், அன்னதான மடமும் அமைந்துள்ளன. இவ்வாச்சிரமத்தை எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் சடையப்பரின் சீடர் விஜயப்பா சுவாமியவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்.

இவ்வருடம் தொடரப்படவிருக்கும் யாத்திரையானது 55ஆவது ஆண்டு நிறைவை எட்டி நிற்கிறது. எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி காலை வேளை ஆரம்பிக்கும் இந்த யாத்திரை, ஆரம்ப தினத்தன்று திராய்மடு ஆச்சிரமத்தில் ஒன்று கூடலுடனும், அன்னதானத்துடனும், சடையப்பரின் சமாதிப் பூஜையுடனும் தொடங்கப்பட்டு அன்று பிற்பகல் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையும். அன்று இரவு ஆலய வீதியில் தரித்திருக்கும் பக்தர்கள் அடுத்த நாள் ஜூலை மாதம் இரண்டாம் திகதி அதிகாலை வேளை மாமங்கைக் குளத்தில் தீர்த்தமாடி சடையப்பரது யாத்திரை வேலின் முன்னால் புனித யாத்திரை மாலையை குரு சுவாமி அப்பாஜீயின் திருக்கரங்களால் அணியப் பெற்றவர்களாக காலை எட்டு மணிக்குக் காத்திருக்கும் பஸ் வண்டிகளில் ஏறி திருக்கோயில் முருகன் ஆலயம் நோக்கிப் புறப்படுவார்கள். அங்கிருந்து மூன்றாம் திகதி அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளையில் பாத யாத்திரை ஆரம்பமாகும். ஆறாம் திகதி உகந்தை மலையைச் சென்றடையும் அடியார்கள் ஏழாம் திகதி கந்தவேளின் கடம்ப வனத்துள் புகுவார்கள். இடையில் இரு நாட்கள் மாணிக்க கங்கையின் வனப்புமிக்க பிரதேசமான யாழை ஆற்றங்கரையில் தரித்திருந்து ஜூலை மாதம் பதின்மூன்றாம் திகதி கதிர்காம முருகனின் கொடியேற்ற நாளன்று அப்புனித பூமியில் கால்பதித்து, கலியுக வரதனாம் கந்தப் பெருமானின் வள்ளி தேவயானை சமேத திருக்கோலத்தைத் தரிசித்துவிட்டு மீண்டும் வீடடைவார்கள்.

சிரவி

## சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு : 0771837646



## கட்டிளமைப் பருவ உளநலம் 08

# பரீட்சைக்கால நெருக்கீட்டு முகாமைத்துவம்

நெருக்கீட்டு முகாமைத்துவத்தில் மிகப்பிரதானமானது நெருக்கீட்டைப்பற்றி பெறுகின்ற அறிவாகும். இதற்கு பாடசாலைச் சமூகம் உளநலத்துறை சார்ந்த வைத்தியர்கள், ஆலோசகர்கள், உள சமூக சேவையாளர்களை அழைத்து நெருக்கீட்டு கல்வியையும், அதன் முகாமைத்துவ முறைகளையும் கற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஒரு நாளின் இருபத்திநான்கு மணிநேரங்களை சரியாக முகாமைத்துவம் செய்ய சிறு வயது முதலே பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும். பரீட்சைக்கான தயார்ப்படுத்தலின் பாடவிதானங்களை ஆறு மாதத்திற்கு முன்னரே பூர்த்தி செய்து மிகுதி காலங்களை கடந்தகால வினாக்களை செய்வதற்கும், மீட்டல் வகுப்புகளிற்கும் செலவு செய்தல். தெரியாத பாடங்களை, கடினமான விடயங்களை பொருத்தமான ஆசிரியர்,



சக மாணவர்கள் மூலம் விளக்கம் பெற்றுக்கொள்ளுதல். அநாவசியமான மேலதிக வகுப்புகளிற்கு விடைகொடுத்து, சுயகற்றலிற்கான நேரத்தை அதிகரித்தல். ஒருங்கமைக்கப்பட்ட நேர அட்டவணையின்படி பாடங்களை கற்றல், கற்பதற்கு பொருத்தமான அறையை தெரிவு செய்து அதனுள் ஒரு மேசை, அலுமாரி, கரும்பலகை போன்ற தேவையான பொருட்களை மட்டும் வைத்திருத்தல். காலையிலும், மாலையிலும் அதனை தூய்மைப்படுத்தி, வாசைன குச்சிகள் மூலம் நறுமணம் மிக்கதாக மாற்றுதல். தேவையான பாடப்புத்தகங்கள், கொப்பிகள் தவிர ஏனையவற்றை அலுமாரியில் வைத்திருத்தல். கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கரும்பலகையில் ஆசிரியர் போல கற்பிக்கும் முறையூடாக செய்து பழகுதல். கைபேசி, வானொலி, MP3 போன்றவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஓய்வு கொடுத்தல். நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை படித்து பின் பத்து நிமிடங்கள் ஓய்வு எடுத்தக் கொள்ளுதல். தலையிடி, தலைக்குத்து உள்ள போது வீட்டுக்கு வெளியில் சென்று வானத்தில் நிலா, நட்சத்திரங்களை பார்ப்பது, இது குறுகிய பார்வைக்காக சுருங்கிய கட்புல தசைகளை தளர்த்துவதற்கு உதவும் அல்லது குட்டி தூக்கம் போட்டு எழுதல், இலகுவில் ஞாபகப்படுத்த சில குறிப்புகள், சங்கேத தொடர்களை உருவாக்கிக் கொள்ளுதல், நல்ல நண்பர்களுடன் பாடங்களை பகிர்ந்து அவர்களிடம் இருந்து பொருத்தமான விளக்கங்களை பெற்றுக்கொள்ளுதல்.

ஞாபகப்படுத்த வேண்டிய படங்கள், வரைபுகளை படிக்கும் அறையின் சுவரில் ஒட்டி, வீட்டில் ஓய்வான போது அவற்றை அவதானித்தல். ஐந்து நண்பர்கள் / நண்பிகள் கொண்ட சிறிய குழுக்களை உருவாக்கி, வீட்டில் அல்லது பாடசாலையில கடந்த கால வினாத்தாள்களை, செய்து பார்த்தல். இவை வெற்றிகரமாக பரீட்சைக்கு தயார்ப்படுத்த உதவும்.

### பரீட்சை நாளன்றும், மண்டபத்திலும்:-

பரீட்சைக்கு முதல் நாள் புதிய விடயங்கள், தெரியாதவற்றை படிக்க வேண்டாம். நீங்கள் இவ்வளவு காலம் படித்ததைக் கொண்டு, அதிவிசேடசித்தி, சாதாரண சித்தி பெறலாம். மறுநாள் பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு போக வேண்டியவற்றை தயார்ப்படுத்துங்கள். பரீட்சை நேர அட்டவணை, திகதி என்பவற்றை எழுதி, சுவரில் ஒட்டி அவ்வப்போது ஞாபகப்படுத்துங்கள். ஓய்வாக உள்ளபோது உங்களது சீருடைகளை நீங்களாக "ஸ்திரி" பண்ணி வைத்துக்கொள்ளுங்கள். அடையாள அட்டை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு செல்லக் கூடிய பேனை, பென்சில், அழி இறப்பர் "கொம்பாஸ்", மணிக்கூடு, தண்ணீர் போத்தல் என்பவற்றை ஆயத்தப்படுத்துங்கள். அப்பாவின் மூலம் சைக்கிள் சரிபார்க்கப்பட்டு நல்ல டயர், டியூப் உடன் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இரவு நேர நித்திரைக்கு நேரத்திற்கு சென்று அமைதியாக எழுந்து குல தெய்வத்தை பிரார்த்தித்து கொள்ளுங்கள். காலையில் கட்டாயம் இலகுவில் ஜீரணிக்கக்கூடிய உணவை உண்ணுங்கள். அடிக்கடி சிறுநீர் கழிக்கும் அவசரம் வரும், நன்றாக பொறுமையாக கழிவறையில் சலப்பை வெறுமையடையும் வரை இருங்கள். நேரத்திற்கு பாடசாலை செல்லுங்கள்,

போகும் வழியில் உங்கள் குலதெய்வ கோவிலை வழிபடுதல் உங்களிற்கு நம்பிக்கையளிக்கும். நேராக பரீட்சை மண்டபத்திற்கு சென்று பரீட்சை ஆரம்பிக்கும் வரை உங்களிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்து சுவாசப் பயிற்சி, மந்திர உச்சாடனம், தேவாரம் இவற்றை செய்து பார்க்கலாம். பரீட்சைத்தாள் கிடைத்தவுடன் கடவுளுக்கு நன்றிகூறி. முதல் சில நிமிடங்களை வினாக்களை அவதானியுங்கள்.

எழுதும் தாள் நேரத்திற்கு கிடைத்தால் தாளின் இருபகுதியிலும் சுட்டெண் இலக்கம் இட மறக்க வேண்டாம். தெரிந்த கேள்விக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் விடையளித்து பரீட்சை முடிய 10 – 15 நிமிடங்களுக்கு முதலே முற்றாக விடையளிங்கள். மிகுதி நேரத்தில் மீள ஒரு தடைவை எழுதியவற்றை வாசியுங்கள்.

வீடு திரும்பி உணவிற்கு பின் நல்ல தூக்கம் போட்டு மறுநாள் பரீட்சைக்கான தயார்ப்படுத்தலை செய்யலாம்.

### பயனுடைய பொழுதுபோக்குகள்:-

ஒரு நாளில் குறைந்தது இரண்டு மணி நேரங்களையாவது காலை, மாலை ஆகிய நேரங்களில் பயனுடைய பொழுதுபோக்களிற்கு, விளையாட்டுகளுக்கு ஒதுக்குவது நன்று. அத்துடன் வார இறுதி, பாடசாலை விடுகை, வருட இறுதியில் திட்டமிட்ட பொழுதுபோக்கு, சுற்றுலா போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். மாலையில் குறைந்தது ஒரு மணி நேரமாவது குழுவிளையாட்டுகளில் ஈடுபடுவது மிகப் பொறுத்தமானது. கல்லூரி, பாடசாலைகளில் உள்ள உதைப்பந்து, கிரிக்கெட், வளைப்பந்து, கூடைப்பந்து, ரகர் அணிகளில் இணைந்து விளையாடுவது மிகப் பயனுடையது. விளையாட்டுச் செயற்பாடுகளால் உடலில் சுரக்கப்படுகின்ற "என்ரோபின்" எனும் ஓமோன் மனிதனை எப்போதும் சுறுசுறுப்பாக, உற்சாகமாக, கலகலப்புடன், புத்திக் கூர்மையுடன் வைத்திருப்பதை விளையாட்டு வீரர்களில் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆராட்சிகள் கூறுகின்றன. காலையில் அரைமணி நேரமாவது யோகாசனத்தில் உடல் வலிதாக்கலுடன் தொடர்புற்ற ஆசனங்களையும்; மனவலிதாக்கங்களுடன் தொடர்புற்ற தியானம், மூச்சுப்பயிற்சி, மந்திர உச்சாடனம் தசைத்தளர்வ என்பவற்றை செய்வது பொறுத்துமானது. அத்துடன்



வீட்டுத் தோட்டம், பூங்கன்று பராமரிப்பு, செல்லப்பிராணிகளை வளர்ப்பது, மீன் வளர்ப்பு, பொறுத்தமான படங்களை பார்ப்பது, கதைப்புத்தகம் வாசிப்பு, இணையத்தில் பயனுடைய விடயங்களை பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களை செய்யலாம்.

### படிக்கையறை உடற்பயிற்சிகள்:-

யோகாசனம், "ஸ்ரெச்சிங் (தசைகட்டுமான), தோப்புக்கரணம், துள்ளுதல் "புசப்", கயிறு அடித்தல் என்பவற்றிற்கு மிகக் குறுகிய இடமே போதுமானது. பரீட்சைக்கு காலம் குறுகும் போது வீட்டிலேயே இவற்றை செய்வதை வழக்கமாக கொள்ளவேண்டும். அவ்வப்போது உடல், உளச் சோர்வு ஏற்படும் போது, அதிகம் "டென்சன்" ஏற்படும் போது இவற்றை செய்வது, இழந்த சக்தியை புதுப்பிப்பதாக அமையும், பரீட்சை கால நெருத்கீடு விளைவுகளை கையாள்வதற்கான தனிநபர் செயற்பாடாகவும் அமையும்.

### யோகாசனம்

பன்னிரண்டு படிநிலைகளைக் கொண்ட "சூரிய நமஸ்காரத்தில்" நிற்றல், குப்புறப்படுத்தல், வளைதல், நீட்டுதல் உட்பட பயனுடைய பல பயிற்சிகள் உண்டு. காலை மாலை ஒரு தடவையில் மூன்று முறையாவது செய்வது பொருத்தமானது. பொருத்தமான யோகாசன ஆசிரியர் இல்லாத போது "யூடியுப்பில்" அவதானித்து பழகலாம்.

### சாந்த வழிமுறைகள்

சாந்த வழிமுறைகளைக் கையாளுவதனூடாக பயம்,அந்தரம், மனக்கொந்தளிப்பு, என்பவற்றை கட்டுப்படுத்தி மனதை அமைதிப்படுத்தலாம். இவற்றை முன்னரே கற்று நாளாந்தம் செய்து வருவது மிகப் பயனுடையது. எமக்கு உதவக்கூடிய இத்தகைய வழிமுறைகளில், நான்கு விதமான பயிற்சி முறைகள் இருக்கின்றன.

### சுவாசப் பயிற்சி (பிராணாயாமம்)

மன அமைதியற்ற நிலையில் சுவாசமானது ஒழுங்கற்றதாகவும், ஆழமற்றதாகவும் காணப்படும். இதனால் உடல் ரீதியாகப் பல மாற்றங்கள் ஏற்படும். சுவாசத்தை ஒழுங்காகவும், ஆழமாகவும் நெறிப்படுத்துவதனால் மேற்குறிப்பிட்ட உடல், உளமாற்றங்களை எதிர்த்து மனச்சாந்தியை உண்டாக்கலாம்.

### சாந்தியாசனம்

நெருக்கீடு நிலைகளில் தசைகளின் இறுக்கம் தொடர்ந்து இருப்பதனால், உடல் ரீதியாகச் சில அறிகுறிகள் தோன்றலாம். (உதாரணமாக தலையிடி, கபாலக்குத்து, பிடரி நோ, கழுத்துப் பிடிப்பு, களைப்பு) மேலும் உளரீதியாகப் பயம், பதற்றம், அந்தரம், திடுக்கிடுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம். இவ்வாறான உள, உடல் மாற்றங்களிலிருந்து விடுபகும்படிப்படியாகத் தசைகளைத் தளரச் செய்யும் பயிற்சி அமைதியினை உருவாக்கும். சாந்தியாசனம் நித்திரை கொள்வதற்கு நல்ல முறையாகும்.

### தியானம்

தியானிப்பதற்கு ஒரு பொருளைத் (குறி) தேர்ந்தெடுப்பது முக்கியம். தியானிக்கும்போது மனதை ஒருமுகப்படுத்தி தேர்ந்தெடுத்த பொருளில் தொடர்ச்சியாகச் கவனம் செலுத்த உதவும். அல்லது கண்கனை முடி சுவாத்தை(உள்,வெளி) அவதானித்து நூறு வரை எண்ணலாம்.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

தொடர்ச்சி...



## மலைகளைப் பேசவிடுங்கள்

- களனியாக்குவதில்) இந்த மலையக மக்களின் பங்கு அளப்பரியது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பண்ணை பயிர்ச்செய்கையில் (மரக்கறி செய்கை) இவர்களது உழைப்பு பயன்படுத்தப்பட்டது. இன்றுவரை இவர்கள் 'வன்னியில் வாழும் மலையக மக்களாக' உள்ளனர். சிங்கள இனவாதத்திடம் இருந்து தப்பித்துக் கொள்ளவும், இந்தியாவுக்கு திரும்பி செல்வதை தவிர்த்துக் கொள்ளவும் இந்த மலையக மக்கள் கைகொண்ட "வன்னிக்கான புலப்பெயர்வு" பின்னாளில் "உழைப்புச் சுரண்டல்" "சாதிய மேலாண்மை" "பாரிய உள்நாட்டு யுத்தம்" எனும் இன்னல்களுக்குள் அவர்களைத் தூக்கிப் போட்டது. (இது குறித்து தனியானதும் விரிவானதும் பார்வை அவசியம்)

6. இலங்கையின் வடக்கு கிழக்கில் நடந்த யுத்தம் புலப்பெயர்வு (diaspora) எனும் நிலைமாற்றத்தை (transformation) தோற்றுவித்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பிய மேற்குலக நாடுகளுக்கு புலப்பெயர்வை மேற்கொண்டு, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலியா எனவிரிந்த இவர்களது புலப்பெயர்வு, இலங்கை நாட்டுக்கு உள்ளேயும் நடந்தது. அதில் ஒன்று 'கொழும்பு நோக்கிய புலப்பெயர்வு' இன்னொன்று 'மலையகம் நோக்கிய புலப்பெயர்வு'. இதில் கொழும்பு நோக்கிய புலப்பெயர்வு என்பது ஒரு இடைத்தங்கல் போன்றது. வெளிநாட்டுக்கு புலம்பெயர்ந்து செல்லவந்த நிலையில் தற்காலிகமாக கொழும்பில் தங்கி/தரித்துச்செல்வது. வெள்ளவத்தை இதன் பிரதான இடமாகவும் தெஹிவளை, கல்கிசை, கொட்டாஞ்சேனை, வத்தளை போன்ற உப இடங்களாகவும் மாறின.

அதேநேரம் சிறுக, சிறுக மலையகம் நோக்கிய அவர்களது நகர்வானது மத்திய மலைநாட்டின் நகர் பிரதேசங்களை அண்டியவொரு புலப்பெயர்வை இலங்கைத் தமிழருக்கு வழங்கியது. மலையகம் விரும்பியோ விரும்பாமலோ மனிதாபிமான ரீதியில் இந்தப் புலப்பெயர்வை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டு புலப்பெயர்வை மெச்சுகிற அளவுக்கு, கொழும்பு நோக்கிய புலப்பெயர்வை போற்றுகிற அளவுக்கு "மலையகம் நோக்கிய இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்வு" விரிவான பார்வைக்கும், பெறுமதிக்கும் உள்ளாகவில்லை.

(தொடரும்)

## நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 05

தொடர்ச்சி...

### பிரேமதாஸாவுக்கு மகாத்மா காந்தியின் கொழும்பு சொற்பொழிவைத் தேடித்தந்த நவசோதி!

சந்தித்து ஜிந்துப்பிட்டியின் புராதனம் - மகிமை பற்றி நீண்ட விளக்கம் தந்தார். அவர் சாதாரணமாகப் பேசினாலும் அதில் கம்பீரம் துலங்கும்.
திராவிட கழக பாரம்பரியத்தின் பாதிப்பில் கலை இலக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். எழுதியவர். பேசியவர்.
" பேச்சோடு நின்று விடாமல் ஜிந்துப்பிட்டியின் புராதனத்தை எழுதி வெளியிடுங்கள். அப்படியொரு நூலுக்கு நல்ல வரவேற்பு கிட்டும்." என்றேன்.
அதன்பின்னர் அதற்கான முயற்சிகளில் இறங்கினார். ஜிந்துப்பிட்டியில் வாழ்ந்த முதியவர்கள், மூதாட்டிகளையெல்லாம் சந்தித்து தகவல்களைத் திரட்டினார்.

1983 இல் வன்செயல் தலைதூக்கியதையடுத்து மேற்கொண்ட ஆராய்ச்சியை முடிக்க வழியற்று அந்நியம் புறப்பட்டார்.

மொழி உணர்வும் அறிவும் இலக்கியப் பிரக்ஞையும் மிக்க படைப்பாளி, தான் எங்கு வாழ நேரிட்டாலும் தனது பணியை இடை நிறுத்தமாட்டான். அத்தகைய மனிதனுக்கு உள்ளார்ந்த இலக்கிய ஆற்றல் வற்றிப் போகாது என்பதற்கு நவசோதியும் ஒரு உதாரணம்.

1983 அமளியுடன் இலங்கையின் வரலாறு திசை திரும்ப, நவசோதியும் திசைதிரும்பி அவுஸ்திரேலியா வந்து சில காலத்தில் லண்டன் சென்று தமது பணி தொடர்ந்தார்.

லண்டனில் கிறின்ஃபார்டில் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் – அனைத்துலகத் தமிழர் கல்வி பண்பாட்டுப் பாரம்பரியப் பேரவையின் பணிப்பாளர் – சிந்து இலக்கிய இதழின் ஆசிரியர்.

இவ்வாறு பணிகளைத் தொடர்ந்த நவசோதி 04.01.1990 ஆம் திகதி லண்டனில் ஒரு வாகன விபத்தில் இறந்தார்.

கொழும்பிலும் அவர் முன்பொருசமயம் விபத்துக்குள்ளாகி கைமுறிந்த நிலையில் சிறிதுகாலம் கட்டுப்போட்டுக்கொண்டு நிகழ்ச்சிகளுக்கு வருவார். என்னை எங்கே கண்டாலும் ஓடிவந்து உரையாடும் இயல்புதான் என்னை அவரிடம் நெருங்கிச் செல்லவைத்தது.

இலங்கை வானொலியில் பணியாற்றிய படைப்பாளி அங்கையன் கைலாசநாதன் கொழும்பில் வாகன விபத்தில் கொல்லப்பட்டு இரண்டு நாட்களாக அவரது உடல் அடையாளம் காண்பதற்காக மருத்துவமனை சவஅறையில் இருந்தது. இதுபற்றிய செய்தியை வீரகேசரியில் எழுதியபோதும் இறந்தவர் யார் ? என்பது தெரியாமல்தான் இருந்தோம். வெளியே சென்ற அங்கையன் இரண்டு நாட்களாக வீடு திரும்பாததையடுத்து அவரது மனைவிதான் மருத்துவமனை சவ அறைக்குச் சென்று கணவரை அடையாளம் காண்பித்தார்.

அங்கையன் கைலாசநாதனின் மறைவின் பின்னர் 31 ஆம் நாளன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அவரது மனைவி இரங்கல் கூட்டமும் அங்கையனின் கவிதை நூல் வெளியீட்டையும் நடத்தினார்.
அன்றையதினம் நண்பர் நவசோதி கையில் கட்டுப்போட்டுக்கொண்டு வந்துதான் இரங்கலுரையாற்றினார். அப்பொழுது அவரும் ஒரு விபத்தை சந்தித்திருந்தார்!

"தெருவைக்கடக்கும்பொழுது அவதானம் தேவை" என்றார்.
லண்டனில் நவசோதியும் அந்த அவதானத்தை இழந்துவிட்டார். நவசோதியின் திடீர் மறைவுச்செய்தியை மெல்பனில் வசிக்கும் அவரது சகோதரர் கனகேஸ்வரன் மூலம் அறிந்தவுடன் கொழும்புக்கு சகோதரி கமலினி செல்வராசன் மூலம் தகவல் அனுப்பினேன்.
நண்பரின் மறைவை கொழும்பு பத்திரிகைகள் வானொலி மூலம் அறிவிக்க கமலினி உதவியதை இப்பொழுதும் நன்றியுடன் நினைக்கின்றேன்.

நண்பர் நவசோதி, கமலினி செல்வராசன், சில்லையூர் செல்வராசன் உட்பட பலர் இன்றில்லை. அவர்களின் நினைவுகளுடன் எழுதிக்கொண்டிருக்கின்றேன்.

களனி கங்கையும் ஓடிக்கொண்டே இருக்கிறது. முகத்துவாரத்தில் கடலில் சங்கமிக்கிறது. நண்பர் நவசோதி எழுதவிருந்த ஜிந்துப்பிட்டியின் சரித்திரம் வெளிவரவேயில்லை என்பது தீராத சோகம்!

(தொடரும்)

தொடர்ச்சி...

## பார்த்த ஞாபகம் இல்லையோ?
## உங்கள் தாயிடம் கேட்டுப் பாருங்கள்

அது பச்சை மற்றும் பொன் நிறப் பேணியில் ஒரு சிங்கத்தின் இறந்த உடலைச்சுற்றி திரளான தேனீக்கள் வட்டமிடும் படமும் மற்றும் ஏபிராம் லைல் ஒரு ஆழமான மத நம்பிக்கையாளர் என்பதால்"இனிப்பில் இருந்துதான் முதலில் பலம் வெளிவருகிறது" என்கிற வேதாகம குறிப்பு அடங்கிய வார்த்தைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. லைல் கோல்டன் சிரப் ஒரு ஆடம்பர உணவுப் பொருள். தீவின் ஏனைய பாகங்களைவிட, கொழும்பில்தான் பெருமளவில் கிடைக்கும், இருந்தபோதிலும் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களால் அதிகம் விரும்பப்பட்ட ஒரு பொருளாகும். இது கொழும்பிலும் இப்போது கிடைப்பதில்லை.

வீனஸ் பென்சில்



(வீனஸ் பென்சில்களின் விற்பனை அடையாளம்)
பச்சை நிறத்தில் உடைந்த கோடுகளைக் கொண்ட பாணியிலான வீனஸ் பென்சில்களை, பல்வேறு வகையான மற்றைய பென்சில்கள் சந்தைக்கு வரும் வரையில் 70 கள் மற்றும் 80 கள் முழுவதும் ஸ்ரீலங்கா வகுப்பறைகளில் காணக்கூடியதாக இருந்தது. அமெரிக்காவின் முன்னணி பென்சில் தயாரிப்பு நிறுவனமான அமெரிக்கன் லெட் பென்சில் நிறுவனத்தால் 1905ல் முதலில் உற்பத்திசெய்யப்பட்டது. இதில் அதி மிருது, மிருது, நடுத்தரம், கடினம் மற்றும் அதிகடினம் ஆகிய வகைகள் உள்ளன. அது பளபளப்பான கடின வெளிப்பக்கத்தை கொண்டது அதன் அடிப்பக்கம் அழிப்பான் பொருத்தப்பட்டிருக்காது. அந்த நேரத்தில் சிலோன் பென்சில் நிறுவனம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் (1959) உற்பத்தி செய்யப்படும் இலங்கைத் தரத்திலான பென்சில்கள் வீனஸ் பென்சில்கள் ஆதிக்கம் செய்வதை அனுமதித்து சந்தையைக் கைப்பற்றுவதற்கு சிறிது காலம் எடுத்தது. 1973ல் அமெரிக்கன் லெட் பென்சில் நிறுவனம் பெபர் காசல் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டது. அத்துடன் அந்த நிறுவனத்தின் உற்பத்திகள் இப்போதும் ஸ்ரீலங்காவில் விற்பனையாகின்றன.

நன்றி : தேனீ - மொழிபெயர்ப்பு எஸ்.குமார்

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

தொடர்ச்சி...

### அயர்ச்சியின்றி இயங்கும் இலக்கியப் பேராசிரியர் செல்லையா யோகராசா

அக்கறைகொண்டிருப்பவர். இலக்கியமும் கல்வியும்தான் இவரது கண்கள். அதனால் இலக்கியவாதிகளும் மாணவரும் பெற்ற நன்மைகள் ஏராளம்.

உடுப்பிட்டி கல்வி வலயத்தின் சிறந்த ஆசிரியருக்கான விருது, கலாநிதிப்பட்ட ஆய்விற்காக பேராசிரியர்
சு. வித்தியானந்தன் ஞாபகார்த்த விருது, இலங்கை இலக்கியப்பேரவையின் விருது, தேசிய சாகித்திய விருது, வடமாகாண சபை விருது, கலை வாருதி விருது உட்பட பல விருதுகளையும் பெற்றிருக்கும் எமது இனிய நண்பர் யோகராசா, தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலண்டன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் முதலான நாடுகளிலும் பல இலக்கியக்கருத்தரங்குகளில் பங்குபற்றியிருப்பவர்.

எழுத்துலகில் தொடக்கத்தில் கவிதைகளும் சிறுகதைகளும் படைத்திருக்கும் இவர், பின்னர் விமர்சகராகவும் திறனாய்வாளராகவுமே பரவலாக அறியப்பட்டவர். இவரது அகதிகள் என்னும் சிறுகதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
கடந்த 2016 ஆம் ஆண்டில் இவருடைய வாழ்வையும் பணிகளையும் பாராட்டி மட்டக்களப்பில் பெருவிழா எடுத்தனர். அத்தருணம் வெளியிடப்பட்ட, கருணையோகம் சிறப்புமலரில் பல இலக்கிய ஆளுமைகளும் பேராசிரியர்களும் இவரது சிறப்பியல்புகளையும், இலக்கிய மற்றும் கல்விக்கான பங்களிப்புகள் குறித்தும் விரிவாக பதிவுசெய்துள்ளனர்.

அந்த மலர் ஆவணமாகவே திகழுகின்றது. பேராசிரியர் யோகராசா இன்றும் ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரையாற்றிக்கொண்டும் இலக்கியத்திறனாய்வு செய்து கொண்டுமிருக்கிறார்.

இவருடை நீண்ட பயணத்தில் நானும் ஒரு பார்வையாளனாக இணைந்திருப்பதில் மன நிறைவடைகின்றேன்.

(தொடரும்)



## மாணவர்களின் அசாத்தியமான சாதனை



மாணவர்கள் இணைந்து நடாத்திய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின்போது சுமார் 4000 கொள்கலன்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன.

இந்த அசாத்தியமான செயற்பாடு ஏறாவூர்ப்பற்று 2 இன்கீழுள்ள செங்கலடி சுகாதாரப்பிரிவில் இடம்பெற்றுள்ளது. பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இத்திட்டத்தில் வந்தாறுமூலை மகாவித்தியாலயம் உள்ளிட்ட பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.



அவர்கள் வெற்றுக்கொள்கலன்களை சேகரிக்கும்போதே தரம்பிரித்து வகைவகையாகச் சேகரித்து குவித்துள்ளனர்.

மாணவர்களின் இச்செயற்பாட்டிற்கு ஆசிரியர்கள் சுகாதாரப்பிரிவினர் பாராட்டியுள்ளனர்.

(காரைதீவு நிருபர் சகா)

## திருகோணமலை சாரணர் ஒன்றுகூடல்



திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கம் நடத்திய 2018ம் வருடத்துக்கான ஒன்றுகூடல் வெள்ளிக்கிழமை 2018.6.08 தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை 2018.6.10 வரை மூன்று தினங்கள் மூதூர் சேனையூர் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. 15 பாடசாலைகளைச் சேர்ந்த 19 சாரணர் குழுக்கள் இதில் பங்கு கொண்டன. ஆண்கள் பிரிவில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியும் சிறந்த சாரணர் குழுக்களாக தெரிவு செய்யப்பட்டன. கிழக்கு மாகாண முந்நாள் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி குழுக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை 2018.06.10 வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

(கதிரவன் திருகோணமலை)

## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை யூலை4 முதல் 24வரை திறந்திருக்கும்!

'கதிர்காம ஆடித் திருவிழாவுக்கான யாத்திரிகர்கள் செல்லும் காட்டுப்பாதை எதிர்வரும் யூலை மாதம் 4ஆம் திகதி திறக்கப்பட்டு, யூலை 24ஆம் திகதி மூடப்படும்.'

இவ்வாறு அம்பாறைமாவட்ட அரசாங்க அதிபர் துசித பி வணிகசிங்க தலைமையிலான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் தொடர்பிலான முன்னோடிக் கூட்டம் நேற்று(12) செவ்வாய்க்கிழமை பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் யூலை மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகி 28ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

மேற்படிகூட்டத்தில் அம்பாறை அரச அதிபர் துசித பிவணிகசிங்க மொனராகல மாவட்ட மேலதிக அரசஅதிபர் பி.சோமரத்ன, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.விமலநாதன், பிரதேச செயலாளர்களான சிவ.ஜெகராஜன்(திருக்கோவில்), வி.ஜெகதீசன்(ஆலையடிவேம்பு), எம்.முசர்ரப் (பொத்துவில்),
கே.நவநீதன்(லாகுகலை பதில்),



கிழக்குமாகாண சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தம், ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள், ஆலயத் தலைவர் சுதுநிலமே, செயலாளர் கு.பஞ்சாட்சரம், பொலிஸ் அத்தியட்சகர் சமன், பொத்துவில் உதவிபொலிஸ் அத்தியட்சகர் வெலிசற மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட முக்கிய பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

காட்டுப்பாதையில் பயணிப்போர் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்யவேண்டும். அன்னதானம் வழங்குவோர் பார்சலில் வழங்கமுடியாது. மாறாக ஆலய அனுமதியுடன் பீங்கானில் வழங்கவேண்டும் என்றும் அங்கு அறிவிக்கப்பட்டது.

ஆலயத்திற்கு வரும் அடியார்ாகள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக 31 தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்படவேண்டும். இராணுவம் விசேடஅதிரடிப்படை இதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. திருக்கோவில் ஆலையடிவேம்பு மற்றும் லாகுகல பிரதேசசபைகள் தண்ணீர்பவுசர்களை வழங்கும். அம்பாறைக்கச்சேரியும் ஒரு வவுசரை வழங்கும்.

(காரைதீவு நிருபர் சகா)

## 15 வருடங்களின்பின் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிசேகம்!

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் 2000 வருடங்கள் பழைமை வாய்ந்த திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் மஹாகும்பாபிசேகம் எதிர்வரும் 25.06.2018இல் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.35மணி முதல் 10.25மணி வரையான சுபவேளையில் கும்பாபிசேக பிரதமகுரு சிவாகமவித்தியாபூசணம் விபுலமணி சிவஸ்ரீ. சண்முகமகேஸ்வரக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிசேக குடமுழுக்குப் பெரும்சாந்தி பெருவிழா நடைபெற உள்ளது.

கடந்த 2015இன் கடைக்கூற்றில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. 15 வருடங்களுக்குப் பிறகு எதிர்வரும் 25ஆம் திகதி மகாகும்பாபிசேகம் நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலே முதன்முதலாக 17 குண்டங்களைக் கொண்டு மகாகும்பாபிசேகமொன்று நடைபெறவிருப்பது இதுவே முதற்தடவையாகும் என ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சண்முக மகேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார்.

ஆலயநிருவாகம் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. சண்முக மகேஸ்வரக்குருக்களின் ஆலோசனையில் மகா கும்பாபிசேகம் செய்ய திருவருள் கூடியுள்ளது

என ஆலய பரிபாலனசபையின் தலைவர் சு.சுரேஸ் செயலாளர் எ.செல்வராஜா ஆகியோர் தெரிவித்தனர்.

கும்பாபிசேகத்திற்கான யந்திரபூசைகள் யாவும் மே 5இல் கோலாகலமாக ஆரம்பமாகியது.

தொடர்ந்து எதிர்வரும் 18இல் கர்மாரம்பத்துடன் கிரியைகள் ஆரம்பமாகும். 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதிவரை காலை 8 மணிமுதல் கும்பாபிசேகத்திற்கான முன்னோடிக்கிரியைகள் நடைபெறும்

23ஆம் திகதி காலை 7மணி முதல் 24ஆம் திகதி மாலை 5மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

23ஆம் 24ஆம் 25ஆம் திகதிகளில் அன்னதானம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கும்பாபிசேகசெயற்குழுத்தலைவர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

கிழக்குமாகாணஉதவி நீர்ப்பாசனப பணிப்பாளர் எந்திரி. வி. இராஜகோபால சிங்கம் தலைமையிலான குழுவினரின் ஆலோசனையின்பேரில் புனருத்தாரண வேலையை முன்னெடுக்க 27பேர் கொண்ட திருப்பணிச்சபையொன்று சி.சதீஸ்குமார் தலைமையில் திருக்கோவில் பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜனைக் காப்பாளராகக்கொண்டு அமைக்கப்பட்டு தற்போது ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

(காரைதீவு நிருபர் சகா)

### வட கிழக்கு இணைப்புக்கு எதிரானதல்ல, பொதுச்சின்னத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவே அழைப்பு - கிழக்கு தமிழர் ஒன்றியம்

நடைபெறப்போகும் மாகாணசபைத் தேர்தல் மூலம் கிழக்கில் 38 ஆசனங்களே கிடைக்கும். இதில் குறைந்தது 20 ஆசனங்களைப் பெறும் கட்சியே ஆட்சியமைக்கும். தனித்துக்கட்சிகள் போட்டியிட்டால் எதுவும் ஆட்சியமைக்க முடியாது. இதனாலேயே சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் ஒற்றுமைப்படுமாறு கேட்கிறோம். கிழக்கு தமிழர்கள் சிந்தித்து முடிவெடுக்காவிட்டால் கிழக்குமாகாண தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்றார்.

## குரங்குகளை விரட்ட நடவடிக்கை தேவை



சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அண்மைக்காலமாக அங்கு வரும் குரங்குகளால் தடை ஏற்படுகின்றது.

பாடசாலை நேரத்தில் குரங்குகள் கூரைமீதேறி அங்கும் இங்கும் ஓடுகின்றன. அந்தச்சத்தம் கற்றலுக்குத் தடை போடுகின்றது.
குரங்குகள் குட்டிகளுடன் வேகமாக பாய்ந்து ஓடுகின்றபோது கூரை ஓடுகள் உடைகின்றன. கூரைக்கு சேதமேற்பட்டுவருகின்றது.

அநேகமான குரங்குகள் குட்டிகளுடன்தான் நடமாடுகின்றன. அவற்றின் பாதுகாப்புக்காக மனிதர்களைக்கூடத் தீண்டத்தயங்குவதில்லை.

எனவே இந்தக் குரங்குகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## யாழ் குழுவின் கதிர்காம யாத்திரை



கதிர்காமம் பாதயாத்திரை மேற்கொண்டு யாழப்பாணம் செல்வசந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட வேல்சாமி தலைமையிலான குழுவினர் திருகோணமலை கிண்ணியா ஊடாக மட்டக்களப்பு நோக்கி சென்றனர். கிண்ணியா பாலம் ஊடாக குழவினர் சனிக்கிழமை செல்வதை படத்தில் காணலாம்.

(கதிரவன் திருகோணமலை)



# அன்னை ஸ்ரீபேச்சியம்மன் ஆலயம்

## புலயவெளி பதுளை வீதி மட்டக்களப்பு

### பூசைகள் விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 11/06/2018 | - திங்கள் | - தினப்பூசை | உபயம் சி. ஜேசுதாஸன் |
| 12/06/2018 | - செவ்வாய் | - தினப்பூசை | உபயம் தி. சசிதரன் |
| 13/06/2018 | - புதன் | - தினப்பூசை | உபயம் செ. கமலேஸ்வரன் |
| 14/06/2018 | - வியாழன் | - தினப்பூசை | உபயம் தி. தவச்செல்வம் |
| 15/06/2018 | - வெள்ளி | - வெள்ளிக்கிழமை | உபயம் ரா. ரவிச்சந்திரன் |
| 16/06/2018 | - சனி | - தினப்பூசை | உபயம் ர. குகதாஸன் |
| 17/06/2018 | - ஞாயிறு | - தினப்பூசை | உபயம் ஈ. ரகு |
| 18/06/2018 | - திங்கள் | - தினப்பூசை | உபயம வே. கிஷோக்குமார் |
| 19/06/2018 | - செவ்வாய் | - தினப்பூசை | உபயம் த. ஜெகநாதன் |
| 20/06/2018 | - புதன் | - தினப்பூசை | உபயம் செ. செல்வேந்திரன் |
| 21/06/2018 | - வியாழன் | - தினப்பூசை | உபயம் தி. தேவதாஸ் |
| 22/06/2018 | - வெள்ளி | - வெள்ளிக்கிழமை | உபயம் வீ. விநோதன் |
| 23/06/2018 | - சனி | - தினப்பூசை | உபயம் செ. டிசாந்தன் |
| 24/06/2018 | - ஞாயிறு | - தினப்பூசை | உபயம் ஈ. வினோ |
| 25/06/2018 | - திங்கள் | - தினப்பூசை | உபயம் சி. அஜந்தன் |
| 26/06/2018 | - செவ்வாய் | - தினப்பூசை | உபயம் ம. ரவிச்சந்திரன் |
| 27/06/2018 | - புதன் | - பூரணைப் பூசை | உபயம் லோகநாதன் |
| 28/06/2018 | - வியாழன் | - தினப்பூசை | உபயம் தி. இலங்கேஸ்வரன் |
| 29/06/2018 | - வெள்ளி | - வெள்ளிக்கிழமை | உபயம் தே. தேவகுமார் |
| 30/06/2018 | - சனி | - தினப்பூசை | உபயம் ம. மதுராஜ் |

**ஆலய பூசைகள் அனைத்தும் சிவஸ்ரீ ஜெயக்குமார் ஐயாவினால் நடாத்தப்படும்.**
**தொடர்புகளுக்கு : 0771516203**



தன்னுயிர் தந்து
கிராமத்துக்கு ஒளி ஏற்றிய
புலயவெளி
கிராமத்தின் தந்தை
டாக்டர். ராஜசிங்கம்
நரேந்திரன்

**மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக ஒரு புலம்பெயர் உறவுகளின் ஆலயத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டந்தான் புலயவெளி கிராமத்துக்கான அபிவிருத்தித் திட்டம்.**

**ஆலயம் ஒன்றைக் கட்டி அதன் ஊடாக போரினால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய விளைகின்றனர் லண்டன் ஈழபதிஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர்.**

**அதற்காக அவர்களால் முதன்முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமே மட்டக்களப்பின் புலயவெளி.**

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**